www.padippakam.com

Rkayakaran.


# தொழிலாளர் பாதை

விலை DM 2,-

நான்காம்—அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம்
கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 41 ★ ஆகஸ்ட், 1991 ★


**தொழிலாளர் பாதை** பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்— இலங்கை— இதழ் 408. ஜூலை 12,1991., இதழ் 409. ஆகஸ்ட் 12,1991., இதழ் 410. செப்டம்பர். 9, 1991. இதழ் 407. ஜூன் 21, 1991.

சோசலிசத் தொழிலாளர் கழகம்— இந்தியா— இதழ் 40, ஜூலை, 1991., இதழ் 41, ஆகஸ்ட், 1991.

தொகுப்புப் பிரதி இல. 1 ஒக்டோபர், 1991.

# ஆகஸ்டு சதியின் படிப்பினைகளும் சோவியத் தொழிலாள வர்க்கத்தின்முன் உள்ள பணிகளும்

ஆகஸ்ட் 19ல் மாஸ்கோவில் ஸ்டாலினிச சதியின் அவமானகரமான வீழ்ச்சியை நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழு வரவேற்கிறது, 61 மணி நேரத்துக்குள்ளேயே இராணுவ ஆதரவுடன் நடைபெற்ற சதி ஒரு மானக் கேடான குவியலில் வீழ்ந்தது. அக்டோபர் புரட்சியின் குழிபறிப்பாளனை ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு ஏற்பட்ட தோல்வியிலிருந்து அது மீள முடியாது.

ஆனால் சதிகாரர்களின் (ஆட்சிக் கவிழ்ப்பு சதியில் ஈடுபட்டோர்) தோல்வி பற்றி சோவியத்யூனியனிலும சர்வதேசரீதியாகவும் தொழிலாளர்கள்அடைந்த நியாயமான திருப்தியானது, இப்போது மாஸ்கோவில் மத்திய அரங்கிற்கு வந்திருப்பவர்கள் கடுமையான சோசலிச விரோதிகள், குரூரமாக முதலாளித்துவ மீட்சிக்கு வக்காலத்து வாங்குபவர்கள் என்ற உண்மையை கண்டுகொள்ள முடியாதவாறு குருடாக்கி விடக்கூடாது,

இராணுவ—கே ஜி பி சதிக்கு சோசலிச தொழிலாள வர்க்கத்தின் விடாப்பிடியான எதிர்ப்பு, ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் நோக்கங்களிலிருந்தும் சோவியத் யூனியனுக்குள் அவர்களது அரசியல். பொருளாதார ஏஜண்டுகளிலிருந்தும் அதன் முழுமையான சுதந்திரத்தை பேணிக் கொள்ள வேண்டும். அதிகாரத்துக்கான போராட்டத்தை ''கம்யூனிச'' சக்திகளுக்கும் ''சுதந்திர'' சக்திகளுக்கும் இடையிலான மோதலாக பத்திரிகை பிரச்சாரங்கள் காட்டுகின்றன. இதனால் தொழிலாளர்கள் தவறாக வழிநடத்தப்படாது இருக்க வேண்டும் என்று சோவியத்யூனியன் உள்பட உலக முழுவதும் உள்ள தொழிலாளர்களை அனைத்துலக குழு எச்சரிக்கின்றது. சதியை நடத்திய ஸ்டாலினிச குண்டர்கள் மார்க்சிசம், சோசலிசத்தை பிரதிநிதித்துவம் செய்யாதது போலவே யெல்ட்சின். கோர்பச்சேவின் அரசியல் கூட்டாளியான ஜார்ஜ் புஷ்சும் ஜனநாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

சோவியத் யூனியனில் ஜனநாயகத்தின் பாதுகாவலனாக தன்னைக் காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி புஷ். இரண்டு வருடங்களுக்கு முன்னர் தியானென்மன் சதுக்கத்தில் படுகொலைகளை நடத்திய பெய்ஜிங் ஸ்டாலினிஸ்டுகளுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கின்றார். அதுபோலவே அவர் மத்திய உளவு ஸ்தாபனத்தின் (சி ஐ ஏ) முன்னைய தலைவராக இருந்த பொழுது, உலக முழுவதும் இரத்தம் தோய்ந்த ஜுந்தா (இராணுவ) ஆட்சிகள் வருவதற்கு உதவி செய்தார் என்பதை பற்றி சொல்லவே தேவையில்லை.

சோவியத் யூனியனுக்குள் தீர்க்கமான வர்க்க போராட்டங்களின் புதிய கட்டம் தொடங்கி விட்டது என்பதையே சதியின் உடைவு குறிப்பிடுகிறது. சோவியத் மக்கள் இப்போது எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை: ஸ்டாலினிச ஆட்சியின் வீழ்ச்சி, புரட்சிகரமான சர்வதேசிய வேலைத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உண்மையான சோசலிசத்திற்கு வழி வகுக்குமா? அல்லது பல பத்தாண்டுகளாக ஸ்டாலினிசத்தின் பிற்போக்கு கொள்கைகள் தயார் செய்த முதலாளித்துவத்தை நோக்கிய பயங்கரமான வீழ்ச்சிக்கு வழிவகுக்குமா என்பது பற்றியதாகும்.

★ 2ம் பக்கம் பார்க்க

## ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிராக பேர்னினில் நடைபெறும் உலகத் தொழிலாளர் மகாநாட்டை கட்டியெழுப்பு!


நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை நவம்பர் 16.17ல் பேர்னினில் நடைபெறவிருக்கும் "ஏகாதிபத்திய யுத்தத்தையும், காலனித்துவத்தையும் எதிர்!" எனும் உலகத் தொழிலாளர் மகாநாட்டில் பங்கு கொள்ளுமாறு சகல தொழிலாளர் களுக்கும், இளைஞர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றது.

அனைத்துலகக்குழுவினால் இவ்வாண்டு மே மாதத்தில் வெளியிடப்பட்ட விஞ்ஞாபனத்துடன் மகாநாட்டை கட்டி எழுப்புவதற்கான போராட்டம் ஆரம்பமாகியுள்ளது. இவ் விஞ்ஞாபனம் தமிழ், சிங்களம், ஜேர்மன், ஆங்கிலம், அரபு, பேர்சியன், ருஷ்யன் போன்ற மொழிகளில் விநியோகிக்கப் பட்டு வருவதுடன், வேறு பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றது.

இவ் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டவாறு_ "நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலகத் தொழிலாள வர்க்கத்தின் மிகவும் வர்க்க நனவு கொண்ட பிரதிநிதிகளை எதிர்வரும் நவம்பரில் பேர்னினில் கூட்டவும், ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிரான அதன் தொழிலாளர் உலக மகாநாட்டில் பங்கு கொள்ளச் செய்யவும் கூட்டுவதன் மூலம் புரட்சிகரத்தலைமை நெருக்கடியைத் தீர்ப்பதில் ஒரு தீர்க்கமான பணியைத் தயார் செய்கின்றது. எமது இலக்கு நான்காம் அகிலத்தின் முழு வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில், உலகத் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்தினை உருவாக்கும் போராட்டம் அடிப்படையாகக் கொள்ள வேண்டிய கொள்கைகளை உறுதியாக நிலைநாட்டுவதேயாகும்."_

இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் உருவாக்கப்பட்ட சமநிலையின் பொறிவும், சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பாவில் ஸ்ராலினிசத்தின் வீழ்ச்சிகளும் நான்காம் அகிலத்தை பரந்த கட்சியாக கட்டி எழுப்ப முன்னெருபோதும் இல்லாத வரலாற்று வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. பேர்னினில் நடைபெறும் மகாநாடு இந்த இலக்கில் முக்கியத்துவம் பெறுகின்றது இம் மகாநாட்டை கட்டி எழுப்பும் இலக்கில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக்கிளை 1000 மகாநாட்டு விஞ்ஞாபனத்தை விநியோகிப்பதென்றும், மகாநாட்டு நிதியாக DM. 4000,- திரட்டுவதென்றும், இவ்வருட இறுதிக்குள் 300 தொழிலாளர் பாதைக்கான சந்தாதாரர்களை திரட்டுவதென்றும் முடிவு செய்துள்ளது.

இந்த இலக்கில் மகாநாட்டுக்கு முன் வரும் சகல அங்கத்தவர்கள், ஆதரவாளர்களை முன்னின்று போராடுமாறு பு.க.க. த்தின் வெளிநாட்டுக் கிளை வேண்டுகோள் விடுக்கின்றது.




**தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!**
**தமிழீழ அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தை முறியடி!**

படிப்பகம்

www.padippakam.com



# ஆகஸ்ட் சதியின் படிப்பினைகளும்.....

உண்மையான சோசலிசம் உயிர்த்தெழுவதற்கும் அக்டோபர் புரட்சிக்கு உற்சாகமூட்டிய மகத்தான மனிதாபிமான கோட்பாடுகள் புத்துயிர் பெறுவதற்கும் தேவையானது, எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் யூனியனுக்குள் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியாக ஒரு டிராட்ஸ்கிசக் கட்சியை கட்டுவதாகும்.

அப்படியான ஒரு தலைமை இல்லாமலும், தொழிலாள வர்க்கம் சுதந்திரமாக அணிதிரட்டப்படாமலும் இருக்குமாயின், ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி முதலாளித்துவ மீட்சிக்கு வழிவகுக்கும் ஆபத்தினைக் கொண்டிருக்கிறது என்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு வெளிப்படையாக எச்சரித்தது.

சோவியத் தொழிலாள வர்க்கம் கிழக்கு ஐரோப்பிய சம்பவங்களின் படிப்பினைகளை துணிகரமாக கற்றுக் கொள்ள வேண்டும். கிழக்கு ஜெர்மனியில் வெறுக்கத்தக்க ஹோனேக்கர், போலந்தில் ஜெருசலேஸ்கி மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் இதர ஸ்டாலினிச கொடுங்கோல் ஆட்சியாளர்களின் வீழ்ச்சியில் முடிவுற்ற போராட்டங்கள் முதலாளித்துவ அரசாங்கங்கள் வருவதற்கு வழி வகுத்தன. அவை தேசிய மயமாக்கப்பட்ட சொத்துக்களை அழிக்கின்றன, போலந்து பாணியிலான ''அதிர்ச்சி வைத்தியத்தை'' அமல்படுத்துகின்றன, வேறு விதமாக கூறினால் பெருமளவில் வேலையின்மை, சமூக சீரழிவு வறுமை போன்ற மிருகத்தனமான தொழிலாளவர்க்க விரோத கொள்கைகளை அமல்படுத்துகின்றன.

தொழிலாள வர்க்கத்திடமிருந்து எதிர்ப்பு அதிகரித்து வருகின்ற வேளையில்—கிழக்கு ஜெர்மனியில் ஆலை உள்ளிருப்புகள, போலந்தில் வேலை இடை நிறுத்தங்கள், பல்கேரியாவில் பொதுவேலை நிறுத்த இயக்கங்கள்—இந்த அனைத்து அரசாங்கங்களுமே அவற்றின் ''ஜனநாயக'' பாசாங்குகளை உதறி விட்டு தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக பிரமாண்டமான அரசு ஒடுக்குமுறைக்கு தயார் செய்கின்றன. இப்படியான அனைத்து ஏகாதிபத்திய சார்பு அரசாங்கங்களுக்குமாக முன்னைய 'சாலிடாரிட்டி' தலைவர் லேக் வலேசா கடந்த மாதம் பேசினார், அப்போது அவர் வேலை நிறுத்தங்களை உடைப்பதற்கு போலீசையும், படைகளையும் பயன்படுத்தப் போகும் தனது எண்ணத்தை தெரிவித்தார்.

சதி முயற்சிக்கு பின்னர், யெல்ட்சினை சூழ்ந்த முதலாளித்துவ மீட்சிக்கான ''ஜனநாயக'' கட்சிகள், சோவியத் மககளுக்கு அவற்றின் நன்றியை தெரிவிப்பதற்காக ஆலைகளை மூடத் தொடங்குவார்கள். அத்துடன் கிழக்கு ஐரோப்பாவில் தற்போது நிலவும் சமூக துயரங்களை உருவாக்க முனைவார்கள்' எல்லாவற்றுக்கும் மேலாக, சோவியத் யூனியனில் இன்னும் மாற்றமடையாது இருக்கும் அரசு ஒடுக்குமுறையின் பழைய அமைப்புகளை பயன்படுத்தி அவர்கள் மக்கள் செல்வாக்கு இல்லாத நடவடிக்கைகளை திணிக்க முயலுவார்கள் என்று நான்காம் அகிலம் முன்கூட்டியே சொல்லுகிறது. இப்படியான அமைப்புகள், ஸ்டாலினிச குண்டர்களின் கைகளில் இருந்து பழைய ஸ்டாலினிச அதிகாரி யெல்ட்சின தலைமையில் உருவாகும் சோவியத் தரகு முதலாளி வர்க்கத்தின் கைகளுக்குள் செல்கின்றது.

சோவியத் தொழிலாளர்கள் கவனமாக இருக்க வேண்டும் : அரசின் அனைத்து வளங்களும் இப்போது அரசின சொத்தைமுழுமையாக தகர்க்கவும், உற்பத்தி சக்திகளின் மேல் தனி உடமையை அறிமுகப்படுத்தவும், இந்த கொள்கையை எதிர்ப்பவர்கள் அனைவரையும் குரூரமாக ஒடுக்கவும் திருப்பப்படும்.

சதி தோல்வியடைந்த உடனேயே, கிரெம்ளின் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கைகள் என்ன என்பதை ஏகாதிபத்தியவாதிகள தெளிவுபடுத்தி உள்ளனர். ஆகஸ்ட் 22, வியாழக்கிழமை நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட முனபக்க கட்டுரையில் கோர்பச்சேவ் முதலாளித்துவத்தை திணிப்பதற்கான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தது. இதை அவர்களுடைய நாட்டை நாகரிகமாக்கும் மாபெரும் பணி'' என்று வருணித்தது.

முதலாளித்துவ மீட்சிக்கு வேலை செய்யும் அகங்காரம் கொண்ட சக்திகள் சிடுமூஞ்சித்தனமும், குளறுபடியும் நிறைந்தவை. இச்சக்திகளின் பிரதான பேச்சாளரான போரிஸ் எல்ட்சினின் அரசியல் தொழிலில் இவை உள்ளடங்கி உள்ளன. அவர் 35வருடங்கள் ஸ்டாலினிச இயந்திரத்துக்கு விசுவாசமான உறுப்பினராக சேவை செய்தார். நோவோசேர்காஸ்கில் சோவியத் தொழிலாளர்களின் எழுச்சியை கிரெம்ளின் ஒடுக்கும் நேரத்தில்தான் அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக சேர்ந்தார், அவர் ஹங்கேரியிலும போலந்திலும் தொழிலாளர்களை மூர்க்கமாக நசுக்கியதை ஆதரித்தார், அவர் பேசுவது ஒட்டு மொத்தமான ஸ்டாலினிச அதிகாரத்துவ பகுதியினருக்காகவே ஆகும். அவர்கள் புதிதாக தோன்றி வரும் முதலாளிகளின் ''ஜனநாயக'' முகாமின் வரிசையில் சேர்ந்துள்ளனர். மூழ்கிக் கொண்டிருக்கும் ஸ்டாலினிச கப்பலிலிருந்து தப்பியோடினார்கள், ஆனால் அதற்கு முன்னர் அவர்கள் தமது சொந்த சுயநல முடிவுக்காக சோவியத் பொருளாதாரத்தை கொள்ளை அடித்தார்கள்; கூறு போட்டார்கள்.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிச்ச சொச்சங்களுக்கும், முதலாளித்துவ சார்பு ஜனநாயக வாதிகளுக்கும எதிராக சோவியத் தொழிலாள வர்க்கம் அதன் சொந்த வர்க்க நலன்களுக்காக போராட வேண்டும. அது தனது தலைவிதியை ஸ்டாலினிஸ்டுகளின் எந்த பிரிவுடனும் முடிச்சுப் போடக்கூடாது. அதுபோலவே எல்ட்சினை சுற்றி கூடியிருக்கும் பல்வேறு குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளின் பொறிக்குள்ளும் சிக்கிக் கொள்வதை அனுமதிக்கக் கூடாது.

அக்டோபர் புரட்சியின் அடிப்படையான வரலாற்று வெற்றிகளை பாதுகாக்கும்படியும், அவற்றுக்கு புத்துயிரூட்டும்படியும் நாம் தொழிலாளர்களையும் சோசலிச அறிவு ஜீவிகளையும அழைக்கிறோம். சோவியத் பொருளாதாரத்தை தேசிய உடமையிலிருந்து அகற்றி தனியார் மயப்படுத்துவதையும அவற்றின் சொத்துக்களை ஏகாதிபத்தியவாதிகளிடமும், மூர்க்கமான முறையில் பங்கு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களிடமும், தரகர்களிடமும் மாற்றுவதை அவர்கள் எதிர்க்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக சோவியத் பொருளாதாரத்தை ஜனநாயக, சோசலிச அஸ்திவாரத்தில் மறுஒழுங்கு செய்வதற்கும், விஞ்ஞான ரீதியான திட்டமிடலை உருவாக்கவும் தேவையாக இருப்பது, தொழிலாளர் ஆட்சிக்கான உண்மையான அமைப்புகளை அதாவது சோவியத்துக்களை தோற்றுவிப்பதாகும், சோவியத்துக்கள்—இவற்றிலிருந்து தயவு தாட்சண்யமின்றி அதிகாரத்துவத்தை அகற்ற வேண்டும.

அரசு, ஒடுக்குமுறையின் அடிப்படையான கருவிகளான—இராணுவம் கே'ஜிபி (உளவு ஸதாபனம்)—இன்னும் இருக்கிறது என்பதை தொழிலாளர்கள் அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும். அவை அரை முதலாளித்துவ உச்ச சோவியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் மாற்றப்பட்டதானது, அவற்றினால் தொழிலாள வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளுக்கு உள்ள அபாயத்தை மாற்றவோ அல்லது குறைக்கவோ செய்யவில்லை. உளவு ஸ்தாபனங்கள் ஒழிக்கப்பட வேண்டும். அதிகாரமானது பாட்டாளி வர்க்கத்தின் மற்றும் அதன் கூட்டாளிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள உண்மையான ஜனநாயக அமைப்புகளின் கைகளில் கொடுக்கப்பட வேண்டும்.

சதியின் உண்மையான இலக்கு மிகையில் கோர்பச்சேவோ அல்லது போரிஸ் எல்ட்சினோ அல்ல சோவியத் தொழிலாள வர்க்கம்தான். உண்மையில் சதியை செய்த சூழ்ச்சிக்காரர்கள் ஒவ்வொருவரையும் கிரெம்ளினின் தலைமைக்கு நியமனம் செய்தது வேறு யாருமல்ல கோர்பச்சேவ் தான்! தலைமையின் மீதான கட்டுப்பாட்டை கோர்பச்சேவ் இழந்து விட்டார் என்று யனயேவும் இராணுவத்திலும், கே ஜி பி யிலுமுள்ள அவரது சகாக்களும் அஞ்சினர்கள், அதனால் தொழிலாள வர்க்கம் அதன் வாழ்க்கைத் தரங்களில் கடுமையான வீழ்ச்சி அடைந்ததனால் கோபமடைந்து கிளர்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்னரே அதனை தடுப்பதற்காகவே இந்த சதி தேவைப்பட்டது.

கடந்த வருடம் முழுவதும் சோவியத் அரசியல் வாழ்க்கையானது, சோவியத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து அதிகரித்து வரும் எதிர்ப்பின் மத்தியில் சோவியத் யூனியனுக்குள் முதலாளித்துவ மீட்சியை சிறந்த முறையில் கொண்டு வருவது எப்படி என்பது சம்பந்தமாக கடுமையான குழுப் போராட்டங்களினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டிருந்தது. ''தீவிர போக்கினர்'' (Hard Liners) என்று மேலெழுந்தவாரியாக வருணிக்கப்படும் அந்த ஸ்டாலினிச பிரிவுகள்கூட தனியார் மயமாக்கலுக்கு அவர்களது ஆதரவை மீண்டும் மீண்டும் தெரியப்படுத்தினர்கள். இதுவரையில் தேசிய மயமாக்கப்பட்ட நிலையை நீக்குவது சம்பந்தமான அவர்களது விமரிசனங்கள், பெருமளவில் பங்கிட்டு கொள்ளப்பட வேண்டிய இலாபத்தில் அவர்களுக்கு கிடைக்கும் பங்கு பற்றிய அதிருப்தியை அடிப்படையாக கொண்டதாகும்,

முதலாளித்துவ மீட்சி கட்டமைப்பினுள் தமது சலுகைகளை பாதுகாக்க முனையும் இப்படியான திருப்தியற்ற அதிகாரத்துவ தட்டுக்களுக்கும் பல்வேறு ஏகாதிபத்திய சக்திகளுடன் நெருக்கமான பிணைப்புகளை உருவாக்கி தம்மை ஒரு தரகு முதலாளிகளாக மாற்றுகின்ற வளர்ச்சி பாதையில் செல்லும் அவரின் வாழ்நாள் கூட்டாளிகளுக்கு நடுவேயுள்ள சக்திகளுக்கும்—இடையில் ஒரு ஆபத்து நிறைந்த நடுநிலைப்படுத்தும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக கோர்பச்சேவ் ஈடுபட்டு வந்தார்.

கடுமையான உள்மோதல்கள் கடந்த 10 மாதங்களில் ஒரு உச்சக் கட்டத்தை அடைந்தன. 1990, செப்டம்பர்—அக்டோபர் கோர்பச்சேவ் ஷாட்டலின் திட்டம் என்றழைக்கப்பட்ட ஒன்றை உருவாக்க உத்தர விட்டார். இது போலந்து பாணியில் முதலாளித்துவ சந்தையை அறிமுகம் செய்வதற்கான 500 நாள் திட்டமாகும். ஆனால் இத்திட்டம் 4கோடி வேலையின்மையையும், ஒரு சமூக வெடிப்பையும் கட்டவிழ்த்துவிடும் என்ற எச்சரிக்கைகளை அறிந்ததும் அவர் அத்திட்டத்துக்கு வழங்கிய ஆதரவை திருமபப் பெற்றார. திட்டவட்டமாக இத்தருணத்தில்தான் கோர்பச்சேவின் நெருங்கிய ஒத்துழைப்பாளரும் உலக ஏகாதிபத்தியத்தின் தலைவர்களுக்கு அவரது தனிப்பட்ட தூதுவராகவும் செயலாற்றிய எட்வர்ட் செவர்ட்னாட்சே ராஜினமா செய்தார். செவர்ட்னாட்சேயை தனது துணை ஜனாதிபதியாக உருவாக்கும திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலாமல் போனபோது கோர்பச்சேவ் யனயேவ் பக்கம் திரும்பினர்.

யனயேவின் சுயசரிதையில் ஒரு அம்சம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் கொண்டது. அது ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் உயர்மட்ட பிரிவினருக்கு மார்க்சிசத்தின் மேலுளள வெறுப்பை அம்பலப்படுத்துகிறது. இந்த ஸ்டாலினிச கயவன் எழுதிய பண்டிதக் கட்டுரை 'டிராட்ஸ்கிசமும் அராஜகமும்' என்ற தலைப்பை கொண்டது. இது நான்காம் அகிலத்திற்கு எதிரான கசப்பும், பொய்யும நிறைந்த தீவிரக் குற்றச்சாட்டை கொண்டது.

அவரை நியமனம்செய்த சமயத்தில் யனயேவ் ''வேறுபட்ட சொத்து வடிவங்களுக்கும, சந்தை உறவுகளுக்கு மாற்றம் செய்வதையும்'' ஆதரித்து பிரகடனம்செய்தார். ஆனால் அவர் உத்தியோக பூர்வ தொழிற்சங்க அதிகாரத்துவத்தின் தலைவனாக செயலாற்றியபோது சோவியத் தொழிலாள வர்க்கத்தை அடக்குவது சம்பந்தமாக அவருக்கு கிடைத்த நேரடி அனுபவத்தின் அடிப்படையில் பின்வரும் எச்சரிக்கையை விடுத்தார் நாம், சந்தைக்கான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஏதோ விதமான அதிர்ச்சி வைத்திய வழியை கையாளவோமாயின், அதனுடைய அர்த்தம் முதல் வருடத்தில் மட்டுமே கோடிக்கணக்கில வேலையற்றோர் நம்மத்தியில் இருப்பார்கள் என்பதுதான். நமது நாட்டுக்குள் 10கோடி மக்களின் வடிவத்தில் சமுதாயத்தை தகர்த்தெறியக்கூடிய சமூக டைனமைட்டை தோன்றச் செய்யும அவ்வாறான ஒரு பொறுப்பற்ற கொள்கையை கடைப்பிடிப்பதை நாமே அனுமதிககலாமா?''

யனவேவ் உயர்பதவிக்கு கொண்டு வரப்பட்டதை போரிஸ் எல்ட்சின் கடுமையாக கண்டித்தார், இதே எல்ட்சின் பிப்ரவரியில கோர்பச்சேவை நீக்க வேண்டும் என்று கோரினர். ஆனால் மார்ச்சில் முதலாளித்துவ மீட்சி வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக விலை உயர்வுகள் அமல்படுத்தப்பட்டபோது சுரங்கத் தொழிலாளர்களின் வேலைநிறுத்த இயக்கம் வெடித்தது, இது அனைத்து அதிகாரத்துவத்திற்கும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியது

ஏப்ரலில், வேலை நிறுத்தங்களை முடிவுக்கு கொண்டு வரவும், ஒரு புதிய யூனியன் ஒப்பந்தத்தை உருவாக்கவும் கோர்பச்சேவும், எல்ட்சினும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். இது சம்பந்தமாக அவர்களுக்குள் ஏற்பட்ட மோதல்கள் சுயநிர்ணய உரிமை கோட்பாட்டுடன் எந்த வகையிலும் சம்பந்தம் இல்லாததாகும். அவை குடியரசுகளில் முளையெடுத்து வரும் முதலாளித்துவம், தகர்க்கப்பட்டு வரும் தேசிய மயமாக்கப்பட்ட சொத்துக்களிலிருந்து கிடைக்கும் லாபங்களை அவர்களது கிரெம்ளின் சகாக்களுடன் பங்கிட விரும்பாது அறுவடை செய்யும் உணர்வுகளை மையமாகக் கொண்டது.

மேயில் கோர்பச்சேவின் பொருளாதார ஆலோசகர்களில் ஒருவரான கிரிகோரி யவ்லின்ஸ்கி அமெரிக்காவுக்கு ஒரு விஜயத்தை மேற்கொண்டார். அது ஜி 7 தலைவர்களுக்கு முன்னே தனியார் மயமாக்கலை அமல்படுத்துவது. அரசுடைமை சொத்துக்களை தகர்ப்பது பற்றிய ஒரு மேலும் விபரமான பிரேரணையை வைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்காகும். வரைவுத்திட்டம் பிரமாண்டமான ஏகாதிபத்திய உதவிக்கு பிரதியுபகாரமாக 1995 அளவில், சோவியத் யூனியனில் உற்பத்தி திறனில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பகுதியின்மேல் அரசு கட்டுப்பாட்டை முடிவுக்கு கொண்டு வரும்படி கோரியது

ஜூனில் பிரதமர்பாவ்லோவ்,யனயேவின் அதே எண்ணங்களை எதிரொலித்தார், அவர் பாராளுமன்றத்துக்கு அளித்த அறிக்கையில் கூறியதாவது, 1991 மார்ச், ஏப்ரலில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் அரசுக்கு 1800கோடி (1800 மில்லியன்) ரூபிள்கள் இழப்பு ஏற்பட்டது,

படிப்பகம்

www.padippakam.com



## ஆகஸ்ட் சதியின் படிப்பினைகளும்....

★2ம் பக்கத் தொடர்ச்சி

வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் காரணமாக கடந்த வருடம் தினமும் சராசரி 40,000பேர் வேலைக்கு வரவில்லை. அவர் பின்னர் இஸ்வெஸ்தியா பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் யவ்லின்ஸ்கியின் திட்டத்தை தாக்கினர்.

வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கம், ஊதிப் பெருகும் பட்ஜெட் பற்றாக் குறைகளை எதிர்கொள்வதற்காக ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத்தின் அனுமதி இன்றி சட்டங்கள் இயற்றுவதற்கு வசதியாக அவருக்கு அவசர கால அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று பாவ்லோவ் கோரினார்.

கோர்பச்சேவ், தொடர்ச்சியாக அதிகாரத்துவங்களுக்கு இடையே விரிவடையும் பிளவுகள் சம்பந்தமாக உறுதியற்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார், இவ்வாறு கோர்பச்சேவ் தொடர்ந்து ஊசலாட்டத்தில் இருந்ததனால் லண்டனில் நடைபெற்ற ஜி 7 கூட்டத்திற்கு கோர்பச்சேவுடன் கூடச் செல்வதற்கு யவ்லின்ஸ்கி மறுப்பு தெரிவித்தார்.

முதலாளித்துவத்திற்கு சோவியத் யூனியன் மாறிச் செல்வதற்கு நிதி உதவி அளிப்பதற்கு,கோடிக்கணக்கான டாலர்களை உலக ஏகாதிபத்தியத் தலைவர்கள் தருவதற்கு வாக்குறுதி அளிக்கும்படி அவர்களை உடன்படச் செய்தால் மோசமடையும் பொருளாதார, அரசியல் நெருக்கடியை சாந்தப்படுத்த முடியும் என்று கோர்பச்சேவ் நம்பினார்.

ஆனால் அங்கு கூடிய ஏகாதிபத்திய நாடுகளின் தலைவர்கள் அதற்கு உடன்பட மறுத்தனர், தேசிய மயமாக்கப்பட்ட சொத்தை தகர்ப்பதற்கு தீர்க்கமான நடவடிக்கைகள் அமல்படுத்தப்படும் என்று, தாம் முழுமையாக நம்பும் வரையில் எந்த பொருளாதார திட்டத்திற்கும் கையெழுத்திடப் போவதில்லை என்று கோர்பச்சேவிடம் அவர்கள் கூறினார்கள். அவர்களது இந்த தீவிர போக்குக்கு ஆதரவாக ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள பெரும் வங்கிகள் சோவியத் யூனியனுக்கு வழங்கும் கடன் தொகையை கடுமையாக வெட்டினார்கள்.

கோர்பச்சேவ் வகித்த சிறப்பு பங்கு உள்பட நிறைய விஷயங்கள் இன்னும இருள் சூழ்ந்ததாக உள்ளது. ஒரு புதிய யூனியன் உடன்படிக்கை அவர்களது அதிகாரங்களை கடுமையாக கட்டுப்படுத்தும் என்று அஞ்சிய ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின சில பிரிவினர் நடவடிக்கையில் இறங்க தீர்மானத்தனர் என்றே தோன்றுகிறது.

### சதியின் வீழ்ச்சி

சதியை நடத்திய யனயேவ் குழுவினர், பலமான நிலையிலிருந்து இதை செய்யவில்லை, ஆனால் வளர்ச்சியடையும் ஆற்றொணா நிலையிலிருந்தே செய்தனர். அது ''ஒருவர் முழங்காலிலிருந்து கிளர்ச்சி'' செய்வதைப் போன்று இருந்தது. கோர்பச்சேவின் முதலாளித்துவ மீட்சி வேலைத்திட்டததை நிறைவேற்ற அவராலேயே தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பதால், சதிகாரர்கள் தாம் அக்டோபர் மரபையும், ''சோசலிசத்தையும்'' பாதுகாக்க தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்ட நடவடிக்கை எடுக்கிறோம் என்றுஉரிமை கோர முடியவில்லை. கோர்பச்சேவிற்கும், எல்ட்சினுக்கும் எதிராக தொடர்ந்து நீடிக்கக்கூடிய ஒரு வேலைத்திட்டத்தை அவர்களால் வழங்க முடியவில்லை. ''தனி ஒரு நாட்டில் சோசலிசம்'' எனப்படும் ஸ்டாலினிசத்தின் பாரம்பரிய வேலைத்திட்டம் நீண்ட காலத்துக்கு முன்பே மதிப்பிழந்து விட்டது.

சதிகாரர்கள் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையும் அவர்களது உறுதியிலாத் தன்மையையும, உள் பிளவுகளையும், பலவீனத்தையுமே பிரதிபலித்தது. ஒருபுறம் அவர்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையாவது ஏகாதிபத்தியவாதிகளுடன் விரோதத்தை ஏற்படுத்துமோ என்று பயந்தனர். ரஷ்யப் பாராளுமன்றத்தின்மீது கைவைக்கப்படவில்லை. எல்ட்சினின் தொலைபேசித் தொடர்புகளை வெட்டுவதற்கான முயற்சிகூட எடுக்கப்படவில்லை. அவரினால் தொடர்ச்சியாகவும் நேரடியாகவும் (பிரிட்டனில்) டோரி பிரதமர் ஜான் மேஜருடனும் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் புஷ்ஷுடனும், உலக ஏகாதிபத்தியத்தின் இதர தலைவர்களுடனும் தொடர்பு கொள்ளவும், ஒத்துழைக்கவும் முடிந்தது.

மறுபடியும், யனயேவும் மற்றைய சதிகாரதலைவர்களும், கட்டுப்படுத்த முடியாத வகையில் சோவியத் தொழிலாள வர்க்கத்தை தூண்டி விடுவது பற்றி மிகவும் பீதி கொண்டிருந்தனர். எட்டுப் பேரைக் கொண்ட அவசர குழுவின் முதலாவது கட்டளை—அனைத்து வேலை நிறுத்தங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் சட்ட விரோதமாக்கி, ஒரு அவசரகால சட்டத்தை பிறப்பித்ததாகும்.

முதலாளித்துவ சார்பு பெரஸ்த்து ரொய்காவை கைவிடும் எண்ணம் தமக்கில்லை என்பதை ஏகாதிபத்திய சக்திகளுக்கு எடுத்துக் காட்டுவதற்காக அனைத்து பழைய உடன்படிக்கைகளும், கடமைப்பாடுகளும் மாற்றமில்லாமல் தொடரும் என்று அறிவித்தனர், மேலும் அவசரகால நடவடிக்கைகள் ''அரசின, சமுதாயத்தின் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் ஆழமான சீர்திருத்தங்களை நோக்கிய பாதையை கைவிடுவதாக'' 'ஒரு போதுமே' அர்த்தப்படாது என்றும் தெரிவித்தனர்.

குழு வெளியிட்ட மற்றொரு அறிக்கையில் ''தனியார் நிறுவனத்திற்கும், அதன் உற்பத்தி, சேவைகளின் வளர்ச்சிக்கு தேவையான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கும்'' அதன் ஆதரவை தெரிவித்தது.

தொடக்கத்திலிருந்தே சதி உள்நெருக்கடியால் அழிந்தது, அவர்களது சொந்த அணிகளிலுள்ள நிலைமை பற்றி நன்கு அறிந்து கொண்ட நிலைமையில், சதி தொடங்குவதற்கு முன்னரே இராணுவ தலைவர்கள் அநேகமாக அதனை வாபஸ் பெற்றுக் கொண்டனர். அவர்களால் செஞ்சதுக்கத்தில் தியன்மென் சதுக்கத்தைபோன்ற ஒன்றைமறுபடிநிறைவேற்றமுடியாதுஎன்று அவர்களுக்கு நன்குகவே தெரியும். இது சாமர்த்தியம் இல்லாமையின் காரணமாக அல்ல. சோவியத், மற்றும் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை குரூரமாக ஒடுக்குவதில் கிரெம்ளின் குண்டர்களுக்கு பல பத்தாண்டுகள் அனுபவம் உண்டு. அதற்கு மாறாக, கேஜிபியிலும் இராணுவத்திலும்உள்ள உயர் மட்டத்தினர், பலாத்காரத்தை பிரயோகித்து சதியை காப்பாற்ற அஞ்சினர். ஏனெனில் அதன் மூலம் தாம் ஆற்றொணா நிலையில் முயற்சிக்கும் ஒரு சமூக கொந்தளிப்பை கட்டவிழ்த்து விட நேரும என்பதால் தான். மாஸ்கோவிலும், லெனின்கிராடிலும்: இதர பெரும் நகரங்களிலும் கூடிய பெருந்திரளானோரில் அதிகமானோர் மாணவர்களும், அறிவு ஜீவிகளுமே ஆவர், அப்படி இருந்தபோதிலும் ஒரு மூர்க்கத்தனமான மோதல் சோவியத் தொழிலாள வர்க்கத்தை கோடிக்கணக்கில் தெருக்களுக்கு கொண்டு வரக்கூடிய அளவு பிரமாண்டமான எதிர்த்தர்க்கங்களை கொண்டு வரலாம் என அவர்கள் பீதியடைந்தனர்-

இறுதி ஆய்வில், போரிஸ் எல்ட்சினின் நடவடிக்கைகள், சதி தோல்வி அடைந்ததில் ஒரு குறிப்பிட்ட அளவு பங்கையே கொண்டிருந்தது. தொழிலாள வர்க்கம் அதிகாரத்துவத்தின் எந்த பிரிவுடனும் சேர்ந்து கொள்ளவில்லை. திரைக்கு பின்னே கேஜிபி. இராணுவ அலுவலகங்களிலும், ஏகாதிபத்திய தலைநகரங்களுக்கும் மாஸ்கோவுக்கும் இடையேயான தொலைபேசி தொடர்புகளிலும் சதி விளையாடி முடிக்கப்பட்டது, எல்ட்சின் தங்கி நிற்கும் அதே ஏகாதிபத்திய தலைவர் களின் ஆதரவில் தங்கி நிற்கும் ஸ்டாலினிச சதிகாரர்கள், தமது நடவடிக்கைகளுக்கு ஏகாதிபத்திய தலைவர்கள் ஆதரவு தர மாட்டார்கள் என்று அறிந்ததும் அவர்கள் நம்பிக்கை இழந்தனர். அவர்களின் சதி வீழ்ச்சி கண்டது,

### தொழிலாள வர்க்கத்தின் கடமை!

ஆகஸ்ட் 19 சதியின் தோல்வியானது, ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சவப்பெட்டியில் அறையப்பட்ட ஒரு பெரிய ஆணியாகும். ஆனால் தொழிலாள வர்க்கத்தின் மத்தியில், இது பற்றிய அவசரப்படும் ஆரவாரம் முற்றிலும் நியாயமற்றதாகும்.

தற்போது முன்அணியில் நிற்கும் அந்த சக்திகள் தான், தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான மிகவும் குரூரமான, நுரை கக்கும் எதிரிகள் ஆகும்? அவர்களுடைய நோக்கம் சோவியத் யூனியனின் அனைத்து சொத்துக்களையும் விற்று. அதனை ஒரு அரைக் காலனிதுவ நிலைக்கு கொண்டு வருவது என்பதற்கு குறைவானதாக இலலை. அனைத்து கணக்கு வழக்குகளிலும் பார்த்தால் கடந்த சில வருடங்களில் அரசு சொத்துக்கள் வெறிததனமாக விற்கப்பட்டன. அப்போது அதிகாரத்துவதின் மிகவும் சக்தி வாய்ந்த சலுகை நிறைந்த பிரிவினர் தமது பதவிகளை பயன்படுத்தி நல்ல லாபம் அடைந்தனர்.

'',ஜனநாயகத்தை'' பாதுகாக்கும் பெயரிலும் ''தனி நபர்களின்'' உரிமைகளை உயாத்திப் பிடிக்கும் பெயரிலும் எல்ட்சின் பரந்தளவிலான வேலை நீக்கங்களையும், தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான மிருகத்தனமான தாக்குதல்களையும் நியாயப்படுத்துவார், இதுவே இப்போது உடனடியாக நிகழ்ச்சி நிரலில் உள்ளது.

எல்ட்சினின் வாய் வீச்சுக்களில் தொழிலாளர்களும், மாணவர்களும், அறிவு ஜீவிகளில் சில பிரிவினரும வைத்திருந்த பிரமைகள் மூர்க்கமாக உடைக்கப்படுவதற்கு அதிக காலம் தேவைப்படாது. இன்று ஏகாதிபத்தியத்தினால் ''ஜனநாயகவாதிகள்,'', ''மக்களின் பாதுகாவலர்கள்'', என்று போற்றி புகழப்படுபவர்கள், நாளை தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக தமது சொந்த வர்க்க நலன்களை பாதுகாக்க வேண்டி வரும்போது எந்த அக்கறையும் காட்ட.மாட்டரார்கள்.

சோவியத் யூனியனை ஒரு காலனி போலக் கருதி அதனுடன் நடவடிக்கையை மேற்கொள்ளும் பொருட்டு பெரும் ஏகாதிபத்திய சக்திகள் முன் கண்டிராதபடி ஈடுபட்டிருப்பது சம்பந்தமாக தொழிலாள வர்க்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒரு சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வாக்கத்தின் சுதந்திரமான தலையீடு இல்லாதிருக்குமாயின், சோவியத் யூனியனில் ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி மிகவும் குரூரமான வடிவங்களைக் கொண்ட ஒடுக்கு முறைக்கும் சமூக சீரழிவுக்கும் தான் வழிவகுக்கும், அறுபதாண்டுகள் கொண்ட ஸ்டாலினிச பயங்கரவாதம் முதலாளித்துவத்தின் பயங்கர வாதத்தால் பிரதியீடு செய்யப்படும். முதலாளித்துவ மீட்சி சமாதான வழியில் அமல்படுத்தப்படும் என்பது நிச்சயமாக நடக்க முடியாததாகும். பாராளுமன்ற ஜனநாயகமும். முதலாளித்துவ மீட்சியும் முழுமையாக உடன்பாடு இல்லாதவையாகும். முதலாளித்துவம் மீட்டமைக்கப்படும் ஒரேவழி சோவியத் தொழிலாள வர்க்கத்தை மிகவும் பலாத்காரமாக, குரூரமாக நசுக்குவதன் மூலம் தான் ஏற்பட முடியும்

சோவியத் தொழிலாள வர்க்கம் அனைத்து ஸ்டாலினிச இயந்திரத்தையும் துடைத்து எறிய வேண்டும். குட்டி முதலாளித்துவத்தின் ஆதிக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டும், தொழிலாளர் ஆட்சியின் அமைப்புக்களாக நிஜமான சோவியத்துக்களை உருவாக்க வேண்டும். இதன் மூலம் உண்மையான தொழிலாளர் ஜனநாயகத்தை உத்தரவாதம் செய்ய வேண்டும். இப்போது அனைத்து சோசலிச சிந்தனையுள்ள தொழிலாளர்களையும், மாணவர்களையும், அறிவு ஜீவிகளையும், எதிர் கொண்டுள்ள முக்கியமான பணி, ஸ்டாலினிசத்திற்கு எதிராக பல பத்தாண்டுகளாக நான்காம் அகிலம் நடத்திய போராட்டத்தை கிரகித்துக் கொள்வதும், நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் சோவியத் பகுதியை கட்டி எழுப்பும் பணியில் பங்கெடுப்பதும் ஆகும்.

சோவியத் யூனியனின் இறுதிமுடிவு அதன் எல்லைகளுக்குள் தீர்மானிக்கப்படமாட்டாது. அது வர்க்கப் போராட்டத்தின் சர்வதேச அரங்கில் தான் தீர்மானிக்கப்படும்.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிச்சசொச்சங்களை தூக்கி வீசவும், முதலாளித்துவ மீட்சியை தடுக்கவும், சோவியத் யூனியன் ஏகாதிபத்தியத்தின் ஒரு அரைக்காலனியாக கூறு போடப்பட்டு சீரழிக்கப்படுவதை நிறுத்தவும், உண்மையான தொழிலாளர் ஜனநாயகத்தை உருவாக்கவும், சோவியத் தொழிலாள வர்க்கம் நடத்தும் போராட்டம், வளர்ச்சி அடைந்த நாடுகளிலுள்ள தொழிலாள வர்க்கப் போராட்டங்களுடனும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் போராட்டங்களுடனும் ஐக்கியப்பட வேண்டும். இதற்கு தேவையானது சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவை கட்டி எழுப்புவதாகும்.

எதிர்ப்புரட்சிகர ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு எதிராக, லியான் டிராட்ஸ்கி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட வரலாற்று ரீதியான போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நான்காம் அகிலம் மட்டுமே சோவியத் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்று வெற்றிகளை பாதுகாக்கிறது; அதன் மகத்தான சோசலிச மரபுகளை உயர்த்திப் பிடிக்கிறது.

ஏகாதிபத்திய யுத்தத்திற்கும், காலனித்துவத்திற்கும் எதிராக பெர்லினில் நவம்பர் 16-17 தேதிகளில் நடைபெற இருக்கும் உலகத் தொழிலாளர் மாநாட்டின் முக்கியமான கடமைகளில் ஒன்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் ஒரு புதிய சோவியத் பகுதியை உருவாக்குவதற்கான அடித்தளத்தை உருவாக்குவதாகும்.

**சோவியத் தொழிலாளர்களே! இளைஞர்களே! மாணவர்களே! அறிவு ஜீவிகளே! சோசலிசப் புரட்சியின் உலக கட்சியான நான்காம் அகிலத்தில சேருங்கள், அதுவே உங்கள் வருங்கால வெற்றிக்கான கட்சி!**

**ஸ்டாலினிசம் வீழ்க!**

**முதலாளித்துவ மீட்சியை நிராகரி!**

**1917 அக்டோபர் வெற்றிகளையும் மரபுகளையும் பாதுகாப்புச் செய்; நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் சோவியத் பகுதியைக் கட்டு!**

**உலக சோசலிசப் புரட்சியின் வெற்றியை நோக்கி முன்னேறு!**

படிப்பகம்

www.padippakam.com

## காந்தி கொலைச் சம்பவத்தையும்

# தமிழ் ஈழத்தினருக்கு எதிராக பயன்படுத்த பிரேமதாச அரசாங்கம் நடவடிக்கை

ராஜீவ் காந்தி படுகொலையைச் சாட்டாகக் கொண்டு இந்திய முதலாளித்துவக் கட்சிகள் தமிழ் நாட்டில் வாழும் தமிழ் ஈழத்தினருக்கு எதிராக நடாத்தி வரும் வேட்டைகளை ஒட்டி இம் மாகாணங்களுக்கு விஸ்தரிக்கும் பொறுப்பினை பிரேமதாச அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. ராஜீவ் காந்தி படுகொலையில் ஈடுபட்டதாக இந்திய ஆட்சியாளர்கள்கூறி கொள்ளும் சந்தேக நபர்களிஸ் வர்ணப் படங்களை வினியோகிக்கும் நடவடிக்கைகளில் இலங்கை விமானப் படைகள் ஈடுபட்டுள்ளன. மன்னார்ப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்யப்பட்டு, விமானக் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையிலேயே இவை ஆரம்பமாகியுள்ளன.



ஆர். பிரேமதாச



வே. பிரபாகரன்

யூ. என். பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தம் ஓராண்டினைப் பூர்த்தி செய்து கொண்டுள்ள இன்றைய நிலையில் வடமாகாண உணவு, அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தினை மேலும் மோசமடையச் செய்யத் தன்னால் ஆனதை எல்லாம் இனவாத யூ. என். பி. அரசாங்கம் செய்து வருகின்றது. வவுனியாத் தடைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டுள்ளன. பொருட்களினை குடாநாட்டுக்குள் எடுத்துச் செல்வது மேலும் சிரமமாகியுள்ளது. இதனால் 1990 டிசம்பர் காலப் பகுதியில் வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காலத்தைவிட விலைவாசிகள் அதிகரித்துள்ளன. இன்றைய (கிலோ) விலைவாசிகள்:

| | |
|---|---|
| அரிசி | ரூபா 35/- |
| அரிசி (மைசனா) | .. 28/- |
| மாவு | .. 27/- |
| சீனி | .. 38/- |
| உப்பு | 10/- |
| பாண் | 10/50 |
| லக்ஸ்பிறே (500கி.) | 60/50 |
| மண்ணெண்ணெய் (போத்தல்) | 100/- |
| தேங்காய் எண்ணெய் | 60/- |
| தேங்காய் | 20/- |
| முட்டை | 7/- |

குழந்தை பால்மா வகைகள் கொழும்பு விலையை விட ரூபா 10/- கூடுதலாக விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி, செஞ்சிலுவைச் சங்க கண்காணிப்பின் கீழ் வந்ததன் பின்னர் விமானத் தாக்குதல்கள் இடம்பெறாத போதிலும் வைத்திய நிபுணர்கள், மருந்துச் சரக்குத் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக உள்ளது. ஆஸ்பத்திரிக்கான முழு அளவிலான மருந்து கோட்டாவை வழங்க சுகாதார திணைக்களம் மறுத்து வருவதோடு இந்த மருந்துச்சரக்கு கோட்டா 1989ம் ஆண்டின் மட்டத்துக்கு (8,7 மில்லி) கட்டுப்படுத்தப்பட வேண்டும் என கோரியுள்ளது. மருந்துச் சரக்குகளின் விலைவாசி உயர்வினைத் தொடர்ந்து இவற்றின் விநியோகம் மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. இனப் படுகொலை யுத்தம். அகதிகளின் பெருக்கத்தால் வைத்தியத்தினை நாடும் மக்களின் எண்ணிக்கை பெருகியுள்ள நிலையிலேயே இக்கட்டுப்பாடு நீடித்து வருகின்றது.

இனவாத யுத்தத்தினைத் தொடர்ந்து வைத்திய நிபுணர்களின் இடம் பெயர்வினால் சத்திர சிகிச்சைகள் பெரிதும் கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. மின்சார விநியோகம் இல்லாதது மட்டுமன்றி 'ஜெனரேட்டர்'களுக்கான டீசல் தட்டுப்பாடும் சத்திரசிகிச்சைகளைப் பெரிதும் பிரச்சினைகளுக்குள்ளாக்கியுள்ளன. இந்நிலையில் மிகவும் அவசிய சத்திர சிகிச்சைக்கான நோயாளிகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் கண்காணிப்பில் கப்பல் மூலம் கொழும்புக்கு மாற்றப்படுகின்றனர். கப்பலிலும் போதிய வசதிகள் இன்மையால் இந்நோயாளர்களின் எண்ணிக்கை 20ல் இருந்து 15 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. தனியார் மருந்துக் கடைகளில் போதிய கையிருப்பு இல்லாததோடு விலையும் பன்மடங்கு அதிகமாய் உள்ளது. ஆஸ்துமா நோயாளிகள் பாவிக்கும். 'மென்ரலின்' பில்லை மூன்று ரூபா. 1/00 ஆக (சாதாரண விலையை விட 10 மடங்கு அதிகம்) விற்பனையாகிறது.

மாத வருமானம் ரூபா 1500/-க்கு குறைவானோருக்கு ரூபா 81/- 310/- பெறுமதியான உணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சங்கங்களால் விநியோகிக்கப்படுகின்றன. ரூபா 1500/-க்கு மேற்பட்ட வருமானமுடையோருக்கு இந்த உணவுப் பொருட்கள் கொழும்பு விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. யூ. என். பி. அரசாங்கம் யுத்தத்தில் இறங்கியதன் பின்னர் இந்த உணவுப் பொருட்கள் யாழ் மாவட்டத்தில் 7 தடவைகள் மட்டும் விநியோகிக்கப்பட்டுள்ள வேளையில் அம்பாறை மாவட்டத்தில் 35 தடவைக்கு மேல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக மக்கள் முறைப்பட்டுள்ளனர்.

தலைமுறை தலைமுறையாக புகையிலை வெங்காயம் போன்றவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஏழைவிவசாயிகள் போக்குவரத்துத் தடைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதோடு. விடுதலைப்புலிகளின்பிற்போக்கு. 'சுயபூர்த்தி' பொருளாதாரக் கொள்கைகளின் மிரட்டலுக்கும் உள்ளாகியுள்ளனர்.

பணப்பயிர் உற்பத்தியை நிறுத்தி 'சுயபூர்த்தி' உணவு உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடாத விவசாயிகள், விடுதலைப் புலிகளின் மேதினக் கூட்டத்தில் பலத்த கண்டனத்துக்குள்ளாகினர். ''உள்ளூராட்சி சபை தேர்தலின், பின்னர் விடுதலைப் புலிகள் கொழும்புக்கு போய், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தி, ஒரு சமரசத்துக்கு வருவார்கள். அதன் பின் புகையிலை, வெங்காயத்தை கொழும்பில் விற்று காசை வங்கியில் போட்டு வைக்கலாம்'' என விவசாயிகள் எதிர்பார்த்திருப்பதாகவும் இது சுயநலம்மிக்கது எனவும் விடுதலைப் புலிகள் தலைவர்களில் ஒருவரான யோகி மேதினக் கூட்டத்தில் சாடினார்.

மருதனாமடத்தில் இருந்து ஆரம்பமான விடுதலைப் புலிகளின் மே தின ஊர்வலத்தில் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான ஒடுக்குமுறையையும், அடக்குமுறையையும் சித்தரிக்கும் ஊர்திகள் மட்டுமன்றி இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளில் தேசிய முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களின் சுலோகமாக விளங்கிய 'சுயபூர்த்தி பொருளாதார, வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் மோசடிகளைக் கொண்ட ஊர்திகளும் பயணம் செய்தன. ஈராக்குக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்திய யுத்தத்தினைத் தொடர்ந்து இந்தச் 'சுயபூர்த்தி' கொள்கைகளின் நிச சொரூபத்தை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் புரிந்து கொள்வது அதிக சிரமமான காரியம் அல்ல.

பிரித்தானிய உயர் ஸ்தானிகர் உள்ளூராட்சி சபை தேர்தல்வாக்களிப்பு 'ஒழுங்குமுறைகள்' பற்றிய தலையீட்டில் ஈடுபட்டது 'ஜனநாயகம்' காக்கும் நோக்கிலன்றி, இலங்கையில் தமது பழைய காலனித்துவ பிடிகளைப் புதுப்பித்துக் கொள்வதே. பிரேமதாச பப்பானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் உறவுகளை வலுப்படுத்தி, மூன்று யப்பானியர்களுக்கு ஜனாதிபதியின் கௌரவப் பட்டங்களை வழங்கியமை பிரித்தானிய ஆட்சியாளர்களை சினங் கொள்ள வைத்துள்ளது. இந்நிலையில் விடுதலைப் புலிகளின் 'சுயபூர்த்தி' இலக்குகள் தேசிய ஜனநாயக உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் தேசிய இனத்தினரிடையே ஏகாதிபத்தியவாதிகளின் புதிய காலனி விஸ்தரிப்புக்களைபூசி மெழுகுவதாக உள்ளது. அத்தோடு வெளிநாட்டு அரசியல் செல்வாக்குத் திரட்டும் விடுதலைப் புலிகள் தலைமையின் நடவடிக்கை இந்த ஏகாதிபத்திய பொறியில் மாட்டிக் கொள்வதாகவும் உள்ளது.

இந்திய மாஜி பிரதமர் ராஜீவ் காந்திகொலையினைத் தொடர்ந்து இந்திய அரசியல் அரங்கில் உக்கிரம் கண்டுள்ள தலைமை நெருக்கடிக்கு மத்தியிலும் விடுதலைப் புலிகள் தலைமை புதுடில்லியுடனான தமது நெருக்கத்தினை மீண்டும் காட்டிக் கொண்டுள்ளது. 6/7/91ல் லண்டனில் விடுதலைப் புலிகள் தலைவரான கிட்டு (கிருஷ்ணகுமார்) வெளியிட்ட அறிக்கையில் இதைச் சுட்டிக் காட்டியுள்ளார். ''ராஜீவ் காந்தியை புலிகள் தான் கொலை செய்தனர் என்ற பேச்சுக்கள் எந்தவொருசான்றும் தடயமும் இல்லாமல்அடிபடுகின்றன. இது உண்மையான குற்றவாளி தப்பிச்செல்வதற்கே வழிவகுக்கும். இந்திய புலனாய்வாளர்கள் மற்றைய அம்சங்களையும்ஆராய வேண்டும். இலங்கை—இந்திய சமாதான உடன்படிக்கை அமுலாக்கப்பட வேண்டும் என ராஜீவ் காந்தி மாத்திரம் தான் வலியுறுத்தி இருப்பார் எனக் கருதுவது தவறாகும். இந்தியாவில் அமையக் கூடிய எந்த அரசாங்கமும் உடன்படிக்கையை கைவிட முடியாது. இந்திய அரசாங்கத்துடன் நல்லுறவைக் கொண்டிருக்க வேண்டியது எமது நலன்களுக்கு தேவையானதாகும்.''

(வீரகேசரி 9-6-91)

இந்திய அரசாங்கத்துடன் நல்லுறவைக்கொண்டிருக்கும் விடுதலைப் புலிகள், இந்தியப் புலனாய்வாளர்கள் (இந்திய) புதுக்கோட்டை முதல் (இலங்கை) புறக்கோட்டை வரையில் ஒடுக்குமுறை அரச இயந்திரத்தினை விஸ்தரிக்கும் உரிமையையும் வழங்குகிறார்கள்.

இந்த தேசிய குட்டி முதலாளித்துவ தலைமைகளின் வங்குரோத்து அரசியலுக்கும் சமசமாஜ—கம்யூனிச—நவசமசமாஜ—இ. தொ. கா, தலைவர்களின் துரோகத்துக்கும் எதிராக புதிய புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்புவதன் அவசியத்தை வலியுறுத்துகையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வலியுறுத்தியவற்றை மீண்டும் இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது: ''நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தொழிலாளி வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கச் செயற்பட்ட பிற்போக்கு முதலாளித்துவ ஒற்றையாட்சிஅரசினைப் பாதுகாக்கும் எந்தவிதமான அவசியமும் தொழிலாள வர்க்கத்துக்கு கிடையாது, தொழிலாளி வர்க்கம் இந்த ஒற்றையாட்சி அரசின் கீழ் நாசமாக்கப்பட்ட ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை காக்கத் திடசங்கற்பம் பூணுவதன் மூலம் இந்த முதலாளித்துவஅரசிற்கு எதிரான புரட்சிகரப் போராட்டத்துக்கு அணிதிரள்வது அவசியம். ஒடுக்கப்படும்தமிழ் தேசிய இனத்தின் விடுதலை, தொழிலாள வர்க்கத்தின் விடுதலையுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது, விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்கள் தமிழ் தேசிய இனத்தினரைத் தள்ளி வீழ்த்தியுள்ள ஆதாள பாதாளத்தில் இருந்துதலையெடுக்க தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் முதலாளித்துவ அரசினை தவிடு பொடியாக்கப் போராட வேண்டும்.'' (யூ. என். பி, இனவாத யுத்தம் வேண்டாம்! சோசலிச குடியரசினை கட்டி எழுப்பு!' பு. க. க. அரசியல் குழு அறிக்கை– 1990 ஆகஸ்ட்)

இனவாதப்படைகளின் குண்டு வீச்சு மிரட்டலுக்கு மத்தியிலும் மே தினத்தன்று மருதனாமடத்திலிருந்து நல்லூர் வரை அணிதிரண்ட இலட்சக் கணக்கான தொழிலாள, ஒடுக்கப்படும் ஏழை மக்களின் அபிலாசைகளை இட்டு நிரப்பும் அவசியமோ அல்லது யோக்கியதாம்சமோ விடுதலைப் புலிகள் தலைமைக்கு கிடையாது. தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் குட்டி முதலாளித்துவ சமரசங்களுக்கு எதிராகப் போராடும். புரட்சிக் கட்சியினால் மட்டுமே தேசிய ஜனநாயகப் புரட்சியின் பணியை முன்னெடுக்க முடியும். இதற்கு 20பதாம் நூற்றாண்டின் முழு வரலாறும் சான்று பகர்கிறது.


## தொழிலாளர் பாதை

### சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட

''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் — ரூ. 6.00 3 மாதம் — ரூ. 12.00
6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் — ரூ. 72.00

பெயர் :........................................

முகவரி :........................................

சந்தாக் காலம் :.............. ரூ............சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10,


படிப்பகம்

www.padippakam.com

## உலக தொழிலாளர் மகாநாட்டு விஞ்ஞாபனம் தமிழில் பிரசுரம்

உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் பேர்லின் நகரில் கூட்டும் உலகத் தொழிலாளர் மகாநாட்டு விஞ்ஞாபனம் தமிழில் வெளிவந்துள்ளது. நா. அ. அ. கு. வின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த முன்நோக்கு, வேலைத்திட்ட அறிக்கையை வாங்கிப் படிக்கும் படியும், ஏகாதிபத்தியத்தியத்தையும், தேசிய முதலாளி வர்க்கத்தையும் தூக்கி வீசும் போராட்டத்தின் அடித்தளமாக அதைக் கொள்ளும்படியும் நாம் சகல தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

அனைத்துலகக் குழுவின் இந்த விஞ்ஞாபனம், உலக முதலாளித்துவத்தின் முரண்பாடுகளையும். உலகப் பொருளாதாரமும் தனிப்பட்ட சொத்துடமையைப் பேணும் தேசிய அரசுகளும் எங்ஙனம் முரண்பட்டு மோதிக் கொள்கின்றன என்பதையும், உலக ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் உலகத்தினை மீண்டும் கூறுபோடும் மூன்றாம் உலக யுத்தத்துக்கு செய்யும் தயாரிப்புக்களையும் நுணுக்கமாக ஆய்வு செய்துள்ளது.

ஈராக்குக்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகளின் காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பு யுத்தம் இதனைத் தெளிவுபடுத்தியது. அத்தோடு இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் — நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நிலவிவந்த 'சமபல நிலை இன்று தகர்ந்து போயுள்ளது. இந்த அரசியல், பொருளாதார அபிவிருத்திகள் இன்றைய சகாப்தம் 'ஏகாதிபத்திய யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தம்' என்ற லெனினின் ஆய்வினை மீண்டுமோர் முறை ருசுப்படுத்தியுள்ளது. முன்னணிக்கு கொணர்ந்துள்ளது.

அனைத்துலகக் குழு இன்றைய ஏகாதிபத்திய நெருக்கடி, உலக வர்க்கப் போராட்டத்தின் வரலாற்று அபிவிருத்தியின் புதிய கட்டத்தினை எங்ஙனம் குறிக்கின்றது என்பதை வர்க்கப் போராட்டத்தின் மூலோபாய அனுபவங்களுடன் ஒப்பிட்டு விளங்குகின்றது. சோவியத் யூனியனின் கொர்பச்சேவ் அதிகாரத்துவம் முதல் திரிபுவாதிகள் வரையிலான சகல தேசியவாத சந்தர்ப்பவாதிகளதும வீழ்ச்சியையும் இவற்றுக்கும் உலக முதலாளித்துவ நெருக்கடிக்கும் இடையிலான பிரிக்க முடியாத உறவையும் இந்த விஞ்ஞாபனம் சுட்டிக் காட்டுகின்றது. இந்திய உபத்துணைக் கண்டத்தில் ஏகாதிபத்திய யுத்தமும், காலனித்துவ மயமாக்கலும் எந்தவிதத்தில் உருவெடுத்துள்ளன எஸ்பதை ஆய்வு செய்யும் இந்த விஞ்ஞாபனம், உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்துக்கு புறத்தே எந்தவிதமான 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' போராட்டங்களும் இடம் பெற முடியாது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. சகல போராளிகளும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.




இல்ங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

2/-

● மாதமிரு இதழ் — 409 ● 1991 ஆகஸ்ட் 12 திங்கட்கிழமை

# இனவாத யுத்தத்தினால் சர்வாதிகார தயாரிப்புக்கள் பலமடைகிறது

பிரேமதாச அரசாங்கம் ஆனையிறவை மீண்டும் கைப்பற்றி, வட—கீழ் மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் போராளிகள், தொழிலாளர்கள், ஏழைக்ளைக் கொன்று தள்ள முன்னொருபோதும் இல்லாத அளவிலான திட்டங்களைத்தயார் செய்துள்ளது. இந்த இனவாத யுத்தத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. இந்த இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கும் திட்டத்துடன் இணைந்த முறையில் தென் மாகாணங்களில் தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் காட்டுமிராண்டித் தாக்குதல்களை கட்டவிழ்த்துவிடவும் பிரேமதாச அரசாங்கம் தயாராகி வருகின்றது என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கை செய்கின்றது.

முதலாளித்துவ அரசாங்கத்தின் முழுப்பலத்தையும் கொண்டு, உக்கிரமாக்கியுள்ள இந்த யுத்தத்தினை தொழிலாளர்கள்—ஒடுக்கப்படும் மக்களின் யுத்தமாகக் காட்டவும் தமிழர் விரோத இனவாத வெறியை கட்டவிழ்க்கவும் பிரேமதாச அரசாங்கமும் சி. ல. சு. க உட்பட சகல முதலாளித்துவக் கட்சிகளும் முதலாளித்துவ பத்திரிகைகளும் தலைகீழாக நின்று வருகின்றன. முதலாளிகள் மட்டுமன்றி இந்த இனவாத யுத்தத்துக்குச் சாயம் தடவும் சமசமாஜ - ஸ்டாலினிச நவசமசமாஜ —இ.தொ.கா. அமைப்புக்களின் தலைவர்களின் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் பு. க. க. முதலாளி வர்க்கத்தின் இந்தக் கங்காணிகளை வெளியேற்றி பாட்டாளி வர்க்க வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்ப முன் வருமாறு தொழிலாளர்களை

(12-ம் பக்கம் பார்க்க)

## இளம் சோசலிஸ்டுகள் 10வது தேசிய மகாநாடு:

# புரட்சிகரத் தலைமையை கட்டி எழுப்ப அழைப்பு

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் இயக்கமான 'இளம் சோசலிஸ்டுகள்' உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்துக்குதொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட நடாத்தி வரும் போராட்டத்தின் வரலாற்றுத் திருப்பு முனையைக் குறிக்கும் விதத்தில் தமது 10வது தேசிய மகாநாட்டினை ஜூலை 28ல் கொழும்பில் நடாத்தினர்.

கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாள் பூராவும் நடைபெற்ற இம் மகாநாட்டில் இலங்கையின் நாலாபாகங்களில் இருந்தும் 150க்கும் அதிகமான தொழிலாள ஒடுக்கப்படும் இளைஞர்கள் பங்கு கொண்டனர். ஏகாபத்திய உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலகத் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டும் போராட்டத்துக்கும் அத்துடன் இணைந்த முறையில் இலங்கை உட்பட இந்தியத் துணைக்கண்டம் பூராவும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சிகளை தூக்கி வீசும் புரட்சிகரப் போராட்டத்துக்கும் தம்மை அர்ப்பணிக்க இவர்கள் முடிவு செய்தனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு கூட்டவுள்ள ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிரான தொழிலாளர்களின் உலக மகாநாட்டிற்கு ஆதரவு தெரிவிக்கும் பிரேரணை இந்த இளைஞர்

(11-ம் பக்கம் பார்க்க)



இளம் சோசலிஸ்டுகள் மகாநாட்டில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

www.padippakam.com



## 'இளம் சோசலிஸ்டுகள்' 10வது தேசிய மகாநாடு:

# 'நாம் சகாப்த நிர்மாணப் பணிக்குத் தோள் கொடுத்துள்ளோம்"

### — இளம் சோசலிஸ்டுகள் தேசிய செயலாளர்

''இளம் சோசலிஸ்டுகள்'' 10வது தேசிய மகாநாடு மிகவும் தீர்க்கமான சகாப்த நிர்மாணப் பணிக்குத் தோள் கொடுத்துள்ளது'' என மகாநாட்டின் அரசியல் அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசிய அதன் மாஜி—தேசியச் செயலாளர் தோழர் சமன் குணதாச குறிப்பிட்டார்.

''ஏகாதிபத்திய மையமான அமெரிக்கா, ஐரோப்பா தொடக்கம் ஆசியா, ஆபிரிக்காவின் முனை வரையுள்ள இளைஞர்களுக்கு ஏகாதிபத்தியம் வேலையின்மை, பட்டினி, யுத்தம், மரணத்தினையே வழங்கியுள்ளது. அமெரிக்காவில் 5 இளைஞர்களுக்கு ஒருவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டுள்ளார். அமெரிக்காவில் 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட இளைஞர்களே மோசமான வறுமையால் பீடிக்கப்பட்டுள்ளனர். 5 இலட்சம் பேர் ஆண்டுதோறும் கல்வியில் இருந்து வெளியேற்றப்படுகின்றனர். அமெரிக்காவில் வேலையின்மை நூற்றுக்கு 8.5%. பிரித்தானியாவில் 30 இலட்சம் பேருக்கு தொழில் இல்லை. அவுஸ்திரேலியாவில் 10 இலட்சம் பேர் வாழும் கைத்தொழில் நகரான லிவர்பூலில் வேலையற்றோர் வீதம் நூற்றுக்கு 30%: இந்தியாவில் வேலையற்றோர் 13 கோடி.''

இலங்கையில் வட — கீழ் மாகாணத்தில் இடம்பெறும் இனவாத யுத்தமும் தென் மாகாணங்களில் நடைபெறும் கிராமப்புறப் படுகொலைகளும் இந்த உலக நிலைமையின் வெளிப்பாடே எனச் சுட்டிக் காட்டிய தோழர். சமன். தொழிலாளர்— விவசாயிகளுக்கு எதிரான தாக்குதல்கள் இளைஞர்களுக்கு எதிரான பயங்கரங்களுடன் இணைந்து கொண்டுள்ளன எனக் குறிப்பிட்டார். ஏகாதிபத்திய சூறையாடல்களுக்கு காணிகளை பலியாக்குவதன் மூலம் அரசாங்கம் இளைஞர்களைப் பன்னாட்டு கம்பனிகளுக்கு அடிமைகளாக்கிவரும் முறைமையைத் தெளிவுபடுத்திய சமன், வேலையின்மையைப் பாவித்து மாதம் ரூபா - 700 - 1000 அற்ப சொற்ப சம்பளத்துக்கு இளைஞர்களை தொழில் பயிலுனர்கள் என்ற பேரில் திரட்டி. சுதந்திர வர்த்தக வலயங்களில் அடிமை முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக வலயம், இரத்மலானை கைத்தொழில் வலயம் போன்ற இடங்களில் சுரண்டல்களை உக்கிரமாக்கும்படி ஏகாதிபத்தியவாதிகள் நெருக்கி வருகின்றார்கள். தோட்டத்துறை, அரசாங்கத்துறைகளை முழுமனே தனியார்மயமாக்கவும், இலவசக் கல்வி போன்ற சேவைகளை அடியோடு அழித்தொழிக்கவும் ஏகாதிபத்திய வங்கியாளர்கள் செயல்பட்டு வருகின்றார்கள். வட—கீழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்களை நசுக்கும் பொருட்டு இனப் படுகொலை யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது. இவை எல்லாம் ஏகாதிபத்திய காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்திற்கு கீழ்ப்பட்ட-பிரேமதாச அரசாங்கத்தின் நடவடிக்கைகள்.

### முதலாளித்துவ நெருக்கடி

''முதலாளித்துவ அமைப்பினுள் அராஜக உற்பத்தி காரணமாக ஏற்பட்டுள்ள மேலதிக உற்பத்தியும் இலாப வீழ்ச்சியும் நெருக்கடியைச் சுட்டிக் காட்டுகின்றது. உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையேயான மோதுதல் முதலாளித்துவ நெருக்கடியின் அடிப்படையாக விளங்குகின்றது. தனிப்பட்ட சொத்து உரிமைகளைக் காக்கும் தேசிய அரசு முறையுடன் உலக உற்பத்தி உக்கிரமாக மோதிக் கொள்கின்றது.

'இன்று முதலாம் இரண்டாம் உலக யுத்தங்களுக்கு இட்டுச் சென்ற நெருக்கடி மோசமான முறையில் தலை நீட்டியுள்ளது. 'புதிய உலக அமைப்பு' பற்றி ஜோர்ஜ் புஷ் குறிப்பிடும் போது அது காலனிகளை தேடிக் கொள்ளும் அவசியத்தினைச் சுட்டிக் காட்டுகின்றது. ஈராக் யுத்தம், ஏகாதிபத்தியத்தின் இந்த புதிய உலக அமைப்பு என்னவென்பதை தெளிவுபடுத்தி உள்ளது. வியட்னாம், லிபியா, பனாமாவை ஆக்கிரமித்தவர்கள்—மிலேச்ச மாபியாகாரர்களுக்கு நிதி வழங்குபவர்கள் குவைத் மக்களை இரட்சிக்க ஆக்கிரமிப்புச்செய்தார்கள் என்பதை நம்புவதற்கு எவரும் இல்லை.'' என்றார்.

இந்த ஈராக் யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்திய நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள மோதுதல்களையும், கழுத்தறுப்புக்களையும் விபரிக்கையில் தோழர். சமன் கூறியதாவது: ''இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதலாளித்துவ நாடுகளிடையே மோதுதல் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அமைக்கப்பட்ட GATT போன்ற அமைப்புக்கள் தகர்ந்து போயுள்ளன. ஏகாதிபத்திய ஏழு வல்லரசுகளின் மகாநாட்டில் கலந்து கொண்டவர்களால் எந்தவொரு உடன்பாட்டுக்கும் வரமுடியாது போய்விட்டது.''

காலனித்துவ வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய முதலாளித்துவத் தலைவர்களின் நடைமுறையை விபரித்த தோழர். சமன், முதலாளித்துவத்தினைத் துடைத்துக் கட்டும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் கீழே மட்டுமே தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் விடுதலை அடையமுடியும் என்றார்.



தோழர். சமன் குணதாச உரைநிகழ்த்துகிறார்.

ஸ்டாலினிசஅதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்தின் முக்கிய எதிர்ப்புரட்சி ஏஜன்சியாகிவிட்டது என்ற நான்காம் அகிலத்தின் ஆய்வின் பிழையற்ற தன்மை இன்று கோடானுகோடி மக்கள் மத்தியில் ருசுவாகி வருவதாகக் குறிப்பிட்ட சமன், சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பாவில் முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்ய ஸ்டாலினிச அதிகாரத்துவம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை விளக்கினார்.

இந்நிலையில் உலகம் பூராவுமுள்ள குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்கள் ஏகாதிபத்திய திட்டங்களின் ஏஜன்டுகளாக மாறிய முறையைத்தெளிவுபடுத்திய சமன். மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வீ. பி) பாசிச இயக்கமாகிய வரலாற்றையும் மாநாட்டில் தெளிவுபடுத்தினார்.

''நான்காம் அகிலத்தினுள் தோன்றிய பப்லோவாத சந்தர்ப்பவாதிகள் - ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு அடிபணிந்த இந்தச் சந்தர்ப்பவாதிகள் இன்று ஏகாதிபத்தியத்துக்குச் சேவைசெய்யபுதிய மட்டத்திலான செயல்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். 1991 பெப்ரவரியில் நடைபெற்ற அவர்களின் மகாநாட்டில் பேசிய ஏர்ணஸ்ட் மண்டேல் என்ற பப்லோவாதி — எந்தவொரு அமைப்புடனும் வேலைத்திட்டம் பற்றித் கலந்துரையாடத் தாம் தயார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

''நா. அ. அ. குழுவுடன் பிளவுபட்டு, வலதுசாரிகள் பக்கம் சென்று பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சி ஓடுகாலிகளின் தலைவரான கிளிப் சுலோட்டர், சோவியத் யூனியன் சம்பவங்களையிட்டு தாம் புதுமையடைந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். மற்றோர் ஓடுகாலியான மைக்கேல் பண்டா, அனைத்துலகவாதம் என்பது தேசிய அரசு ஆட்சிகளைச் சிருஷ்டிப்பதும், பாதுகாப்பதுமே எனக் கூறியுள்ளார். இவை தற்செயலானவை அல்ல. இவர்கள் குழம்பிப்போன ஏகாதிபத்தியவாதிகளின் குட்டி முதலாளித்துவ ஏஜன்டுகளாகத் தோன்றியுள்ளனர். நா. அ. அ. கு. வின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் இயக்கம் என்ற முறையில் நாம் இந்த நெருக்கடியை முன்கூட்டியே கண்டோம் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கின்றோம். இதனாலேயே அனைத்துலகக் குழுவையும் அதன் இளைஞர் இயக்கத்தையும் கட்டி எழுப்புவது தீர்க்கமானது எனச் சுட்டிக்காட்டிப் போராடி வந்தோம்.

''மண்டேல், சுலோட்டர் அல்லது மற்றும் சந்தர்ப்பவாதிகளாகட்டும். நளின் டி. சில்வா, தயான்ஜயதிலக வகையறாவைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ ஏஜண்டுகளாகட்டும் சொல்வதென்ன? முதலாளித்துவம் மாபெரும் சக்தியாக உலகில் ஆளுமை கொண்டுள்ளது. தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் அதன் பலிகடாக்களாக விளங்க வேண்டும்!

ஆனால் நாம் இதிலிருந்து வேறுபட்ட சித்திரத்தினையே காண்பதாகக் குறிப்பிட்ட தோழர். சமன், உலகில் போலவே இலங்கையிலும் வளர்ச்சி கண்டுள்ள தொழிலாளர்களதும், இளைஞர்களதும் போராட்டங்களின் அபிவிருத்தியைச் சுட்டிககாட்டி அதனை நிரூபித்தார்,

### இலங்கை – தமிழ் ஈழம்

இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை ஸ்தாபிதம் செய்யும் வேலைத்திட்டத்தின் மூலம் மட்டுமே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்ய முடியும் எனக் குறிப்பிட்ட தோழர். சமன், விடுதலைப் புலிகள் தலைமையின் காட்டிக்கொடுப்பு பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்.

''விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள், இளைஞர்களின் மாபெரும் தியாகங்களைப் பாவித்து, இந்திய — இலங்கை முதலாளி வர்க்கங்களுடன் அல்லது ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசத்தினை சிருஷ்டிக்க முயற்சிக்கிறார்கள்,'' என்றார்.

### தொழிலாளர் பாதுகாப்பு

முதலாளித்துவ அரசினதும் குண்டர்களதும் தாக்குதல்களில் இருந்து தொழிலாளி வர்க்க அமைப்புக்களைக் காக்க தொழிலாளர் பாதுகாப்பு படை அணிகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்திய சமன், தொழிற்சங்கங்களுள் மாற்று புரட்சித் தலைமையை கட்டி எழுப்ப இளம் தொழிலாளர்களை முன்னணியில் நின்று போராடுமாறு வேண்டினார்.

'இளம் சோசலிஸ்டுகள்' முன்வைத்துள்ள முன்நோக்கினையும் வேலைத்திட்டத்தினையும் தமக்குப் புறம்பான ஒன்றாகக் கொள்ளாமல் அதனை தமது வாழ்க்கையின் ஒரு பாகமாகக் கொண்டு போராடும்படி தோழர். சமன் மகாநாட்டுக்கு வருகை தந்த இளைஞர்களை வேண்டிக் கொண்டார்.

மனித இனத்தின் விடுதலைக்காக நாம் போராடுவதானால் நாம் எந்தவொரு தடைக்கும் தலைகுனிய வேண்டியதில்லை என்ற கார்ல் மார்க்சின் இளமைக்கால ஆக்கங்களை நினைவு கூர்ந்த தோழர். சமன், நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் இடம் பெறவுள்ள உலக தொழிலாளர் மகாநாட்டைக் கட்டி எழுப்புவதற்கான அடிப்படையை விஸ்தரிக்கப் போராடும்படி வேண்டினார்.

படிப்பகம்

www.padippakam.com



# தோழர். பியதாசவின் வழியை கடைப்பிடியுங்கள்

## நினைவு தினக் கூட்டத்தில் பு. க. க. வேண்டுகோள்


புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரும், இராஜாங்கனை அமைப்பாளருமான தோழர். ஆர். பி. பியதாச யூ. என். பி. இனவாதிகளால் படுகொலை செய்யப்பட்ட 12வது ஆண்டு நிறைவு நினைவுக் கூட்டம் ஜூலை 17ம் திகதி இராஜாங்கனை பழைய பொலிஸ் நிலைய சந்திக்கு அருகே உள்ள பொது மைதானத்தில் நடைபெற்றது. தோழர். பியதாச 1979 ஜூலை 17ம் திகதி கைக்கூலி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டார்.

இந்த நினைவுக் கூட்டத்திற்கு தோழர். பியதாசவின் தாயார், சகோதரர்கள், ஆதரவாளர்களும் பிரதேச விவசாயிகளும், இளைஞர்களும் வருகை தந்திருந்தனர். பு.க.க, இளம் சோஷலிஸ்டுகள் சார்பில் பு. க. க. அங்கத்தினர்கள் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செய்ததோடு இரண்டு நிமிடங்கள் மௌனமும் அனுஷ்டிக்கப்பட்டது.

1979 ஜூலையில் யூ.என்.பி அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கொணர்ந்ததோடு பிரிகேடியர் வீரதுங்க தலைமையில் தமிழ் இளைஞர்களை வேட்டையாடும் நடவடிக்கைகளிலும் இறங்கியது. இச்சமயத்தில் தோழர். பியதாச முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தின் இனவெறிப் பிரச்சாரத்துக்கு எதிராக சிங்கள ஏழை விவசாயிகளிடையே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

தோழர். பியதாசவின் இந்தக் கொள்கை சார்ந்த நிலைப்பாடு காரணமாக அவர் பல முறை இராஜாங்கனைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதோடு, இடைவிடாத வேட்டைகளுக்கும் இலக்காகி வந்தார். இறுதியில் அவர் பொலிசாரின்பக்கபலத்துடன் கூடிய கைக்கூலி கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்டார். இந்த ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலும் பொலிசாருடன் கூட்டாகத் தொழிற்பட்டு வந்த நவசமசமாஜக் கட்சி ஆதரவாளர்கள் தோழர். பியதாசவின் கொலையின் அரசியல் உள்ளடக்கத்தை மூடிமறைக்கும் பொருட்டு இதனைத் 'தனிப்பட்ட' கொலையெனக் காட்டும் கடைகெட்ட பிரச்சாரங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

கிராமப்புற விவசாய இளைஞனாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பக்கம் ஈர்க்கப்பட்ட தோழர் பியதாச, தொழிலாள வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான புரட்சிகரப் பிணைப்பை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்ததோடு அந்த இலக்கினைப் பிற்போக்குத் தேசியவாதங்களுக்கு எதிராக அனைத்துலக முன்நோக்கின் அடிப்படையிலேயே ஊர்ஜிதம் செய்ய முடியும் என்பதில் உறுதியாக இருந்தார்.



தோழர். பியதாசவின் நினைவுத் தூபிக்கு அருகில் இடம்பெற்ற நினைவுக் கூட்டம். தூபிக்கு வலப்புறமாக நிற்பவர் பியதாசவின் தாயார்.

ஜூலை 17ம் திகதி இராஜாங்கனையில் நடைபெற்ற நினைவுதினக் கூட்டத்தில் பேசிய பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். டபிள்யூ ஏ. சுனில் கூறியதாவது: 12 ஆண்டுகளின் பின்னர் இன்று தோழர் பியதாசவை நினைவு கூரும் இவ்வேளையில் முன்னொரு போதும் இல்லாத விதத்தில் அனைத்துலக வேலைத்திட்டம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அவர் உலக சோசலிசப் புரட்சியின் பேரில் உயிர்த்தியாகம் செய்தார். வட - கீழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்துக்கு எதிரான யுத்தம் இனப்படுகொலை யுத்த மட்டத்துக்கு உயர்ந்துள்ளது. கிராமப்புற ஏழைகளுக்கும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதல், தமிழ் தேசிய இனத்தினதும் ஏழை விவசாயிகளதும் பிரச்சினையைத் தீர்ப்பதில் முதலாளி வர்க்கம் முழுமனே தோல்வி கண்டுவிட்டதைச் சுட்டிக்காட்டுகின்றது'' என்றார்.

தோழர். பியதாசவை நினைவுகூர வருகை தந்திருந்த அனைவரையும் அவர் கடைப்பிடித்த வழியில் பயணம் செய்யுமாறு தோழர். சுனில் வேண்டிக்கொண்டார்.

---

### சமசமாஜ — கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்கள்

# சந்திரசேகரனை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் இறங்காதது ஏன்?

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி. சந்திரசேகரன், செயலாளர் பி. ஏ. காதர், உப. தலைவர் டீ. எச் தர்மலிங்கம் ஆகியோரை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் இறங்கும்படி 'தொழிலாளர் பாதை'யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாள வர்க்கத்தை வேண்டுகின்றன.

சந்திரசேகரனும் ஏனையோரும் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது. அரசாங்கத்தையும் பொலிசாரையும் தவிர ஏனையோர் இத்தொழிற்சங்கத் தலைவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை அறியார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு இருந்ததாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக அரசாங்கம் கூறிக்கொண்டது,

நானாவிதமான முன்னணிகளில் சந்திரசேகரனுடன் கூடிக் குலாவி வந்த சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, அ. லி. சே. ச. தலைவர்களைப் போலல்லாது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணி அரசியலுக்கும் இடையே ஆழமான முரண்பாடுகள் உள்ளன. இருந்த மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஆனால் இந்த சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, அ. லி. சே, ச. தலைவர்கள் — சந்திரசேகரனின் நண்பர்கள் — சந்திரசேகரன் உட்பட சகலரையும் விடுதலை செய்ய பிரச்சாரம் செய்ய மறுப்பது ஏன்?

காரணம் மிகவும் தெளிவானது: இத்தலைவர்கள் தமிழ் ஒடுக்கப்படுவோரை நசுக்கும் இனவாதயுத்தத்தின் ஆதரவாளர்கள்; இனவாத முதலாளித்துவ அரசியலுக்கு அடிபணிந்தவர்கள்; முதலாளித்துவ அரசின் பாதுகாவலர்கள்.

முதலாளித்துவத் தலைவர் ஒருவர் முதலாளித்துவ அரசின் ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் போது கூட அதை எதிர்ப்பது தொழிலாள வர்க்கத்தின் நீண்டகாலபாரம்பரியமாகும். இதற்குக் காரணம்? ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் முதலாளி புரட்சியாளனாகவோ அல்லது தொழிலாள வர்க்க ஆதரவாளனாகவோ இருப்பதன்று. மாறாக அந்த ஒடுக்குமுறை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஒடுக்கு முறையைப் பலப்படுத்துவதாகும்; தயார் செய்வதாகும். சந்திரசேகரன் வேறு கோலத்தில் நின்று வந்தாலும் அவர் முதலாளித்துவ தலைவர் அன்று. சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சித்தலைவர்களைப்போலவே அவரும் அரசியலைக்கொண்டு நடாத்தும் ஒரு குட்டி முதலாளித்துவ, சந்தர்ப்பவாத தொழிற்சங்கத் தலைவரே. அவர் விடுதலை புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாக பொலிசாரும் அரசாங்கமும் கூறிக்கொள்கின்றன. தொழிற்சங்கம் உள்ளடங்கலான தொழிலாளர் வர்க்க அமைப்பு யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதை தீர்மானம் செய்ய முதலாளித்துவஅரசாங்கத்துக்கும்பொலிசுக்கும்உள்ள உரிமை என்ன? எந்தவொரு தொழிலாளர் அமைப்பினதும் தலைவரையும் கடத்திச் செல்லவும், சதிக் குற்றச் சாட்டுச் சுமத்தவும், தண்டனை விதிக்கவும் அரசாங்கம் செயலில் இறங்கியுள்ளது. சந்திரசேகரன் சம்பவம் மூலம் இது தெளிவாகி உள்ளது.

சந்திரசேகரன் சம்பவம், தொழிலாளர் இயக்கத்துக்கு எதிராக அரசாங்கம் திணிக்கப் போகும் ஒரு தொகை புதிய தாக்குதல்களின் ஆரம்பம் என்பதை இத்தலைவர்கள் அறிவர். தோட்டத்துறை ... தனியார்மயமாக்கலும் ...

இலட்சக்கணக்கான தொழில்களை நாசமாக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளது. எனவேதான் அரசாங்கத்துக்கு தொழிலாள வர்க்கத்தினை கிலியடையச் செய்வது அவசியமாகி உள்ளது.

இந்நிலையில் சகல தொழிலாளர்களும் தம்முன்னால் உள்ள ஆபத்தினைப் புரிந்து கொள்வது அவசியம். அதாவது, அரசாங்கம் தொடுக்கவுள்ள இத்தாக்குதல்களின் புதிய கட்டத்தையும், அதற்கு ஆதரவு தரும் தலைவர்களின் எதிர்ப்புரட்சி மௌனத்தையும் இனங்காண வேண்டும், தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் சந்திரசேகரன் உள்ளடங்கலான தொழிற்சங்கத் தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரும் பிரச்சாரத்தில் இறங்குவது மிகவும் தீர்க்கமானது. இப்பிரச்சாரம், சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும் வர்க்க நடவடிக்கையை ஏற்பாடு செய்யும் போராட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். தொழிற்சங்கம் உள்ளடங்கலான வர்க்க அமைப்புக்களுள் பிரேரணைகளை நிறைவேற்றுமாறும், இதை எதிர்க்கும் தலைவர்களை தொழிலாள வர்க்கத்துள்ளிருந்து விரட்டியடிக்குமாறும் நாம் வேண்டுகின்றோம்.

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்பு!

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்**

பெயர் : ........................................

முகவரி : ........................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர் :

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல : 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை

கொழும்பு — 10.

padippakam

www.padippakam.com



## குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத முடிவு

# விடுதலைப் புலிகள் தமிழ் விடுதலை இயக்கத்தை காட்டிக் கொடுக்கின்றது

**— நந்த விக்கிரமசிங்க —**

பாராளுமன்றத்தின் 9வது கூட்டத் தொடரை (ஏப்ரல் 18) ஆரம்பித்து வைத்து, ஜனாதிபதி பிரேமதாச ஆற்றிய உரையில் தமிழ் ஈழம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனைகளைத் 'தளர்த்துவது' பற்றி விடுத்த சமிக்ஞை தமிழ் தேசிய சிறுபான்மையினருக்கும் இலங்கைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய — முதலாளித்துவ சதியின் புதிய முனைப்பினைச் சுட்டிக் காட்டுகின்றது.

இனவாத யுத்தத்தின் புதிய சுற்றுத்தொடர் ஆரம்பமாகியதில் இருந்து, பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டின் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என பிரேமதாச அரசாங்கம் நிபந்தனை விதித்தது. இன்று அதைத் 'தளர்த்தி', தமது இலக்கினை ஆயுத பலத்தினால் வென்றுவிட முடியாது என்பதை விடுதலைப் புலிகள் பகிரங்கமாக ஒப்புக் கொண்டால் போதுமானது என்ற நிபந்தனையைமுன்வைத்துள்ளது, ஜனாதிபதி பிரேமதாச, தமிழ் ஈழம் தேசிய இனத்தினருக்கு எதிரான யுத்தத்தினை முன்னொரு போதும் இல்லாத விதத்தில் உக்கிரமாக்கியுள்ள தருணத்திலேயே இந்த அறிக்கையை விடுத்துள்ளார்.

விமானக் குண்டு வீச்சுக்கள் விமான ஷெல் அடிகள், உட்பட நவீன ஆயுதங்கள் கொண்டு சிங்கள முதலாளித்துவ அரசின் படைகள் தமிழ் ஈழம் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக முன்னொரு போதும் இல்லாத தாக்குதல்களைக் கட்டவிழ்த்ததோடு விடுதலைப் புலிகள் தலைமைக்கு விடுத்துள்ள இந்த அழைப்பின் அர்த்தம்: தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராளிகளை நசுக்கித் தள்ளும் அதே சமயம் விடுதலைப் புலிகள் தலைமையைத் தம்முடன் எதிர்ப்புரட்சிக் கூட்டில் சிக்கவைப்பதேயாகும்.

விடுதலைப் புலிகள் தலைமையைத் தம்முடன் எதிர்ப்புரட்சிக் கூட்டில் சிக்க வைக்கும் யூ. என். பி. அரசாங்கத்தின் அவசியம், முதலாளித்துவ ஆட்சி முகம் கொடுத்துள்ள மரண நெருக்கடியில் இருந்து தோன்றியுள்ளது.

வேகமாக உக்கிரமடைந்து வரும் உலக ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியினை, பிரேமதாச ஆட்சி காட்டும் புள்ளி விபரங்களால் தவிர்த்துவிட முடியாது. இதை அவர்கள் அறிவர். பாரம்பரிய அவ்வாறே புதிய கைத்தொழில் துறைகளின் வீழ்ச்சியும் உலக வங்கியின் கட்டளையின்படி அரசாங்கத் துறையில் இடம்பெறும் தொழில் வெட்டும், பிரமாண்டமான முறையில் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவும் தொழிலாள வர்க்கத்தின் சகல பிரிவினரையும்போராட்டத்தின் பாதையில் தள்ளுகின்றது.

இதற்கிடையே பட்டினிக்குள் தள்ளப்பட்டுள்ள கிராமப்புற விவசாயிகளின் கொதிப்பினை இலட்சக்கணக்கான கிராமப்புற இளைஞர்களைப் படுகொலை செய்வதன் மூலம் தணித்துவிட முடியவில்லை. உண்மையில் இது நாளாந்தம் உக்கிரம் கண்டு வருகின்றது.



ஆர். பிரேமதாச



விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள்

சோவியத் யூனியன், ஜேர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் மாபெரும் போராட்டங்களுடன் 5 இலட்சம் புகையிரதத் தொழிலாளர்கள் அமெரிக்காவில் போராட்டத்தில் குதித்தமை இலங்கை வங்குரோத்து முதலாளித்துவ ஆட்சியைக் கிடுநடுங்கச் செய்துள்ளது. இந்திய முதலாளித்துவ ஆட்சி முகம் கொடுக்கும் அரசியல் நெருக்கடியும், பங்களாதேஷ் மக்கள் கிளர்ச்சியும் இலங்கையினுள் மாபெரும் தொழிலாளர் கிளர்ச்சிக்கான காலம் அண்மித்துக் கொண்டுள்ளதைச் சுட்டிக் காட்டுகின்றது.

முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தம்மிடையேயான மோதுதல்களால் வேகமாகப் பிளவுண்டு வருகின்றனர். உலக ரீதியில் அதிகாரத்துவங்களுக்கு எதிரான தொழிலாளர் வர்க்கத்தின் பயணம், இலங்கையினுள் சமசமாஜ, ஸ்டாலினிச, நவசமசமாஜ இ. தொ. கா. தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் மேல் கொண்டிருந்த பிடியினைக் கடுமையாக ஆட்டம் காணச் செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் தலைமையை எதிர்ப்புரட்சிக் கொடுக்கல் வாங்கல்களில் பங்காளியாக்கிக் கொள்ளும் பொருட்டு ஏகாதிபத்திய — முதலாளித்துவ பிற்போக்கு எடுக்கும் முயற்சிகள் உண்மையில் காலம் நேரம் பார்த்து இடம்பெற்று வருபவையாகும். வேறுவார்த்தைகளில் சொன்னால் விடுதலைப் புலிகள் தலைமையின் சந்தர்ப்பவாத அரசியலை நன்கு புரிந்து கொண்டு செய்யப்படுபவையாகும்.

## சூழ்ச்சி

விடுதலை புலிகளின் வரலாற்று அறிக்கை அந்த இயக்கத்தினை எதிர்ப்புரட்சிக் கூட்டில் மாட்டி வைக்கப் பிரேமதாச அரசாங்கம் செய்யும் முயற்சியை முழுமனே நியாயப்படுத்துகின்றது.

சிங்கள முதலாளி வர்க்க அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதல் உக்கிரமடைந்த நிலைமையின் கீழ் விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதி லோரன்ஸ் திலகர், அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான பிரதிநிதியான பிரெட்மன் வீரக்கோனுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தால் மட்டுமே நாம் அரசாங்கத்துடன் சமாதானப்பேச்சுவார்த்தைக்குச் செல்வதாக திலகர் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டது.

இங்கு ஒருவர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவெனில், தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினரை நிராயுதபாணிகளாக்கும் தமது இலக்கினை முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எந்த விதத்திலும் கைவிட்டுவிட்டனர் என்பதைக் காட்டிக் கொள்ளாதுஇருப்பதேபிரேமதாச அரசாங்கத்தின் புதிய தந்திரமாகும். மறுபுறத்தில் இலங்கையினுள் ஆயுதம் தாங்க எந்தவொரு ஒடுக்கப்படும் மக்கட் பிரிவினருக்கும் இடமளிக்க முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தயாரில்லை என்பது அரசியலின் அரிச்சுவடியாகும் என்பதனை எவரும் மறந்துவிட முடியாது. எனவே தான் ''தேசிய சுயநிர்ணயத்தை கைவிடாமல்'' சிங்கள முதலாளித்துவ ஆட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்துவது பற்றிய விடுதலைப் புலிகள் தலைமையின் கதையளப்புக்களையிட்டு எவரும் ஏமாந்து போக முடியாது.

விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராட வில்லை எனவும் அவ்வாறு செய்வதில் தோல்விகண்டுவிட்டதாகவும் நிரூபித்து பல காலம் கடந்து விட்டது. உண்மையில் இன்று வெளிவெளியாக யூ. என். பி. அரசாங்கத்துடன் அணிதிரண்டுள்ள ஈ. பீ. ஆர் எல். எப். போன்ற ஏனைய தமிழ்குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்குப் போராடும் வல்லமை உள்ளடங்கி இருக்கவில்லை. அது அதன் சமூகத் தன்மையில் இருந்து தோன்றியது. அரசியலில் வெளிப்பட்டது.

குட்டி முதலாளித்துவ தலைமைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஏறுவது முழுத்தேசிய இனத்தினதும் — சிறப்பாக அத்தேசிய இனத்தின் ஒடுக்கப்படும் பிரிவினரின் விடுதலைக்காக அன்றி, சிறுபான்மை தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டுகையில் ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டாகச் செயற்படும் சிறப்பு உரிமையைத் தாம் பெற்றுக்கொள்ளவே. லெனின் இதனைத் தமது 'சோசலிச புரட்சியும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்:

''ஒடுக்கப்படும் நாடுகளின் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை ஏமாற்றும் பொருட்டு தேசிய விடுதலை பற்றிய சுலோகத்தினை அடிக்கடி பயன்படுத்துகின்றது. தமது உள்ளார்ந்த கொள்கைகளில் அவர்கள் இந்தச் சுலோகத்தினை மேன்மை தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்கு உடன்பாடுகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள். அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைகளில் அவர்கள் தமது பகற்கொள்ளைத் திட்டங்களை அமுல் செய்யும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசுகள் ஒன்றுடன் உடன்பாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்,'' (வி. ஐ. லெனின் நூற்தொகுதி இல 22 பக்கம். 148 — ஆங்கிலம்)

நிலைமை இப்படி இருக்கையில் 1947ன் பின்னர் 'குளிர் யுத்த' காலத்தில் ஏகாதிபத்தியத்துடன் ஸ்டாலினிச அதிகாரத்துவம் நடாத்திய கொடுக்கல் வாங்கல்களுக்கிடையே தமது தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ள முயன்ற தேசிய, குட்டி முதலாளித்துவ தலைமைகளையும் காணக் கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் இக்காலப் பகுதியின் கடைப்பாகத்தில் அரசியலில் இறங்கியதோடு அத்தகைய முயற்சிகளின் இலட்சணங்களையும் காணக் கூடியதாக இருந்தது. இன்று ஏகாதிபத்தியவாதிகளுடனும் சிங்கள தேசிய முதலாளி வர்க்கத்துடனும் பிரபாகரனின் முக்கிய தூதுவராகப் பணிபுரியும் அன்டன் பாலசிங்கம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை 'லெனினிச' வார்த்தைகளில் வர்ணிக்க முன்வந்ததும் இக் காலப்பகுதியிலேதான். விடுதலைப் புலிகளின் இந்த முதலாளித்துவ தேசியவாத நிலைப்பாடு பிரித்தானியத் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் மைகேல் பண்டா போன்ற ஓடுகாலிகளின் மெய்ச்சுதலுக்கும் கூட இலக்காகியது. எனினும் நவீன தொழில் நுட்பத்தினதும், உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தினதும் பரம்பலோடு உலக ஏகாதிபத்தியப் புதிய நெருக்கடிக் காலகட்டத்தினுள் காலடிவைத்தமையானது ஸ்டாலினிச அதிகாரத்துவங்களது வீழ்ச்சியுடனும் மத்திய கிழக்கு அமெரிக்க ஆக்கிரமிப்புடனும், ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான போட்டியை உக்கிரமாக்கியதுடனும், சமீபகாலத்தில் கண்டிராத முறையில் உலகத் தொழிலாள வர்க்கத்தினை அரசியல் கிளர்ச்சிக்குள் தள்ளும் நிலைமைகளை உருவாக்கியதன் மூலமும் வெளிப்பாடான உலக ஏகாதிபத்திய நெருக்கடியின் புதிய காலப் பகுதி தேசிய முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ தலைவர்களின் வெறும் உபாயங்களுக்கான வாய்ப்புக்களை வெட்டி வீழ்த்தியது. இந் நிலைமை விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்குப்

(9ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## குட்டி முதலாளி...
(8ம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தினை விரைவுபடுத்தியது. ஏகாதிபத்தியவாதிகளின் உலக அமைப்புக்கு வெளியே இவர்களுக்கு ஒதுக்கிடம் இருக்கவும் இல்லை.

இதன்படி ஏற்கனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்குஎதிராக வெளிவெளியாக போரிட்டுக் கொண்டுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். புளொட், டெலோ முதலான அமைப்புக்களைப் போலவே குட்டி முதலாளித்துவ இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கமும் ஆரம்பம் முதலே இந்திய முதலாளி வர்க்கமும் சிறப்பாக அதன் தமிழ்நாட்டுப் பிரிவும் நமது அமைப்புக்கு உதவி வழங்கும் என்பதை தமது அரசியலின் முக்கிய அங்கமாகக்கொண்டிருந்தன, இந்த நப்பாசை அவர்களால் தமிழ் தேசிய இனத்தினரிடையே விதைக்கப்பட்டது. இந்த விதத்தில் அவர்களின் 'சுயநிர்ணயம்' என்பது இந்திய முதலாளி வர்க்கத்தின் அவசியங்களுக்கும், நலன்களுக்கும் ஒத்துப்போவதாக விளங்கியது. இதன்படி தமது சுயநிர்ணயம் பிராந்தியத்தினுள் இந்தியாவின் பூகோள - அரயல் நலன்களுக்கு இணங்கியதாக அமையும் என விடுதலைப் புலிகள் தலைமை திரும்பத் திரும்பக் கூறி வந்தது.

இது இந்த அமைப்பின் ஏகாதிபத்தியச் சார்புடன் நெருக்கமாக இணைந்து கொண்டுள்ளது. 1947ல் இந்திய முதலாளி வர்க்கம் இப்பிராந்தியத்தில்ஏகாதிபத்திய அமைப்பின் முக்கிய பொலிஸ் பணியை பொறுப்பேற்றது. எனவே தான் நாம் விடுதலைப் புலிகள் இந்திய பூகோள — அரசியல் நலன்களை அங்கீகரிப்பதானது, ஏகாதிபத்திய அமைப்பினையே அங்கீகரிப்பதாகும் என சுட்டிக் காட்டுகின்றோம், இதிலிருந்து பெருக்கெடுக்கும் முடிவானது, விடுதலைப் புலிகள் இயக்கம் இன்று வளர்ச்சி கண்டு வரும் ஏகாதிபத்திய மோதுதல்களில் தமக்கு வாய்ப்பான ஏகாதிபத்திய அமைப்பின் வேறோர் சக்தி பக்கம் நாளை திரும்பாது என்பதைக் கருதுவதாகாது.

இந்த இயக்கம் தமது சந்தர்ப்பவாத அடிப்படையை மூடிக் கொள்ளும் பொருட்டு தாம் ஈடுபட்டுள்ள ஆயுதப் போராட்டத்தினை இடைவிடாது காட்டிக்கொண்டது. ஆனால் அவர்களின் மூலோபாயம், ஏகாதிபத்திய உலக அமைப்பினுள் கொடுக்கல் வாங்கல் உபாயத்தினைக் கடைப்பிடிப்பதே.' இதுவே உண்மை. ஆயுதப் போராட்டம், இந்த மூலோபாயத்துக்கு கீழான ஒரு உபாயம் மட்டுமே.

### மூலோபாயம்

1990 செப்டம்பரில் விடுதலைப் புலிகள் வெளியிட்ட 'விடுதலைப் புலி' என்ற பத்திரிகையில் நாது மேற்கண்ட மூலோபாயத்தினை [illegible] கண்டவாறு முன்வைத்திருந்
(25ம் பக்கம் பார்க்க)

### ஹிங்குருகமுவ ஜனவசம்:

# மூன்று தோட்டத் தொழிலாளர்கள் கடத்தப்பட்டனர்



1. பாலசுப்பிரமணியம 2. பாலகிருஷ்ணன் 3. பத்மநாதன்

1989 அக்டோபர் மாதம் 7ம் திகதி மாலை பதுளை பகுதி ஹிங்குருகமுவ ஜனவசம தோட்ட 'லயன்'களில் பாய்ந்த இருபத்தைந்து ஆயுதபாணிகள் தோட்ட தொழிலாளர் மூவரைக் கடத்திச் சென்றுள்ளனர். இன்றுவரை இத்தொழிலாளருக்கு என்ன நடந்ததுஎன்றுதெரியவில்லை அம்மூவரும் கொலையுண்டிருக்கலாமென அப்பிரதேச தொழிலாளர் அஞ்சுகின்றனா

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் ஆயுதபாணி குழுவானது, ஜீப், வான்களில் வந்ததாகவும்பொலிஸ் உடைதரித்த ஒருவரும் டீசேர்ட் கட்டைக்கால் சட்டை அணிந்தவர்களை உள்ளடக்கியிருந்ததாயும் கூறுகின்றனர்.

இந்தக் குழுவினர் லயன் தொழிலாளருக்கு ஆத்திரமூட்டும் வகையில் பேசியும் ஆண் தொழிலாளருக்கு ரைபிளால் அடித்தும் எஸ். பாலசுப்பிரமணியம் எஸ் - பாலகிருஷ்ணன் என்னும் தொழிலாளர் பற்றி விசாரித்துள்ளனர்.

ம, வி, முன்னணியினது ஒடுக்குமுறை நடந்த நாட்களில்தோட்டங்களில் வேலையில்லாததால் தொழிலாளர் தொழிற்சாலை, நகர்ப்புறங்களுக்கு சென்று கூலி வேலை செய்ய நேர்ந்தது. எஸ். பாலசுப்பிரமணியம் என்ற தொழிலாளி இந்நாட்களில் இங்ஙனம் தோட்டத்திற்கு வெளியே வேலை செய்து திரும்பும் போது வழியில் பிடிக்கப்பட்டார். தனது சிறு குழந்தைக்கு கொண்டு வந்த பிஸ்கட்டை கொடுத்துவிட்டு வருவதாக கூறியதற்கு கூட இடமளிக்கவில்லை. 35 வயதுடைய எஸ். பாலசுப்பிரமணியம் மூன்று பிள்ளைகளின் தகப்பனாவார்.

கொலையாளிகளால் கடத்தப்பட்ட எஸ், பாலகிருஷ்ணன்பாலசுப்பிரமணியத்தின் சகோதரனாவார். 34 வயது கொண்ட இரு பிள்ளைகளின் தகப்பனான இவர் தோட்டத்து நீர்த்தொட்டி காவற்காரனாவர். பயங்கரவாத செயல் மத்தியில் மனைவி செய்த எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது தனது கடமையை செய்ய வேலைக்கு சென்றவராவார் அவரையும் பிடித்த குண்டர்கள் வழியில் நின்ற எஸ். பத்மனாதன் என்ற 22 வயது இளம் தொழிலாளியையும் வாகனத்தில் இழுத்து போட்டு கொண்டு சென்றனர்,

பின்பு அவர்களிடம் உங்களுக்கு துப்பாக்கி தந்ததுயார் என கேட்டு தாக்கியுள்ளனர். லைன்காமராக்கள் இரண்டை பிடுங்கி சாமான்களை நொருக்கி ஆயுதங்களை தேடிய இவர்களால் ஒரு சிறு ஆயுத துண்டைக் கூட கண்டெடுக்க முடியவில்லை. இதே சமயம் தொழிலாளரது பிறப்புச்சான்றிதழ், விவாக சான்றிதழ்கள் கிழித்தெறியப்பட்டன,

பாலசுப்ரமணியம், பாலகிருஷ்ணன் இருவரதும் வயது முதிர்ந்த பெற்றோர் தமது புத்திரரை பற்றி பதுளை பொலிசில் விசாரித்து அழுத பொது அவர்களை எஸ். டி. எப். முகாமில் வைத்திருப்பதாக மட்டும் கூறியுள்ளனர்.

இத்தொழிலாளரைபிடித்து செல்கையில் இடை வழியில் சந்திரசிரி என்ற தோட்ட பாதுகாவல் சேவையாளரையும் வசந்தஎன்றசிங்களஇளைஞர் இருவரையும் பிடித்து சென்றனர். அவர்களை கண்ணைக்கட்டி கூட்டிசென்றனராம், பின் 12 நாட்களின் பின் வசந்தவும் 62 நாட்களின் பின் சந்திரசிரியும் விடுதலை செய்யப்பட்டனர்.

கடத்தப்பட்டதமிழ்தொழிலாளரை தேடி அவர்களது உறவினர் எல்லா இடமும் பூசா. முகாம் வரை தேடியுள்ளனர். எனினும் எதுவிதநுப்புமே இதுவரை கிடைக்க வில்லை.

இத்தொழிலாளர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த தொழில்சங்க அங்கத்தவராவர். இக்கடத்தல் குறித்து தொழிற்சங்கத் தலைமையிடம் கூறும்போது தாமும் கூட பயப்பிராந்தியுடன்இருப்பதாயும் தற்போது ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அரச பயங்கரவாத நீதியின் முன் இத்தலைமைகள் தொழிலாளருக்குஎந்தவொரு பாதுகாப்பையுமே வழங்க இலாயக்கற்றவை என்பதை தொழிலாளர் நன்கு உணர்ந்துள்ளனர்.

## களனி உப—வேந்தரின் தூண்டுதலால் பு. க. க. அங்கத்தவர் கைது

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவரும் 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்க தேசிய குழு உறுப்பினருமான எல். பி உதயபிரேம ஜூன் 6-ம் திகதி பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, மறுநாள் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கொழும்புபொதுஜன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவிருந்த மாணவர் மகாநாடு சம்பந்தமான துண்டுப் பிரசுரத்தினை களனி பல்கலைக் கழகத்துக்கு அருகே விநியோகித்து வேளையிலேயே இவர் பல்கலைக் கழக பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

பு. க. க. தலைமை உறுப்பினரான எச்.எம்.பி. ஹேரத் உப—வேந்தரைச் சந்தித்த போது, 'அனுமதியின்றி பல்கலைக் கழக வளவினுள்' துண்டுப் பிரசுரம் விநியோகித்ததாலேயே அவர் கைது செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். 'இன்னமும் புரட்சி பற்றிப் பேசுகின்றீர்களா' என கிலேடையாக கேட்ட உப—வேந்தர் 'வாழ்த்துக்கள்' எனவும் கூறியுள்ளார்.

உதயபிரேமவை பேலிய கொடை பொலிசுக்கு கொண்டு சென்ற பொலிசார் அங்கு அவரை தூஷணத்தில் ஏசி, 'கொல்வதாக' தலையில் அடித்துள்ளனர்.

பொலிசாரினதும் உப — வேந்தரினதும் இந்த நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு எதிராக குண்டர்களால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராகப் போராடுமாறு வேண்டுகின்றது.

## றுகுணை பல்கலைக் கழக மாணவர் கடத்தப்பட்டார்

றுகுணைப் பல்கலைக் கழக மாணவரான அமர ஜயன்த ஏப்ரல் 28ம் திகதி மாலை 1/30க்கு அம்பலாந் தோட்டையில் உள்ள அவரது வீட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார், 10நாட்கள் தடுத்து வைக்கப்பட்டதன் பின் இவர் விடுதலை செய்யப்பட்டார். ஜே. வி. பி.யுடன் தொடர்புண்டா? ஜே. வி. பி. பல்கலைக் கழகத்துள் செயற்படுகின்றதா 'ராக்கிங்குக்கு' தலைமை தாங்கினாயா! என்பன போன்ற கேள்விகள் அவரிடம் கேட்கப்பட்டுள்ளன,

## தலவாக்கலை கேம்பிரிஜ் தோட்டம்: தொழிலாளர் கடத்தலுக்கு எதிராக வேலைநிறுத்தம்

தலவாக்கலை லிந்துலை குறாப்பைச் சேர்ந்த கேம்பிரிஜ் தோட்ட கந்தையா சிவஞானம் (25 வயது) செல்லமுத்து சுவேந்திரநாதன் என்ற இளம் தொழிலாளர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். ஜூன் 16ம் திகதி இரவு 11 மணிக்கு சிவில் உடையில் வந்த கோஷ்டியினால் இவர், கள் இருவரும் டட்சன் பிகப் வண்டியில் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர், அறுவர் கொண்ட இந்தக் கடத்தல் கோஷ்டியில் ஒருவர் முகமூடி அணிந்திருந்தார். இவ்விரு தொழிலாளர்களும் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்கள்.

இக்கடத்தல் நடவடிக்கையைக் கண்டித்தும் இவ்விரு தொழிலாளர்களையும் உடனடியாகக் கையளிக்கும்படியும் கோரி மலையக மக்கள் முன்னணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் அங்கத்தினர்கள் ஜூன் 18ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தத்தில் சுமார் 1000 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

இவ்விரு தொழிலாளர்களும் இதற்கு முன்னர் ஈழவர் ஜனநாயக முன்னணி அலுவலகத்தில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடத்தல் நடவடிக்கைகள் தோட்டத் துறையில் உலக வங்கித் திட்டங்களை அமுல் செய்ய யூ. என். பி, அரசாங்கம் மேற்கொண்டு வரும் கொலைகார ஆத்திரமூட்டல் தயாரிப்புக்களின் ஒரு பாகமாகும்.

## லேவன் தோட்ட தாக்குதல்: தலைமைகள் மௌனம்

லேவன்ட் தோட்ட கீழ்க் கணக்கைச் சேர்ந்த விஜேகுமார் என்ற தொழிலாளி அங்கு சேவைபுரியும் இருவராலும் குண்டர்களாலும் தாக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலின் பின்னணியில் இனவாத மோதுதல்களை தூண்டி விடும் ஆபத்துள்ளதாக [illegible]

ஏப்ரல் 16ம் திகதி சிரிசேன, பிரேமரத்ன என்ற தொழிலாளிகள் இருவரும் விஜேகுமாரிடம் சாராயமும் கோழியும் கேட்டுள்ளனர். இதனால் உண்டான வாக்குவாதத்தை தொடர்ந்து இவர்கள் இருவரும் குண்டர்கள் சிலருடன் வந்து, விஜேகுமாரையும் [illegible]

படிப்பகம்

www.padippakam.com



# யூகோசலவாக்கியாவில் உள்நாட்டுப் போர்

யூகோசலவாக்கியாவில் நீண்டகாலமாக அபிவிருத்தி கண்டுவந்த அரசியல் நெருக்கடி, சுலோவினியா, குரோசியா குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்ததைத் தொடர்ந்து உள்நாட்டு யுத்தமாக வெடித்துள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் 100 தொழிலாளர்கள் கொல்லப்பட்டதோடு இராணுவ டாங்கிகள் நகரங்களையும், கிராமங்களையும் ஊடறுத்துச் செல்லும் நிலையிலும் குண்டுவீச்சு விமானங்கள் நகரங்களில் குண்டுகளைப் பொழிந்து தள்ளும் நிலையிலும் பல்லாயிரக்கணக்கானோரின் உயிர்கள் ஆபத்தினை எதிர்நோக்கியுள்ளது.

ஐரோப்பிய கமிஷனின் ஏற்பாட்டின் பேரில் செய்யப்பட்ட இரண்டு யுத்த நிறுத்த ஏற்பாடுகள் ஏற்கனவே தகர்ந்து போய்விட்டன. மூன்றாவது யுத்த நிறுத்தம், சுலோவினியா படைகள் எல்லைக் காவல் அரண்களை கைவிட்டுச் செல்ல வேண்டும் என்ற சமஷ்டி அரசாங்கத்தின் நிபந்தனையினால் சரிந்து கொட்டியுள்ளது.

'ஆஸ்திரியா, இத்தாலியுடன் யூகோலசலவாக்கியாவுக்கு தொடர்ந்து எல்லைகள் கிடையாது'' என சுலோவினியா தகவல் அமைச்சர் ஜெயிகோ காசின் பிரகடனம் செய்தார். அவை இத்தாலி, ஆஸ்திரியா, ஹங்கேரியுடனான 27 எல்லை கடவைகள் கைப்பற்றப்பட்டவை. அது தான் சமஷ்டிப் படைகளை தலையிடச் செய்தது.

யூகோசலவாக்கிய எல்லை நெடுகிலும் ஆஸ்திரியாவும் இத்தாலியும் படைகளை அணிதிரட்டி வருவதால் பரந்த அளவிலான யுத்தம் வெடிக்கும் ஆபத்து இந்த யுத்தத்தினுள் அடங்கியுள்ளது. அத்தோடு அமெரிக்க, ஜேர்மன், பிரித்தானிய, பிரான்சிய ஏகாதிபத்தியவாதிகள் பால்கனில் தமது முரண்பட்ட நலன்களுக்காகப் போட்டியிட்டு வருகின்றனர்.

5 மாதங்களுக்கு முன்னர் தான் புஷ் நிர்வாகம், பாரசீக வளைகுடா யுத்தத்தினை முடிவுக்குக் கொணர்ந்தது. பரந்தளவிலான மக்கட் படுகொலைகள் சமாதானத்தை உத்தரவாதம் செய்து 'ஒரு புதிய உலக ஒழுங்குக்கு அடித்தளமிடும் எனப் பிரகடனம் செய்தது. யூகோசலவாக்கிய நெருக்கடியின் வெடிப்பு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக்காட்டியது போன்று வளைகுடா யுத்தம் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான யுத்தத்தின் புதியகாலப் பகுதியின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது எனவும் அது பூகோளத்தின் ஒவ்வொரு பிராந்தியத்தினையும் உள்ளடக்கிக் கொள்ளும் ஆபத்து ஏற்பட்டுள்ளது எனவும் கூறியதை ருசுப்படுத்தியுள்ளது.

## நெருக்கடிக்கு தீர்வு


தொழிலாள வர்க்கம், சுலோவினிய மற்றும் குடியரசுகளைச் சேர்ந்த முதலாளித்துவ தேசியவாதிகளில் இருந்தும் பெல்கிரேட்டில் நாற்றம் எடுத்துள்ள ஸ்டாலினிசக் கருவிகளில் இருந்தும் விலகிச் செல்ல வேண்டும். இன்றைய நெருக்கடிக்கான தீர்வு, தேசியவாதிகள் கூறுவதுபோல் பிரிந்து செல்வதன் மூலமோ அல்லது யூகோசலவாக்கிய சமஷ்டியைப் பராமரிப்பதன் மூலமோ அன்றி ஐரோப்பிய ஐக்கியசோசலிசஅரசுகளினை அமைக்கும் போராட்டத்தின் பாகமாக பால்கனில் சோசலிச குடியரசுகளை அமைக்கப் போராடுவதன் மூலமே கிடைக்கும். இன்றைய அமைப்பினுள் தீர்வுக்கு வழியே கிடையாது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர், சகல ஏகாதிபத்தியவாதிகளதும் அச்சத்தினை வெளியிட்டார். ஆஸ்திரிய பிரபு பேர்டினன்ட் ஒரு சேர்பியன் தேசியவாதியால்சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து 1914ல் முதலாம் உலக யுத்தம் வெடித்தது போன்று, பால்கனில் ஏற்பட்டுள்ள இன்றைய தேசிய பதட்டமும் அதே நிலைமையை உண்டு பண்ணுமோ என அஞ்சுகின்றனர்.

''இந்த நாடு துண்டுபட்டுப் போவதால் ஏற்படக் கூடிய ஆபத்தினையிட்டு அச்சம் கொண்டுள்ளதாலேயே நாம் யூகோசலவாக்கியாவுக்கு வந்தோம். யூகோசலவாக்கியாவின்ஸ்திரமின்மையும் பிளவும் இங்கு மட்டுமல்ல பரந்த ரீதியில் ஐரோப்பாவிலும் மிகவும் துன்பகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என நினைக்கின்றோம்'' என பேக்கர் அச்சம் தெரிவித்தார்.

ஐரோப்பா பூராவும் தேசிய அரச அமைப்பு முறை அவ்வளவுக்கு உடைந்து போகும் நிலையில் உள்ளது. யூகோசலவாக்கியாவில் உள்ளது போல் தேசிய இன, மொழி தகராறுகள் கிழக்கு ஐரோப்பாவின் எந்தவொரு நாட்டிலும் வெடிக்கலாம். உறுதியான மேற்கு ஐரோப்பிய நாடுகள் எனக் கூறப்படும் ஸ்பெயின், பிரான்ஸ், பெல்ஜியம், சுவிஸ்லன்ட், பிரித்தானியாவிலும் நிலைமை இதுவே.

யூகோசலவாக்கியாவில்முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யவும் பல்வேறு ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு தமது சேவையை வழங்கவும் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சகல பகுதியினரும் கடைப்பிடித்து வந்த கொள்கைகளாலேயே இன்று சமஷ்டி ஆக சிதறுண்டு, உள்நாட்டு யுத்தம் வெடித்துள்ளது. யூகோசலவாக்கிய குடியரசுகளின் தலைவர்கள் தம்மை என்ன 'அரசியல் லேபல்'களில் ('ஜனநாயக', சோசலிச) அழைத்துக் கொண்டாலும் அவர்கள் அதிகாரத்துவத்தினதும், முதலாளி வர்க்கத்தினதும் போட்டிக் குழுக்களே.



கிளர்ச்சியாளர்களுக்கு' எதிரான சமஷ்டிப் படைகளின் தாக்குதல்

இத்தலைவர்கள் அனைவரும் தமது அரசியல் நடவடிக்கைகளை யூகோசலவாக்கிய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டிட்டோவின் காலம் வரை ஆராய்கின்றனர். இந்த தேசியவாதத் தலைவர்கள் தமது அதிகாரத்தினையும் சலுகைகளையும் காத்துக் கொள்ள முயல்கின்றனர். யூகோசலவாக்கிய தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான இயக்கத்தினை மூர்க்கமாக எதிர்க்கின்றனர்.

சேர்பியன் குடியரசின் தலைவர்கள் 'மார்க்சிஸ்டுகளும்' அல்லர் 'சோஷலிஸ்டுகளும்' அல்லர். அவர்கள் சேர்பியன் தேசியவாதிகள். அவர்களின் முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டம் 'மாபெரும் சேர்பியாவை கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது அவ்வாறே ஒரு இராணுவ சதி ஆபத்தினை தோற்றுவித்துள்ள இராணுவத் தலையீடானது 'சோசலிசத்தை' அமைக்கும் நோக்கில் இடம்பெறவில்லை. சமஷ்டி அதிகாரத்துவத்தின் ஒட்டுண்ணி, முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டத்தினைப் பேணவே அத்தலையீடு இடம் பெறுகின்றது. இந்த இராணுவத்தின் அதிகாரிகள் சிறப்பு வசதிகள் கொண்ட ஒரு தட்டினர்.

இதே சமயம் சேர்பியன் ஸ்டாலினிஸ்டுகள் சமஷ்டி அரச அமைப்பினை யூகோசலவாக்கியாவில் காக்கப் போராடி வருகின்றனர். ஏகாதிபத்திய முதலீடுகளை உள்ளீர்ப்பதே தமது நலன்களை காப்பதற்குச் சிறந்த வழி என இவர்கள் நினைக்கின்றனர். சுலோவீனியா, குரோசியாவில்தலையெடுத்து வரும் தேசியவாதக் கும்பல்கள், முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்து, ஏகாதிபத்திய உலகச் சந்தையுடன் இணைவதற்கு யூகோசலவாக்கிய சமஷ்டிக் குடியரசில் இருந்து விலகுவதே சிறந்த வழி என எண்ணுகின்றனர்.

### யுத்தத்தின் அடிப்படை

இன்று வெடித்துள்ள உள்நாட்டு யுத்தத்தின் அடிப்படை இதுதான்: ஒவ்வொரு தேசியவாதக் குழுக்களும் முதலாளித்துவப் புனருத்தாரணத்தினைப் பூரணத்துவம் செய்து வைக்கத் தலைகீழாக நின்று வருவதால் அவை தேசிய வெறுப்புக்களையும், இனவாத குரோதங்களையும் தூண்டி வருகின்றன. இதன் மூலம் தொழிலாள வர்க்கத்தினைப் பிளவுபடுத்த முயல்வதோடு தினமும் மோசமடைந்துவரும் பொருளாதார நிலைமையில் தொழிலாள வர்க்கத்திடையே வளர்ச்சி கண்டு வரும் கோபத்தினைத் திசை திருப்பவும் முயல்கின்றன.

சேர்பியாவில் பொனபாட்டிஸ்ட் மியோசேவிக்கும் ஸ்டாலினிசக் கருவிகளும் தேசியவாத வாயடிப்புக்கள் மூலம் கொசோவா மாகாணத்தில் உள்ள அல்பேனிய சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதலைத் தூண்டிவருகின்றனர். குரோஷியன்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களும் இடம் பெறுகின்றது.

குரோஷியா, வலதுசாரி குரோஷியன் ஜனநாயக யூனியன் கட்சியால் ஆளப்பட்டு வருகின்றது. மாஜி. ஸ்டாலினிச தலைவரான பிரான்சோ ருட்ஸ்மன், யூகோசலவாக்கியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டைக் கோரியுள்ளார், ருட்ஸ்மனின் அரை பொனபாட்டிச ஆட்சியானது இனவாத உசப்புணர்வுகளுக்குத் தூபம் போட்டுவரும் அதே வேளையில் ஜனநாயக உரிமைகள் மேல் இரக்கமற்ற தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றது. அரசாங்க நிறுவனங்களுக்கு குரோஷியன் அல்லாதோரை வேலைநீக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குரோஷியன் அரசாங்கத்துக்கு ஆதரவாக சத்தியப் பிரமாணம் செய்ய மறுப்போரும் வேலைநீக்கப்பட்டுள்ளனர். அரசாங்க தொலைக் காட்சிகள் சேப்ஸ்களை 'கிழைத்தேய காட்டுமிராண்டிகள்' என வருணித்துக் கொள்கின்றன.

இரண்டாம் உலக யுத்தத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான பிரிவினை இயக்கத்தில் இளம் ஜெனரலாக விளங்கிய ருட்ஷ்மன், இன்று 1941ல் நாசிப் படைகளின் கீழ் அமைக்கப்பட்ட பாசிச ஆட்சியின் தலைவரான அன்றி பவலிக்கை நினைவு கூர்ந்து கொள்கின்றார். பவலிக்கின் அரசாங்கம் ஹிட்லரின் எஸ். எஸ். படைகளைக் காட்டிலும் அதிகமான சேர்ப்ஸ், யூதர்கள்; ஜிப்ஸிஸ்களை கொன்று தள்ளியது.

தம்மை ஓர் 'ஜனநாயகவாதி'யாக அழைத்துக்கொள்ளும் சுலோவீனியன் தலைவரான மிலான் குகன், இந்நெருக்கடியில் ஏகாதிபத்தியவாதிகளை நேரடியாக இறக்கச் செயற்பட்டு வருகின்றார். இவர் சுலோவினியகம்யூனிஸ்ட் கட்சியின் மாஜி. தலைவராவார். கிழக்கு ஐரோப்பாவில் இருந்த தமது ஸ்டாலினிச சகாக்களைப் போலவே இவ

(11-ம் பக்கம் பார்க்க)

## லேவன் தோட்ட தாக்குதல் . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியையும் இரவில் தாக்கியுள்ளனர். ஒரு குண்டனிடம் துவக்கும் இருந்துள்ளது. இத்தாக்குதலில் பலத்த காயமடைந்த விஜேகுமார் கரவணங்கால ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு எதிராகவும் தொழிலாளர்களின் பந்தோபஸ்தினை உத்தரவாதம் செய்யும்படியும் கோரி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். ஏப்ரல் 17ம் திகதி பொலிசார் தோட்டத்துக்கு வந்த வேளையில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

18ம் திகதி காலை மீண்டும் தோட்டத்துக்கு வந்த பொலிசார் இந்தக் குழப்பத்தில் விஜேகுமாரும் வேறும்பலரும் சம்பந்தப்பட்டுள்ளதால் அவர்களையும் கைது செய்ய வேண்டும் என்றுள்ளனர். பொலிஸ் ஒடுக்குமுறையையிட்டுக் கிலியடைந்த தொழிலாளர்கள் ஒழிந்து கொண்டனர்,

''அடிவாங்கியதும் நாங்கள் பொலிஸ் பிடிப்பதும் எங்களையே. எம்மைத் தாக்கியவர்கள் சுதந்திரமாக உலாவுகிறார்கள். புதுமையான சட்டம்'' என இந்தத் தாக்குதலைப் பற்றி ஒரு பெண் தொழிலாளி 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு மத்தியில் தோட்டத் தொழிற் சங்கத் தலைவர்கள் மௌனம் சாதித்தனர். இதைப் பயன்படுத்தி பொலிசார் இனவாத ஒடுக்குமுறையை தோட்டத்தில் விஸ்தரித்தனர். தோட்டங்களை தனிப்பட்ட முதலாளிகளிடம் விற்றுத் தள்ளவும், தொழிலாளர்களுக்கு எஞ்சியுள்ள அற்ப, சொற்ப சலுகைகளையும் பிடுங்கிக் கொண்டு அவர்களை நடுரோட்டில் தள்ளவும் யூ. என். பி, அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

முன்னர் ஜே. வி. பி.யை ஒடுக்கும் சாட்டில் யூ.என்.பி, அரசாங்கம் இத்தோட்டங்களில் இராணுவ முகாம்களை அமைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

www.padippakam.com



# இளம் சோசலிஸ்டுகளின் 10வது தேசிய மகாநாடு...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது. அத்தோடு உலகம் பூராவும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிராக முதலாளித்துவ அரசுகள் நடாத்தி வரும் வேட்டைகளுக்கு கண்டனம் தெரிவிக்கும் பிரேரணையும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்யத் தொழிலாள வர்க்க இயக்கத்தினை அணிதிரளக் கோரும் பிரேரணையும் மகாநாட்டிற்கு வருகை தந்திருந்த தொழிலாளர்கள், இளைஞர்களின் முழு ஆதரவைப் பெற்று ஏகமனதாக நிறைவேறின.

மகாநாடு நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பும் போராட்டத்துக்கு உயிர்த் தியாகம் செய்த லியொன் ட்ரொட்ஸ்கி, லியொன் செடோவ் முதல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அங்கத்தவர்களான லக்ஷ்மன் வீரகோன், எல். ஜீ. குணதாச ஆர். பி. பியதாச, ஆர். ஏ. பிடவல, பீ. குணபால, கிரேஷன் கீகியனகே முதலான தோழர்களையும், பு. க. க. மாஜி. செயலாளர் கீர்த்தி பாலசூரிய, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அவுஸ்திரேலியக் கிளையான சோசலிச லேபர் லீக்கின் ஸ்ரீவ் லோங்ஸ்டாவ், இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிச தொழிலாளர் கழகத்தின் சேதுராமன் முதலான தோழர்களையும் நினைவு கூரும் பொருட்டு இருநிமிடங்கள் மௌனம் அனுஷ்டித்தது.

10வது தேசிய மகாநாட்டிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று உரை நிகழ்த்திய 'இளம் சோசலிஸ்டுகள் இயக்க உறுப்பினர் தோழர். டீ. ஜயசேகர கூறியதாவது: இம்மகாநாடு ஒரு வரலாற்று திருப்புமுனையில் இடம் பெறுகின்றது. உலக ஏகாதிபத்தியம் இன்று உலகினைத் தமக்கிடையே காலனிகளாகப் பங்கிட்டுக் கொள்ளும் மூன்றாம் உலக யுத்தத்துக்கான தயாரிப்பில் ஈடுபட்டுள்ளன. அந்த வேலைத்திட்டம் உலகம் பூராவும் —இந்தியத் துணைக் கண்டம் உட்பட அமுல் செய்யப்படும் முறையைத் தெளிவுபடுத்திய ஜயசேகர, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராகக் கூட்டி வரும் உலகத் தொழிலாளர் மகாநாட்டைக் கட்டி எழுப்பும் போராட்டத்தில் இணையுமாறும் அழைப்பு விடுத்தார்.

மகாநாட்டின் அரசியல் அறிக்கையை 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்கத் தேசியச் செயலாளர் தோழர். சமன் குணதாச சமர்ப்பித்தார். ஏகாதிபத்தியவாதிகளின் உலக யுத்த, காலனித்துவ தயாரிப்புக்களுக்கு மத்தியில் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ, தேசியவாத, ஸ்டாலினிச தலைவர்களின் துரோகங்களையும், வங்குரோத்தினையும் அவர் அம்பலப்படுத்தினார். அனைத்துலக முன்னோக்கினையும் வேலைத் திட்டத்தினையும் இலட்சோப லட்சம் தொழிலாள, ஒடுக்கப்படும் இளைஞர், யுவதிகளிடையே எடுத்துச் செல்வதன் அவசியத்தினை சமன் வலியுறுத்தினார்.

அரசியல் அறிக்கையைத் தொடர்ந்து இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கு கொண்ட இளைஞர்கள் தமது அனுபவங்களை விளக்கியதோடு, முதலாளித்துவத்தினைத் தூக்கி வீசும் பொருட்டு சோசலிசப் புரட்சியின் வழியில் இளைஞர்கள் பயணம் செய்ய வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினர்.

கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்துப் பேசிய சிலாபம் 'இளம் சோசலிஸ்டுகள்' அங்கத்தவரான நிஹால் கூறியதாவது: ''வடக்கு — கிழக்கு கடற் பிராந்தியத்தில் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தவர்கள் முதலாளித்துவ அரசாங்கத்தின் யுத்தம், இனவாத பிளவுகள், மோதுதல்களால் அங்கு செல்ல முடியாதிருப்பது அவர்களுடன் நாம் நடாத்திய கலந்துரையாடல் மூலம் தெரிய வந்தது. முதலாளிகளதும், குண்டர்களதும் மிரட்டல்கள்; தாக்குதல்களின் மத்தியில் மீனவர்கள் மிகவும் துக்ககரமான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இங்கு எமது தோழர்கள் சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் மீனவர்களை அணிதிரட்டப் போராடி வருகின்றார்கள்'' என்றார்.

தாதிகள் பயிற்சிக் கல்லூரி மாணவரும் 'இளம் சோசலிஸ்டுகள்' உறுப்பினருமான அஜித் கூறியதாவது: 'ஏகாதிபத்தியவாதிகள் இன்று இளைஞர்களுக்கு கொடுக்க கூடியதாகவுள்ளது யுத்தமும், பஞ்சமும், தொற்றுநோயும், மரணமுமே. ஆஸ்பத்திரி சேவையில் நூற்றுக்கு 50%ம் கூட இலவச சேவையாக இல்லை. அநேக சேவைகளுக்காகப் பணம் அறவிடப்படுகின்றது. அத்தோடு நோயாளியைக் கொண்டே வெளியில் இருந்து அவசியமான உபகரணங்களைத் தருவிக்கும் நிலைமையும் உருவாகியுள்ளது. தாதிகள் பயிற்சி கல்லூரியில் சேவை நிலைமைகள் வெட்டப்பட்டுள்ளதோடு நூல்நிலையம், தங்குமிடம், உணவு வசதிகள் கிடையாது. இவற்றினை எதிர்த்ததும் வேட்டைக்கு இலக்காகவேண்டியுள்ளது.'' என்றார்.

இலவசக் கல்வி வெட்டு, மாணவர் ஒடுக்கு முறை தொடர்பாக யூ. என். பி. அரசாங்கம் கடைப்பிடிக்கும் வேலைத் திட்டங்களைத் தெளிவுபடுத்திய இரத்மலானை சுதத் கூறியதாவது: ''இலங்கை மாணவர்கள் சில காலத்துக்கு முன்னர் தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் 'அணிதிரட்டப்பட்டிருந்தனர். பின்னர் ஏனையதுறைகளில் போன்றே தொழிலாளர் வர்க்கத் தலைவர்கள் மாணவர்களையும் காட்டிக் கொடுத்தனர். இதனாலேயே அவர்கள் ஜே. வி. பி.யால் [illegible]படும் நிலை உருவாகியதோடு, இளைஞர்

(8-ம் பக்கம் பார்க்க)

## உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு போராட சபதம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் ஜேர்மன் பேர்ளின் நகரில் கூட்டப்படவுள்ள ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்திற்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு இம்மகாநாடு தனது பேராதரவினை வழங்குகின்றது.

உலகம் பூராவும் ஏகாதிபத்தியவாதிகள் உலகினை தம்மிடையே காலனிகளாகப் பங்கிட்டுக் கொள்ளும் பகற் கொள்கை இலக்கில் மூன்றாவது அணுவாயுத உலக யுத்தத்துக்கு தயாராகி வரும் நிலையில் கூட்டப்படவுள்ள இம்மகாநாடு, ஏகாதிபத்தியவாதிகளின் அந்த நாசகார முயற்சிகளை தோற்கடிக்கும் பொருட்டு அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் ஏகாதிபத்தியத்தினை இப்பூகோளத்தில் இருந்து துடைத்துக்கட்டும் உலகச் சோசலிசப் புரட்சி முன்னோக்கினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

5 இலட்சத்துக்கு அதிகமான ஈராக்கிய மக்களைப் படுகொலை செய்தும் ஈராக்கின் பொருளாதார, கைத்தொழில் துறைகளை அடியோடு நாசமாக்கியும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியவாதிகள் நடாத்திய யுத்தம், திரும்பவும் மீண்டும் ஏகாதிபத்தியவாதிகள் உலக யுத்தத்துக்கும் திரும்பியதைச் சுட்டிக் காட்டுகின்றது. அவ்வாறே ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு எதிரான பொருளாதாரத் தடையைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க எழுவர் குழுவின் மகாநாட்டில் தீர்மானம் செய்தனர். பாரசிக வளைகுடாவிலும் வடக்கு ஈராக்கிலும் தமதுபடைகளை இருத்துவதன் மூலம் எண்ணெய் வளங்களைக் கொள்ளையடிக்கவும் மத்தியகிழக்கு ஒடுக்கப்படும் மக்களிடையே மோதுதல்களைத் தூண்டிவிடும் யுத்தத்துக்கு ஏகாதிபத்திய வல்லரசுகள் தயாராகி வருகின்றன. இதைக் குறிக்கும் விதத்தில் அமெரிக்க, பிரித்தானிய. பிரான்சிய ஏகாதிபத்தியத்தின் தலைவர்கள் மீண்டும் ஈராக்கினை தாக்கப் போவதாக எச்சரிக்கை செய்தனர்.

ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் உலகம் பூராவும்உள்ள தொழிலாளர் அதிகாரத்துவங்கள் - ஸ்டாலினிஸ்டுகள். சமூக ஜனநாயகவாதிகள், பப்லோவாதிகள் அத்தோடு அமெரிக்க AFL - சீ.I.O உட்பட தொழிற்சங்கத் தலைவர்கள் ஏகாதிபத்தியத்திற்கு முழு ஆதரவு வழங்கினர். இதன் மூலம் இந்தத் துரோகத் தொழிலாளர்தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகளின் உலக யுத்தத்தினதும் காலனித்துவ வேலைத்திட்டத்தினதும் அழிவுகளை உலகத் தொழிலாளர் – ஒடுக்கப்படும் மக்கள் மேல் திணிக்கும் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜன்டுகளாகச் செயற்படுகின்றார்கள் ஆதலால் இந்தச் சகல ஏகாதிபத்திய ஏஜண்டு அதிகாரத்துவங்களை தொழிவர்க்கத்திலிருந்து வெளி

(12-ம் பக்கம் பார்க்க)

## யூகோசலவாக்கியாவில் உள்நாட்டுப் போர்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டத்தினையே அமுல் செய்து வந்தார். ஆஸ்திரிய — ஹங்கேரி முடியாட்சியின் ஒரு பாகமாக விளங்கிய சுலோவீனியாவை இன்று ஆஸ்திரியாவின் ஒரு அரைக்காலனியாக மாற்றுவதே குகனின் திட்டம்.

### பொருள்ாதார நெருக்கடி

யூகோசலவாக்கியப் பொருளாதாரம் சரிந்து கொட்டி வருகின்றது. கடந்த 18மாதங்களில்தேசிய உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது. சக்தி வாய்ந்த சமஷ்டி வரவுசெலவுத்திட்டம் கிடையாது. செலவினங்கள், பண விநியோகம் மீது கட்டுப்பாடு கிடையாது. தொழிலாளருக்கு மாதக்கணக்காகச் சம்பளம் வழங்கப்படுவதில்லை.

தேசிய உணர்வுகளின் எழுச்சியானது எந்த விதத்திலும் அந்தப் பிற்போக்குச் சித்தாந்தங்களின் பலத்தைக் குறிக்கவில்லை. சனத்தொகையில் பெருவாரியானோரின் வாழ்க்கைத்தரத்தில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவாகிவரும் ஆத்திரம், அச்சம், விரக்தியை ஆளும் அதிகாரத்துவம் வேண்டுமென்றே சூறையாடி வருகின்றது.

தேசிய வாதத்தின் எழுச்சி, தொழிலாளி வர்க்கத் தலைமை நெருக்கடியின் மிகவும் குரூரமான வடிவமாகும். தொழிலாளி வர்க்கம் நெருக்கடிக்கு தனது தீர்வினை முன்வைத்து சுயாதீனமான முறையில் முன்னேறுமானால் இந்தச் சகல பிற்போக்கு தேசியவாத வாயடிப்புக்களும் மறைந்து போகும்.

யூகோசலவாக்கியாவில் ஏற்பட்ட இந்த உள்நாட்டு யுத்தத்தினை உலக ஏகாதிபத்தியத்தின் சகல தட்டினரும் தமக்குச் சார்பாகப் பயன்படுத்தும் சூழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இத்தாலியும், ஆஸ்திரியாவும் தமது படைகளை யூகோசலவாக்கிய எல்லைப் பிராந்தியத்தில் அணிதிரட்டுவது பற்றி அறிவித்துள்ளன. இவ்விரு நாடுகளும் ஹப்ஸ்பேக் குடியரசு காலத்தில் இருந்தே யூகோசலவாக்கிய பிராந்தியத்துக்கு உரிமை கோரி வந்துள்ளன. ஹோமன் குடியரசு காலத்திலும் கூட இக்கோரிக்கை இருந்து வந்தது.

ஜேர்மன் ஆட்சியாளர்கள், பிரிவினைவாதிகளுக்கு எதிரான யூகோசலவாக்கிய நடவடிக்கையையிட்டு கண்டனக் குரல் எழுப்பியுள்ளனர். சமஷ்டி அரசாங்கம் பெருமளவிலான படைகளை குரோஷியா சுலோவினியா பக்கம் அனுப்பியதை கண்டித்த ஜேர்மன் வெளிநாட்டு அமைச்சர் ஹென்சர், இராணுவத்துக்குப் 'பைத்தியம் பிடித்துவிட்டது. இவர்கள் நாகரீகமான நடத்தைக்கு அப்பால் சென்றுவிட்டார்கள் என்பதை நாம் புரிய வைக்க வேண்டியுள்ளது''என்றுள்ளார்.

இந்நெருக்கடி ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வளர்ச்சி கண்டு வரும் பதட்ட நிலையை மேலும் உக்கிரம் அடையச் செய்துள்ளது. குரோஷியாவும் சுலோவினியாவும் சுதந்திரப் பிரகடனம் செய்த வேளையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஐக்கிய யூகோசலவாக்கிய அரசுக்கு தனதுஆதரவினைத் தெரிவித்துக் கொண்டது. பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்தது. ஐரோப்பிய அரசுகள் பிரிவினைக் குடியரசுகள் பக்கம் நின்று கொண்ட வேளையில் புஷ் நிர்வாகம், யூகோசலவாக்கிய தேசிய ஐக்கியம் பற்றிப் பேசிக் கொண்டு 'இரத்தக் களரியை தவிர்ப்பதே' முக்கிய பணி என்றது.

பால்கன் நெருக்கடிக்கு ஏகாதிபத்தியவாதிகளதும முதலாளித்துவ தேசியவாதிகளதும் நாற்றம் கண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினதும் பிற்போக்குச் சதிகளுக்கு எதிராகத் தொழிலாள வர்க்கம் தனது சொந்த சுயாதீன வேலைத்திட்டத்தினை முன்வைக்க வேண்டும். தேசிய எல்லைகளைத் திரும்ப வரைவதன் மூலமோ அல்லது எந்த தேசிய இனம் வரலாற்று ரீதியில் நின்றுபிடிக்கும் என்பதை தீர்மானிப்பதன் மூலமோ பிரச்சினைக்குத் தீர்வு கிட்டிவிடாது. இதைச் சகலரும் புரிந்து கொள்ள வேண்டும், உண்மையில் யூகோசலவாக்கிய நெருக்கடியின் வரலாற்று முக்கியத்துவம், சகல உருவிலான தேசிய அமைப்புக்களதும் வங்குரோத்தினைகாட்டுகின்றது. தொழிலாளி வர்க்கம் தேசிய அரசு முறையை தூக்கி வீசும் ஒரு உயர் வடிவிலான சமூக அமைப்பு முறையை முன்வைக்க வேண்டும்.

www.padippakam.com



# இனவாத யுத்தத்தினால்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது.

இந்த இனவாத யுத்தம் எங்ஙனம் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் இல்லையோ அப்படியே இந்த யுத்தத்தில் — ஆணையிறவைக் கைப்பற்றியதில் — முதலாளித்துவ அரசாங்கம் அடைந்த இராணுவ வெற்றிகள் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் வெற்றியாகிவிடாது. உண்மையில் இது தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நாடு பூராவும் பிரேமதாச அரசாங்கம் நடாத்திவரும் யுத்தத்தில் ஒரு முன்னணியே. 1990 ஜூனில் யுத்தத்தின் புதிய கட்டத்தினைப் பிரேமதாச அரசாங்கம் ஆரம்பித்து வைத்த வேளையில் அதன் எதிர்ப்புரட்சி இலக்குப் பற்றி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின்வருமாறு எச்சரிக்கை செய்தது: ''இது ஏகாதிபத்தியச் சார்பு சிங்கள இனவாத ஆட்சியாளர்கள், ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பித்து சிங்கள — தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் மக்கள் மேல் காட்டுமிராண்டிச்சர்வாதிகாரத்தை திணிப்பதன் மூலம் முடித்து வைக்கத் தொடங்கியுள்ள யுத்தமாகும்'' (கம்கறு — மாவத்த' — 22-06-1990)

இந்த இலக்குகளை அடையும் பொருட்டுவெறிகொண்டு செயற்படும் யூ. என். பி. அரசாங்கம், கடந்த ஆண்டு பூராவும் வட-கீழ் மாகாண யுத்தத்தினை மிலேச்சமான முறையில் தொடர்ந்து நடாத்தியது. அத்தோடு ஏனையமாகாணங்களில் தொழிலாளர்கள், ஏழைகளின் தொழில் வாழ்க்கைத் தரங்களை அடிப்படை ஜனநாயக உரிமைகளை நாசமாக்கும் தாக்குதலை உக்கிரமாக்கியது. கடந்த ஆண்டில் மட்டும் விடுதலைப் போராளிகள் தவிர சுமார் 10 ஆயிரம் தமிழ் பொது மக்கள் யுத்தத்தில் கொலையுண்டனர். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் தேசிய இனத்தினரின் அரைவாசிக்கு மேற்பட்டோரின் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர். உணவு, மருந்துப் பொருட்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் தடைசெய்யப்பட்டது. இதனால் இப்பிரதேச மக்கள் பட்டினிக்கும் நோய் நொடிகளுக்கும் இலக்காகினர்.

பிரேமதாச அரசாங்கம் இந்த இனவாத யுத்தத்தின் புதிய கட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ஒரு ஆண்டுக்கு முன்னர் - 1989 - தென் மாகாண கிராமப்புறங்களில் ஏழைகளை ஒடுக்கித்தள்ளும் பொருட்டு நடாத்திய படுகொலை இயக்கத்தின் மூலம் சுமார் 1 இலட்சம் இளைஞர்களை சுட்டுப் பொசுக்கியதோடு மற்றும் 17000 இளைஞர்களை பயங்கரச் சிறைக்கூடங்களில் தள்ளியது.

யூ. என். பி. அரசாங்கம் இந்த யுத்தத்தினை ஏகாதிபத்திய கடன்களை கொண்டு மக்களை நசுக்கிப் பிழிவதன் மூலமும் நடாத்தி வருகின்றது. கடந்த ஆண்டில் மட்டும் இந்த இனப்படுகொலை யுத்தத்துக்கு 2090 கோடி ரூபாக்களை அரசாங்கம் செலவிட்டது. அரச படைகள் அடைந்த தோல்விகளும், பின்வாங்கல்களும் ஒன்று இரண்டல்ல. கடந்த ஆண்டில் மட்டும் சுமார் 1500 அரசாங்கப் படையினர் கொல்லப்பட்டனர். இதைவிட இரண்டு மடங்கினர் அங்கவீனர்களாகினர். இருந்த போதிலும் இந்த இனப்படுகொலை யுத்தத்தினைத் தொடர்ந்து நடாத்துவது முதலாளி வர்க்கத்துக்கு வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பிரச்சினையாகியுள்ளது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினை சிதறடிக்கும் அதே வேளையில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை இனவாத யுத்தப் பளுவினால் நசுக்கியும் இராணுவ பயங்கரத்தினை கட்டவிழ்த்தும் ஏகாதிபத்திய பகற்கொள்ளைச் சுரண்டலுக்கு வாய்ப்பான களத்தினை சிருஷ்டிக்கும் நடவடிக்கைகளில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி கட்டளையின் பேரில் அரசாங்கத் துறையில் 91,000 தொழில்களை வெட்டியுள்ள அரசாங்கம், தோட்டத் துறையில் தனியார்மயமாக்கம் மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வேலைகளுக்கு உலைவைக்க முயன்று வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிலங்களை கையளிக்கும் திட்டத்துடன் முழு நாட்டினையும் சுதந்திர வர்த்தக வலயமாக்குவதே தமது திட்டம் என ஜனாதிபதி பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு உதவி வழங்கும் குழுவின் கூட்டம் 1992 ஜனவரிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ள நிலைமையில் அதன் திட்டங்களை முழுமனே அமுல் செய்ய யூ. என். பி. அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. இந்த இலட்சணத்தில்தான் வட - கீழ் மாகாண தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக நடாத்தி வரும் யுத்தம் 'நாட்டின் இறைமையை காக்க'' என யூ. என். பி. அரசாங்கம் கூறிக் கொள்கின்றது.

வட - கீழ் மாகாண யுத்தத்துடன் இணைந்த முறையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இனவாதத்தினை தூண்டி விடும் நடவடிக்கைகளில் யூ. என். பி. அரசாங்கமும் ஆயுதப்படைகளும் ஈடுபட்டுள்ளன. தோட்டத்துறையில் இராணுவமும் பொலிசும் இணைந்து ஊர்வலம் நடாத்தி, தொழிலாளர்களை கிலியடையச் செய்ய முயல்கின்றன. இதே யுத்தத்தின் மூலம் நாடுபூராவும் உள்ள தொழிலாளர்கள் மேல் பாய்ந்து விழவும் அரசு எங்ஙனம் செயற்படுகின்றது என்பதற்கு இது நல்லதோர் உதாரணம். மேல் மாகாணத்தில் 'பயங்கரவாத தாக்குதல்' பற்றிய பீதியைப் பரப்பி, 'பெயர் விபரங்களை திரட்டி' வரும் அரசாங்கம் இவற்றின் மூலம் தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு கால்கட்டுப்போட முயல்கிறது. பிரேமதாச அரசாங்கம் 'வெகுஜன தொடர்பு சாதன கமிஷன்' மூலம் அவசரகாலச் சட்டத்தை சாதாரண சட்டமாக்கவும் தொழிற்பட்டு வருகின்றது. இதன் மூலம் பத்திரிகைகள் செய்தி சேகரித்த 'மூலங்களை' அம்பலப்படுத்த வேண்டும்.

இன்று பிரேமதாச அரசாங்கம் நடைமுறைப்படுத்துவது ஏகாதிபத்தியவாதிகளது உலக யுத்தம் காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ் தீர்மானம் செய்யப்பட்ட கொள்கைகளே. இக்கொள்கைகளை அமுல் செய்ய ஏகாதிபத்தியம் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உதவி வழங்கும் குழு' ஆதியனவற்றைப் பயன்படுத்துகின்றது.

## இந்தியா

இந்தியாவில் நரசிம்மராவ் அரசாங்கம் அமுல் செய்து வரும் கொள்கைகள் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் ஆக்கிரமிப்பினையும் தேசிய முதலாளி வர்க்கத்தின் தலைகுனிவையும் தெளிவுபடுத்தியுள்ளது. நரசிம்மராவ் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த ஒரு சில வாரங்களுள் 'நேரு சோசலிசம்', 'கூட்டுச்சேராமை' மோசடிகள் அம்பலமாகியதோடு, முழு நாட்டினையும் ஏகாதிபத்திய வங்கியாளர்களிடம் ஈடு வைக்க காங்கிரஸ் கட்சி அரசாங்கம் முன்வந்தது. வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சலைக் கட்டுப்படுத்தும் வெளிநாட்டுச் செலாவணி விதிகள், ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கத் தொடங்கிய நரசிம்மராவ் அரசாங்கம், அரச நிறுவனங்களை பரந்தளவில் தனியார்மயமாக்கவும் ஆரம்பித்துள்ளது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைக் காக்கும் அதே சமயம் ஏகாதிபத்தியவாதிகளதும் பிராந்தியத்தின் பிற்போக்கு ஆட்சியாளர்களதும் உதவியுடன் தமிழ் முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைத் திணிக்கும் விடுதலைப் புலிகளின் வேலைத்திட்டத்தின் மூலம் அந்த உரிமையைப் பேணிக் கொள்ள முடியாது எனக் கூறி வைக்கின்றது. பிரேமதாச அரசாங்கத்துடன் அவர்கள் இராணுவ ரீதியில் மோதிக் கொண்டாலும் அவர்களின் யுத்தம் இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே இடம்பெறுகின்றது. அத்தகைய வேலைத்திட்டம் ஏகாதிபத்தியத்தின் காலனிமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கைத்தேங்காயாகும் ஆபத்து உண்டு. அவ்வாறே ஏகாதிபத்தியவாதிகளதும் பிரேமதாச அரசாங்கத்தினதும் தாக்குதலுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஐக்கியப்படுவதனை தடுக்கும் இனவாத பிளவுகளுக்கு அந்த முதலாளித்துவ வேலைத்திட்டம் சேவகம் செய்யும் ஆபத்தும் உள்ளது.

பிரேமதாச அரசாங்கத்தின் இராணுவ இயக்கத்துக்கு 'ஆமா' போடும் சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்களின் - தேசிய சோசலிச போதனைகள் உலக வங்கியினதும், பன்னாட்டு ஏகபோகங்களதும் ஏஜன்டாக செயற்படுகின்றது. எனவே தான் பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கு புதிய பாதை அவசியமாகியுள்ளது. அப்பாதை, இத்தலைவர்களின் தேசியவாத குப்பை கூழங்களை துடைத்துக் கட்டி, உலக பாட்டாளி வர்க்கத்துடன் ஐக்கியத்தினை உறுதி செய்வதாக விளங்க வேண்டும். அந்த இலக்கில் இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை கட்டி எழுப்புவதன் பாகமாக தமிழ் ஈழம் - இலங்கை சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைக்கும் வேலைத்திட்டத்திற்குப் போராட வேண்டும்.

இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒரு ஆளோ வழங்காதே! தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையைப் பேணு! வடக்கு - கிழக்கில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்று!

★ கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! அரசியல் கைதிகளை விடுதலை செய்!

★ உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் வேலைத்திட்டங்களுக்கு எதிராக - முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிராகப் போராடு! பிரேமதாச அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் அமைப்புக்கள் இந்த பிரேரணைகளை நிறைவேற்றி, பிரச்சாரத்தினை ஆரம்பிக்க வேண்டும்.

# உலகத் தொழிலாளர்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

யேற்றி புரட்சித் தலைமையாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினை உலகளாவிய ரீதியில் கட்டி எழுப்புவதன் மூலமே உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர்களை அணி திரட்ட முடியும்.

இந்நூற்றாண்டில ஏகாதிபத்தியவாதிகள் இருதடவை உலகினை காலனிகளாகப் பகிரும் யுத்தத்தின் மூலம் கோடானுகோடி தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும், பேரளவிலான உற்பத்திச் சக்திகளையும் அழித்தொழித்தனர். முதலாம் உலக யுத்தத்தில் சமூக ஜனநாயகவாத தலைவர்கள் தத்தம், நாடுகளின் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கங்களின் பின்னால் அணி திரண்டு தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை யுத்தத்தின் பேரழிவுக்கு பலியாக்கினர். இரண்டாம் உலக யுத்தத்தின் போது சமூக ஜனநாயகவாதிகளை அணிதிரட்டிய ஸ்டாலினிசத் தலைவர்கள் ஏகாதிபத்திய பகற்கொள்ளை யுத்தத்துக்கு பூரண ஆதரவு வழங்கியதன் மூலம், மீண்டும் ஒரு தடவை தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை இரத்தப்பலியெடுக்க உதவினர். அத்துடன் நின்றுவிடாது இத்துரோகிகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்தியத்துடன் புரட்சிகரமான முறையில் கணக்குவழக்குகளைத் தீர்த்துக் கொள்ள அனைத்துலகத் தொழிலாள வர்க்கம் எடுத்த முயற்சியைத் தடுத்ததோடு உலகம் பூராவும் சமபல நிலையை ஏகாதிபத்தியம் சிருஷ்டிக்கப் பூரண முண்டு வழங்கினர்.

இன்று ஸ்டாலினிச, சமூக ஜனநாயக தலைவர்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் திணிக்கப்பட்ட ஏகாதிபத்திய உலக அமைப்புக்கு அடிபணிந்த பப்லோவாத திரிபுவாதிகள் உள்ளடங்கலான துரோகத் தொழிலாளர் தலைவர்களும் மூன்றாம் அனுவாயுத உலக யுத்தத்துக்கு உலகத் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்த ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவு வழங்க முன் வந்துள்ளனர்,

முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்து தத்தம் நாடுகளில் ஏகாதிபத்திய நிதி மூலதனத்தின் சுரண்டலுக்கு களம் அமைத்துக் கொடுக்க சோவியத் யூனியன். கிழக்கு ஐரோப்பா, சீனா வியட்னாம் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் கடைப்பிடித்துவரும் வேலைத்திட்டங்கள் ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் வேலைத்திட்டத்துடன் இணைந்தன. இந்தியாவிலும் இலங்கையிலும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசாங்கங்கள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைப்படி இந்நாடுகளை ஏகாதிபத்திய யுத்தம், காலனித்துவ திட்டங்களுடன் முழுமனே இணைத்துக் கொண்டுள்ளனர். சிலாபத்தில் 350 ஏக்கர் நிலம் ;வொயிஸ் ஒப் அமெரிக்கா' — யுத்தக் குரல் நிலையத்துக்கு ஒதுக்கிக் கொடுத்ததன் மூலம் பிரேமதாச அரசாங்கம் இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்திய இராணுவ மோதுதல்களுக்கு இலங்கையில் திடல் அமைத்துக் கொடுத்துள்ளது. இந்தியாவில் சீபிஐ. சீபிஎம் ஸ்டாலினிச கட்சிகளின் தலைவர்களும் இலங்கையில் சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா, தம்பு தலைமைகளும் ஏகாதிபத்திய யுத்த திட்டங்களுக்குள் முழுமனே இணைந்து கொண்டு தத்தம் நாடுகளில் முதலாளித்துவ அரசாங்க, ஏகாதிபத்திய யுத்தத்தயாரிப்புக்களின் பின்னால் அணிதிரண்டுள்ளனர்.

இந்நிலையில் இலங்கையினுள் யூ. என். பி—சி. ல. சு. க, ஏகாதிபத்திய சார்பு அரசியல் கட்சிகளுக்கு ஆதரவு தரும் சமசமாஜ கம்யூனிச நவசமசமாஜ, இ. தொ. கா, தம்பு போன்ற துரோகத் தலைமையை வெளியேற்றி இந்தியத் துணைக்கண்டத்தினுள் சீபிஐ சீபிஎம் கட்சிகளை வெளியேற்றியும் தொழிலாள வர்க்கப் புரட்சித் தலைமையாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தையும் இந்தியாவில் அதன் சகோதர இயக்கமான சோசலிச தொழிலாளர் கழகத்தையும் கட்டி எழுப்புவது பெரிதும் தீர்க்கமானது. அதன் பேரில் போராட இந்த இளம் சோசலிஸ்டுகள் மகாநாடு சபதம் பூணுகின்றது. அவ்வாறே நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கினை இந்தியத் துணைக்கண்டம் பூராவுமுள்ள கோடானுகோடி தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதன் மூலம் பேர்ளினில் நடைபெறும் உலக தொழிலாளர் மகாநாட்டிற்கு பலம்வாய்ந்த பேராளர் குழுவை அனுப்ப இம்மகாநாடு சபதம் பூணுகின்றது,

கொழும்பு—10, 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை இலக்கம் 90ல், வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால்
மஹரகம நாகஹவத்தை வீதி 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

www.padippakam.com



# "தொழிலாளர் பாதைக்கு" எதிரான விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டலை தோற்கடி!

செப்டம்பர் 7ல் ஸ்டுட்காட்டில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் இசைவிழாவில் (DGB-ஜேர்மன் தொழிற் சங்க சம்மேளனம்) மண்டபத்தின் வெளியே நின்று தொழிலாளர் பாதை விநியோகித்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ் கழகத்தின் ஜேர்மன் பிரிவின் அங்கத்தவர்களை விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமை தடுத்து நிறுத்த எடுத்த முயற்சி தோற்கடிக்கப் பட்டது.

முதலில் இத்தலைவர்களில் ஒருவர் பு.க.க. அங்கத்தவர்களை மண்டபத்தின் வாயிலில் இருந்து முற்றாக வெளியேற்றும் நோக்கத்துடன் ஒரு தந்திரத்தைப் பாவித்தார். மாதந்தோறும் தானும் தொழிலாளர் பாதை வாங்குவதாகவும் வாயிலில் நின்று பத்திரிகை விற்காமல் வீதியில் போய் விற்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலாக பு.க.க. அங்கத்தவர்களால் இது நடை பாதை இதில் நின்றுதான் நாம் தொழிலாளர் பாதை விநியோகிப்போம், இது எமது ஜனநாயக உரிமை எனக் கூறப்பட்டது. இதைக் கேட்டு சகிக்க முடியாத இத் தலைவர் நீங்கள் இவ் விடத்தை விட்டு போகாவிடில் நாமும் இதில் நாலுபேரை நிறுத்தி தொழிலாளர் பாதைக்கு எதிராக செயல்படவேண்டி நேரும் எனக் கூறி, தொடர்ந்தாற்போல் வருபவர்களிடம் தொழிலாளர் பாதையை யாருமே வேண்டாதீர்கள் எனக் கூச்சல் போட்டார். இவ்வாறு ஆத்திரமூட்டல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திற்கு எதிராகவும், தொழிலாளர் பாதைக்கு எதிராகவும் புலிகளின் தலைமையின் ஆத்திரமூட்டல் உண்மையில் அனைத்து ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும், தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்திற்கும் எதிரானது என்பதை அனைத்து தொழிலாளர்களும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

மேலும் இவ் ஆத்திரமூட்டல் ஒரு தற்செயல் நிகழ்வு என்றோ அல்லது இதை தலைமை தாங்கி நடத்திவைத்த ஒரு சில தனிப்பட்ட விடுதலைப் புலி அங்கத்தவர்களின் விருப்பு, வெறுப்பு, ஆத்திரமூட்டலோ அல்ல, மாறாக குட்டி முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கத்தின் ஒட்டுமொத்தமான வர்க்க நலன்கள் அடிப்படையில் ஒரு சுயாதீனமான தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்கு நேர் எதிரானது என்பதை இனம் காணப்படல் வேண்டும்.

தமிழ் மக்களின் பரம விரோதியான இனவாத பிரேமதாசா அரசாங்கத்துடனும், இந்திய முதலாளித்துவத்துடனும் நெருக்கமான உறவுகளை வைத்துக்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைமைக்கும், அதன் முதலாளித்துவ வேலைத்திட்டத்திற்கும் எதிராக இலங்கையில் பு.க.க. மட்டுமே தமிழ் சிங்கள தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டிப் போராடுகின்றது. இன்று இந்தப் போராட்டம் தொழிலாள வர்க்கத்திற்குள் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்துவதுடன், இதுவரையிலும் இலங்கையில் இனவாதத்திற்கு அடிபணிந்த பாரம்பரிய தொழிலாள வர்க்கக் கட்சிகளான லங்காசமசமாஜக் கட்சி, நவசமசமாஜக் கட்சி, சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமைகளிற்கு எதிராகவும், சிறப்பாக வடக்கு, கிழக்கில் தமிழ் தேசிய குட்டி முதலாளித்துவ இயக்கங்களிற்கு எதிராகவும் தொழிலாள வர்க்கம் கிளர்ந்தெழுந்து வருகிறது.

இந்நிலையில் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களையும், தொழிலாள வர்க்கத்தையும் தனது வங்குரோத்து தேசியவாத வேலைத்திட்டத்தின் கீழ் மீண்டும் கட்டுப்படுத்த எடுத்த முயற்சியின் ஒரு வெளிப்பாடுதான் தொழிலாளர் பாதைக்கு எதிரான விடுதலைப் புலிகளின் நடவடிக்கையாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும், புரட்சிக் கம்யூனிஸ் கழகமும் உலகெங்கிலுமுள்ள அனைத்து வகையறக்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ தேசியவாத தலைமைகளிடமிருந்து தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்திற்கும், அதை சோசலிசப் புரட்சியின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் புரட்சிகர தலைமையை நிர்மாணிப்பதற்காகவும் போராடுகின்றது.

இதைத் தொடர்ந்து பு.க.க. அங்கத்தவர்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேற்றும் முயற்சியில் ஜேர்மன் தொழிற்சங்கசம்மேளனத்தின் மண்டப நிர்வாகிகள் எமக்கெதிராக தலைமை தாங்கிய விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களால் கொண்டுவரப்பட்டனர். இது மிகவும் தெளிவாக ஜேர்மன் தொழிற்சங்க (DGB) சம்மேளனத்தின் அதிகாரத்துவங்களுக்கும், அதன் அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமைக்கும் இடையேயுள்ள பிரிக்கமுடியாத முதலாளித்துவ வர்க்க உறவை தெளிவாக எடுத்துக் காட்டியது. புலிகளின் தலைமை தொழிற்சங்க சம்மேளன அதிகாரத்துவங்களுடன் இணைந்து பு.க.க. அங்கத்தவர்களை பொலிசில் பிடித்து கொடுப்போம் என மிரட்டியதுடன் பு.க.க. அங்கத்தவர்கள் தெருவில் நின்று பத்திரிகை விற்பதையும் தடை செய்யும் நோக்கில் புலிகளின் தலைமை மண்டபத்தை அண்மித்துள சந்து, பொந்து, பல இடங்களிலும் தமது அங்கத்தவர்களை நிறுத்தி பு.க.க. எதிரான பிரச்சாரத்திலும், தொழிலாளர் பாதை பத்திரிகையை தொழிலாளர்கள், இளைஞர்களை வேண்ட விடாமல் தடுப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நடவடிக்கையானது ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள், தொழிலாளர்களை குட்டி முதலாளித்துவ இயக்கங்களான ரெலோ, புளட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈரோஸ் போன்றவை பிரேமதாசா அரசாங்கத்துடன் இணைந்து செய்த காட்டிக்கொடுப்புகளையும் துரோகங்களையும் தமிழ் மக்கள் எவ்வாறு விளங்கிக் கொண்டு அவற்றை வெறுத்து ஒதுக்கினார்களோ அந்த திசையில் இன்று விடுதலைப் புலிகள் பயணம் செய்வதின் பகிரங்கமான வெளிப்பாடே இதுவாகும்.

மத்திய கிழக்கில் ஈராக்குக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் யுத்தம் சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு ஒரு தீர்க்கமான அனுபவமாகவும், அதே சமயம் உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள், ஏழை விவசாயிகளை தனக்குப் பின்னால் அணிதிரட்டிக்கொள்ளவேண்டிய துரித கதியையும் அறிவிக்கின்றது. மறுபக்கத்தில் யுத்தத்தின் கோரமான அழிவுகளை நியாயப்படுத்திய ஸ்ராலினிசம் முதல் கொண்டு, சமூக ஜனநாயகம், மற்றும் ஏனைய மத்தியவாத, குட்டி முதலாளித்துவ தேசியவாத வீரர்கள் வரையிலும் இவ் யுத்தத்தின் பங்காளிகளாகவும், ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் ஏஜண்டுகளாகவும் தம்மை மாற்றிக் கொண்டுள்ளனர். இதற்கு விடுதலைப் புலிகள் தலைமை அடிமைப்பட்டுப் போவது ஒன்றும் ஆச்சரியமில்லை.

தொழிலாளர் பாதை இதழ் 40ல் மிகவும் சரியாக கூறியுள்ளபடி "விடுதலைப் புலிகள் இயக்கம் தாம் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்காகப் போராடவில்லையெனவும், அவ்வாறு செய்வதில் தோல்வி கண்டுவிட்டதாகவும் நிரூபித்து பல காலம் கடந்துவிட்டது. உண்மையில் வெளிவெளியாக யூ.என்.பி. அரசாங்கத்துடன் அணிதிரண்டுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். போன்ற ஏனைய தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உள்ளும் தமிழ் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமைக்காக போராடும் வல்லமை உள்ளடங்கி இருக்கவில்லை. இது அதன் சமூகத் தன்மையில் இருந்து தோன்றியது, அரசியலில் வெளிப்பாடாகியது. குட்டி முதலாளித்துவத் தலைமைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுவது முழுத் தேசிய இனத்தினதும், சிறப்பாக அத்தேசிய இனத்தின் ஒடுக்கப்படும் பிரிவினரின் விடுதலைக்காக அன்றி சிறு பான்மை தேசிய இனத்தின் தொழிலாள வர்க்கத்தைச் சுரண்டுகையில், ஏகாதிபத்தியத்தின் ஏஜண்டாகச் செயல்படும் சிறப்பு உரிமையைத் தாம் பெற்றுக்கொள்ளவே. லெனின் இதனைத் தமது 'சோசலிசப் புரட்சியும், தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையும்' என்ற கட்டுரையில் பின்வருமாறு தெளிவுபடுத்தினர். ஒடுக்கப்படும் நாடுகளின் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை ஏமாற்றும் பொருட்டு தேசிய விடுதலை பற்றிய சுலோகத்தினை அடிக்கடி பயன்படுத்துகின்றனர். தமது உள்ளார்ந்த கொள்கைகளில் இவர்கள் இந்த சுலோகத்தின் மேன்மையை தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்துடன் பிற்போக்கு உடன்பாடுகளுக்காகப் பயன்படுத்துகின்றனர். அவர்களின் வெளிநாட்டுக் கொள்கைகளில், அவர்கள் தமது பகற் கொள்ளைத் திட்டங்களை அமுல் செய்யும் பொருட்டு ஏகாதிபத்திய வல்லரசு ஒன்றுடன் உடன்பாட்டுக்குச் செல்ல முயற்சிக்கின்றனர்." (லெனின் நூல் தொகுதி இல.22, பக்கம் 148, ஆங்கிலம்)

இதனால்தான் இத் தமிழ் தேசிய முதலாளித்துவத் தலைமைகள் தமிழ் விடுதலைப் போராட்டம் எங்கே கை நழுவிப்போய் ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஒரு போராட்டமாக வெடிக்காமலும், தமது நலன்கள், சலுகைகளுக்கு ஆபத்து நேரிடாமலும் பார்த்துக்கொள்வதில் அக்கறையாய் உள்ளனர்.

இதுவே விடுதலைப் புலிகளின் தலைமை வளர்ச்சியடைந்துவரும் ஒரு சுயாதீனமான தொழிலாள வர்க்கத்தின் தலையீட்டைக் கண்டு பேரதிர்ச்சியும், கிலியும் கொண்டுள்ளது. இக் காரணிகளே அவர்களை பு.க.க.த்தின் மீதும், தொழிலாளர் பாதை மீதும் வெறுப்படைய வைத்தது. இந்நிலைமைகளில் விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுத் தலைமையும், அவர்களின தும் ஏஜண்டுகளினதும் ஆத்திரமூட்டல் பிரச்சாரத்தினை முறியடித்த ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களும், தொழிலாளர்களும் பு.க.கழகத்திற்கு தமது ஆதரவை வழங்கினர். இடுபது தொழிலாளர் பாதையும், ஆறு "ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்!" - எனும் கல்விட மே மாதத்தில் வெளியான அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனமும் விற்கப்பட்டதுடன், துண்டுப் பிரசுரமும் (இது கடந்த 17 ஜூலை பொன்னில் நடைபெற்ற ஊர்வலத்தில் அரசியல் தஞ்சம் கோரியோரை நாடு கடத்தும் ஜேர்மன் முதலாளித்துவத் திட்டத்திற்கு எதிராக போராடிய ஒரேயொரு சர்வதேச தொழிலாள வர்க்கக் கட்சியான பு.க.கழகத்தால் விநியோகிக்கப்பட்டது) விநியோகிக்கப்பட்டு, நிதியும் சேகரிக்கப்பட்டது.

நாம் சில தொழிலாளர்கள், இளைஞர்களோடு எமது உலக சோசலிச வேலைத்திட்டத்தினடிப்படையில் கலந்துரையாடுகையில் அவர்களில் ஒருவர் ஏற்கனவே பு.க.க.த்தின் முன்னோக்குகள் சிலவற்றை படித்திருப்பதாகவும், எமது போராட்டத்தை அறிந்திருப்பதாகவும் கூறினர், அவர்கள் மேலும் கூறுகையில் "இலங்கையில் விசேடமாக ஒடுக்கப்பட்ட தமிழ், சிங்கள மக்களை இனவாதத்திற்கும், யு.என்.பி. அரசாங்கத்திற்கும் கீழ்ப்படுத்திய தொழிலாள வர்க்கத் தலைமைகள் முதல் தமிழ்த்தேசிய மக்களின் சுய நிர்ணய உரிமையைக் காட்டிக்கொடுத்த அனைத்துகுட்டி முதலாளித்துவ தலைமைகள் வரையிலும் படு பிற்போக்கானவர்களே. இவர்களை நிட்சயமாக தொழிலாளவர்க்க இயக்கங்களிலிருந்து வெளியேற்றி தோற்கடிப்பதும், தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்திற்காகப் போராடுவதும் மிகவும் முக்கியமானது" என்றனர்.

இத் தொழிலாளர், இளைஞர்களது கருத்து மிகவும் அடிப்படையில் பு.க.க.த்தின் முன்னோக்குகளை நிரூபிப்பதுடன் தொடர்ச்சியான, விட்டுக்கொடுக்காத போராட்டத்தை தொழிலாளவர்க்கத்திற்கு விரோதமான அனைத்து போக்குகளிற்கும் எதிராக போராட வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் தேசிய சுய நிர்ணய உரிமைக்காக போராடுவதாகக் கூறிக்கொண்ட அனைத்து குட்டி முதலாளித்துவ தமிழ் தேசிய விடுதலை இயக்கங்களான ரெலோ ஈ.பி.ஆர்.எல்.எவ், புளட், ஈரோஸ் போன்றவை இன்று அப்பட்டமாகவே தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத பிரேமதாசா அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியின் பின்னணியில் நடைபெற்ற இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டு விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை முதலில் ஒப்படைத்தனர். பின்னர் நிர்ப்பந்தம் காரணமாக இந்திய இராணுவத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. இந்திய இராணுவம் வடக்கு, கிழக்கை விட்டு வெளியேறியதும், விடுதலைப்புலிகள் பிரேமதாசா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்கு சென்று தாம தமழ மககளுக்கான மாவட்ட சுயாட்சிக்கு உடன்படுவதாகக் கூறிக் கொண்டது. இது சுய நிர்ணய உரிமைக்கான கோரிக்கையை முழுமையாகத் தூக்கியெறிந்து துரோகம் செய்ததின் வெளிப்பாடாகும். பின்னர் பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் விடுதலைப் புலிகள் மீண்டும் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க நிர்பந்திக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதாசா அரசுக்கும் இடையேயான இப்பேச்சுவார்த்தையை ஒடுக்கப்பட்ட தமிழ் மக்கள் முற்றாக வெறுத்து ஒதுக்கியதன் வெளிப்பாடாகவே இந்திய இராணுவ விலகலுக்குப் பின்னால் யு.என்.பி. அரசாங்கத்தால் வடக்கு, கிழக்கு பகுதிகளில் மறுபடியும் அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்களை அவ்விடங்களை விட்டு அப்புறப்படுத்தும் நோக்கில் தமிழ் மக்கள் அவற்றை சூழ அணிதிரண்டனர். இத் தாக்கத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் மீண்டுமொருமுறை இலங்கை இராணுவத்திற்கு எதிராக இராணுவப் போரில் இறங்க நெருக்கப்பட்டது. இவற்றிற்கு இடையே ஒரு புறத்தில் விடுதலைப் புலிகள் ஆழமான நெருக்கடியை முகம்கொடுக்கின்றனர். மறுபுறத்தில் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களையும், தொழிலாள வர்க்கத்தையும் விடுதலைப் புலிகள் ஒரு முட்டுச்சந்தியில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறார்கள் என்பதை தமிழ்மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கியுள்ளனர் இதேபோன்று விடுதலைப் புலிகளால் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பதையும் உணரத்தொடங்கியுள்ளார்கள்.

(17-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



## 'இளம் சோசலிஸ்டுகள்' 10வது தேசிய மகாநாடு:

# "மகாநாடு ஒரு பலம் வாய்ந்த புரட்சிகரக் கூ

**இளம் சோசலிஸ்டுகளின 10வது தேசிய மகாநாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு பதிலிறுத்து புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகசெயலாளர் தோழர், விஜே டயஸ் நிகழ்த்திய பதிலுரையின் சுருக்கம்'**



பதிலுரை நிகழ்த்தும் தோழர் விஜே டயஸ்

மகாநாட்டின் இறுதியில் நிகழ்த்தும் இந்தப் பதிலுரை சம்பந்தமான எனது பொறுப்பு இலகுவாகியுள்ளதையிட்டு மகாநாட்டின் கலந்துரையாடலில் கலந்து கொண்ட சகல தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கின்றேன். இளம் தோழர்கள் தத்தமக்குரிய பொருளாதார, சமூகத் துறைகளில் தாம் முகம் கொடுத்துள்ள சகிக்க முடியாத பிரச்சினைகளை மனந்திறந்து பேசினார்கள். அத்துடன் நின்றுவிடாது அவற்றுக்குப் பதில்காண புரட்சிகரத் தலைமையைக் காட்டி எழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடனும் 'இளம் சோசலிஸ்டுகள்' இயக்கத்துடனும் இணைந்து போராட அனைவரும் முடிவு செய்தமை பெரும் மகிழ்ச்சி தருகின்றது.

இந்நிலையில் இம்மகாநாட்டின் முக்கியத்துவத்தினையும் இதில் கலந்து கொண்டோரின் பணியையும் பற்றி நான் சற்றுசுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன். இம்மகாநாடு அதன் சேர்க்கை மூலமே இந்நாட்டின் தொழிலாள — ஒடுக்கப்படும் இளம் பரம்பரையினரைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. மாணவர்கள், நகர்ப்புற-கிராமப்புற வேலையற்ற இளைஞர்கள், பயிற்சி பெறும் தொழிலாளர்கள், கைத்தொழில், தோட்ட தொழிலாளர்கள், சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் யுவதிகள் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர். இது இந்நாட்டினுள் வளர்ச்சி கண்டு வரும் வர்க்கப் போராட்டத்தின் தன்மையை பறைசாற்றுகின்றது. அவர்கள் இம்மகாநாட்டில் தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களை படுகேவலமாகக் காட்டிக் கொடுத்தசமசமாஜ-கம்யூனிச-நவசமசமாஜ - இ. தொ. கா. தலைவர்களின் துரோகங்களுக்கு எதிராக நீண்ட அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களுடன் சேர்ந்துள்ளனர். இது பக்கம் பலம் வாய்ந்த கூட்டாகும்.

ஆதலால் இளம் சோசலிஸ்டுகளின் இந்த 10வது தேசிய மகாநாடு இலங்கை — தமிழ் ஈழத்தினைப் பொறுத்தமட்டில் மட்டுமன்றி முழு இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தமட்டிலும் — தீர்க்கமான ஒரு வழிகாட்டியாகும். ஏகாதிபத்திய அமைப்பினுள் ஒருபோதும்தீர்த்துக்கொள்ள முடியாத முரண்பாடுகள் வெடித்துவந்த இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஏகாதிபத்திய உலக யுத்தத்துக்கும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகவும் இந்தியத் துணைக் கண்டத்தில் தேசிய சுதந்திரத்தினையும் தேசிய ஐக்கியத்தினையும் ஊர்ஜிதம் செய்யும் சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதில் இலங்கை ட்ரொட்ஸ்கிஸ்டுகளே முன்நின்றனர். இந்த வரலாற்றுப் புரட்சிகர பாரம்பரியங்களை இந்தியத் துணைக் கண்ட மக்கள் இயக்கத்தினுள் உயிரூட்ட வேண்டிய - உயிரூட்டக் கூடிய புறநிலை நிலைமைகளுக்குஇன்று நாம் முகம் கொடுத்துள்ளோம். இம்மகாநாட்டின் தீர்க்கமான தன்மை அங்கிருந்துதான் பெருக்கெடுக்கின்றது. மகாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்நோக்குப் பத்திரம் - உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினை சகல தோழர்களும் அங்கீகரிப்பது அந்த விதத்தில் முக்கியம்.

## முன்நோக்கும் தொழிற்பாடும்

இத்துடன் இன்னுமோர் விடயத்தை தெளிவுபடுத்துவது எமது கடமை. முன்நோக்கினை நிறைவேற்றுவது ஏனைய நடவடிக்கைகளுக்காக தீர்மானம் செய்வதாகும் என்பதை வலியுறுத்த வேண்டும். அது வரலாற்று, புரட்சிகர சமூக சக்தியான தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மககளையும் அரசியல் ரீதியில் அணிதிரட்டுவதற்கான அடிப்படையாகும். அந்த உயிர்த்துடிப்பு மிக்க தொழிற்பாடில்லாது போகுமிடத்து முன்நோக்கு அடிமையாகிவிடுகிறது. அப்பொழுது தாமே நிறைவேற்றிய புரட்சிகர முன்நோக்கு, அதன் எதிரிடையாக இருந்து வரும் நிலைமையை நியாயப் படுத்தும் பிற்போக்கு மூடுதிரையாகி விடுகின்றது. உலகத்தினை ஆய்வு செய்வதில் இருந்து உலகினை மாற்றும் பணிக்கு நாம் முகம் கொடுத்துள்ளோம் என் மார்க்ஸ் குறிப்பிட்டதன் அர்த்தம் அது தான். தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களிடையே புரட்சிகர சிந்தனை, புரட்சிக் கட்சியின் அரசியல்தலையீடு ஊடாகவே வளர்ச்சி பெறுகிறது. இந்தப் புரட்சிகர சிந்தனைஒரேயடியாக மக்களிடையே பரவி விடுவதில்லை. ஆனால் அதற்கான ஆரம்பிப்பில் ஈடுபடும் சிறுபான்மையினரின் பணி தீர்க்கமானது. இந்தப் புரட்சிகர முன்னணிப் படைதான் நான்காம்அகிலத்தின்அனைத்துலகக் குழு. நீங்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்திலும் இளம் சோசலிஸ்டுகள்இயக்கத்திலும் சேரும் போது உங்கள் கரங்கள் உலக சோசலிசப் புரட்சியின் அந்த முன்னணிப் படையுடன் இணைந்து கொள்கின்றது.

நவம்பர் 16-17ம் திகதிகளில் அனைத்துலகக் குழு பேர்ளின் நகரில் கூட்டும் உலகத் தொழிலாளர் மகாநாடு தீர்க்கமான ஒரு ஆரம்பமாகும். மனித இனத்தை அணுவாயுத யுத்த அழிவுகளில் இருந்து மீட்டெடுக்கும் புரட்சிகர வேலைத்திட்டத்தினைக் கொண்ட ஒரே இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவே என்பது மீண்டும் ஊர்ஜிதமாகியுள்ளது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஏகாதிபத்திய உலகம் முகம் கொடுத்த முக்கிய முரண்பாடுகள் அனைத்தும் இன்று மனித இனத்தின் எதிரில் வந்து நிற்கின்றன. உற்பத்திச் சக்திகளின் உலகளாவிய வளர்ச்சியும் தனிச் சொத்துடைமைக்கும் தேசிய அரசு அமைப்புக்கும் இடையேயான சீர்செய்ய முடியாத முரண்பாடுகளும் ஏகாதிபத்தியவாதிகளை உலக யுத்தங்களை நோக்கி இட்டுச் செல்கின்றது. இந்நூற்றாண்டின் முதல் அரைவாசியில் 11 ஆண்டுகள் இந்த அழிவு யுத்தத்திற்காகச் செலவிடப்பட்டது. எனினும் இந்த இரண்டு யுத்தங்களால்ஏகாதிபத்தியம் தனது முரண்பாடுகளை தீர்த்துக் கொள்ள முடியவில்லை. இன்று அவை மீண்டும் உலக அரசியல் நிலைமையை அச்சுறுத்தி வருகின்றன. இதிலிருந்து மீட்சிக்கானபாதையை 1917 ருஷ்யப் புரட்சி காட்டியது. ஏகாதிபத்தியத்தினை துடைத்துக்கட்டும் உலக சோசலிச புரட்சியின் முதல் அடியாக அது விளங்கியது. அதற்குலெனின்-ட்ரொட்ஸ்கி தலைமையிலான போல்ஷிவிக் கட்சி தலைமை தாங்கியது.

இன்று பூமியில் அந்த புரட்சிகர பாரம்பரியங்களின் ஒரே உரிமையாளர் அனைத்துலகக் குழுவே. சகல வகையறாவையும் சேர்ந்த தேசியவாத, சந்தர்ப்பவாத அதிகாரத்துவங்களுக்கு எதிரான கனிரக்கமற்ற தத்துவார்த்த, அரசியல் போராட்டம் மூலம் அவ்வுரிமை பேணப்பட்டது. சமூக ஜனநாயக, ஸ்டாலினிஸ்டுகளுக்கு எதிராகவும் நான்காம் அகிலத்தினுள் தோன்றிய பப்லோவாத திரிபுவாதத்தின் சகல வகையறாக்களுக்கு எதிராகவும் அனைத்துலகக் குழு போராடியது. அதன் மூலம் உலக சோசலிசப் புரட்சிக்குத் தலைமை தாங்கஅதற்கு இன்று பூரண அரசியல் தகுதி உண்டு. அனைத்துலகக் குழுவை நாசமாக்க முன்வந்த பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஒடுகாலிகளை தோற்கடித்ததன் மூலம் நான்காம் அகிலத்தின் பதாகையையும். வேலைத் திட்டத்தினையும் அனைத்துலகக் குழு பேணியது. இன்று பப்லோ - மண்டேல் தேசியவாத, சந்தர்ப்பவாதிகள் நான்காம் அகிலத்தினை கூறுபோடும் பிரிவினை உக்திகளில் குதித்துள்ளனர். பேர்ளின் மகாநாடு இதில் இருந்து தீர்க்கமாக வேறுபடுத்திக் கொள்ளும் உச்சக் கட்டம்.

## முரண்பாடுகள்

1914—19 முதலாம் உலக யுத்தத்தின் மூலம் ஏகாதிபத்திய அமைப்பினுள் இருந்து வந்த முரண்பாடுகள் தீர்க்கப்படாததுமட்டுமன்றி, தொடர்ந்து வந்த காலத்தில் புரட்சிக்கும் எதிர்ப்புரட்சிக்கும் இடையேயான மோதுதல் உக்கிரம் கண்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் சமூக ஜனநாயக ஸ்டாலினிச தலைவர்களுடனும் காலனித்துவ நாடுகளின் தேசிய முதலாளித்துவ தலைவர்களுடன் செய்து கொண்ட உடன்பாடுகளுடனும் பிரேட்டன்வூட்ஸ் உடன்படிக்கை, உலக வங்கி. சர்வதேச நாணய நிதியம். மார்ஷல் உதவி திட்டம் முதலான ஏற்பாடுகள் மூலமும் ஏகாதிபத்தியம் தற்காலிக உறுதிப்பாட்டினை ஏற்படுத்தியது. இன்று இந்த ஏற்பாடுகள் அனைத்தும் தகர்ந்து போய்விட்டன, இதன்காரணமாக இவற்றுக்குத் தோள் கொடுத்த சகல அதிகாரத்துவங்களும் தூக்கி வீசப்பட்டுள்ளன. கிழக்கு ஐரோப்பிய ஸ்டாலினிச ஆட்சியாளர்களைத் தொடர்ந்து இந்த அதிகாரத்துவங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தூக்கி வீசப்பட்டன. வளைகுடா யுத்தம் நாம் புதிய காலப்பகுதிக்குள்- யுத்தங்களதும், புரட்சிகளதும் — காலடி வைத்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய அமைப்புக்கு அடிபணிந்து, அதனை வழிபட்ட சகல திரிபுவாதிகளுக்கும் எதிராகப்போராடிய நா. அ. அ. கு. மட்டுமே அந்த அமைப்பின் வீழ்ச்சியை தீர்க்க தரிசனமாகக் கண்டது என்பதை மீண்டும் கூறிவைக்க எனக்கு இடமளியுங்கள். ஏகாதிபத்தியத்தினதும் ஸ்டாலினிச' அதிகாரத்துவங்களதும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களதும் பலத்தைப் பெரிதுபடுத்திக் காட்டி அதன் மூலம் நெருப்பினுள் வீழ்ந்த பப்லோ-மண்டேல் போன்றவர்களதும் சமசமாஜ தலைவர்களதும் எதிர்ப்பின் எதிரில் புரட்சிகர முன்நோக்கினைப் பேணுவது அன்று சுலபமாக இருக்கவில்லை. ஆனால் இன்று நாம் அக்கட்டத்தை தாண்டிவிட்டோம். இம்மகாநாடு அத்தகைய ஒரு திருப்பு முனையில் நடைபெறுகின்றது.

நாம் கடந்து வந்த காலத்தைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நான் ட்ரொட்ஸ்கியின் 'மை லைப்' (MY LIFE) என்ற நூலில் இருந்து சில பந்திகளை வாசிக்கின்றேன் ... ''எண்பதுகளில் (1880) மார்க்சிஸ்டுகள் அன்று நிலவிய வழக்காற்று மனோபாவத்துக்குள் சிறைப்பட்டுக் கிடந்தனர். அவர்கள் துணிச்சலுடன் ஆரம்பிக்க முடியாதிருத்தல் தடைகளின் எதிரில் ஸ்தம்பித்தல், நீண்ட தூர எதிர்காலத்துக்கு சோசலிசத்தை தள்ளிப் போடுதல், அத்தோடு சோசலிசத்தை பல நூற்றாண்டுகளின் வெளிப்பாட்டின் பணியென அங்கீகரிக்கப் பொதுவில் தள்ளப்படுதல் ஆதியனவற்றைக் கொண்டிருந்தனர்.''

இன்று போல்ஷிவிக் புரட்சியில் லெனினுடன் இணைத் தலைவராக விளங்கி, இலட்சோப லட்சம் தொழிலாளர், ஏழைகளை செஞ்சேனையுள் அணிதிரட்டி, ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து தொடுத்த எதிர்ப்புரட்சி தாக்குதலை தோற்கடிக்க ட்ரொட்ஸ்கி வழங்கிய தலைமையின் சகல இலட்சணங்களையும் கைவரப்பெறும் காலப் பகுதிக்குள் நாம் காலடிவைத்துள்ளோம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும். ட்ரொட்ஸ்கி வலியுறுத்திய விதத்தில் தொழிலாள-ஒடுக்கப்படும்மக்களின் அனுபவத்தைப் பெறுவதன் மூலமும், சளைக்காமல் செய்யும் மார்க்சிச ஆய்வுகள் மூலமும் எம்முன் நிலவக் கூடிய சகல சஞ்சலங்களையும் அகற்ற வேண்டும். புரட்சிக் கட்சியில் சேர உங்களுக்கு கதவுகள் திறந்துள்ளன. தொழிலாள-ஒடுக்கப்படும் மக்களுக்கும் புரட்சிக் கட்சிக்கும் இடையே உருவாகியுள்ள மாற்றங்கள் இதனைப் பலம் வாய்ந்த முறையில் நிருபித்துள்ளன. அனைத்துலகக் குழுவும் அதன் கிளைகளும் உலகம் பூராவும் நடாத்தி வரும் அரசியல் போராட்டத்தில் இருந்து பெருக்கெடுத்துவரும் அனுபவங்கள் இதனை ஒழிவு மறைவின்றி பறைசாற்றுகின்றன. ட்ரொட்ஸ்கிஸ்டுகளை ஆயிரமாயிரமாகக்கொன்றும் சோவியத் யூனியனை ட்ரொட்ஸ்கிசத்தின் தடை செய்யப்பட்ட பிராந்தியமாக்கியும் 6 1/2 தசாப்தங்களுக்கு மேலாக ஸ்டாலினிஸ்டுகள் நடாத்திய ஆட்சி இன்று மரணநெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. ட்ரொட்ஸ்கிசத்துக்கு எதிராகப் போடப்பட்ட இரும்பு வேலிகள் சிதறுண்டு போயின. இதைத் தொடர்ந்து அனைத்துலக குழு அங்கு அரசியல் நடவடிக்

கையில் ஈடுபட
ட்ரொட்ஸ்கியி
ஆய்வு, வேலை
யில் தொழிலா
பட்டுள்ளதை
முடிந்தது. அ
வுக்குதினமும்
வரும் நூற்
கடிதங்கள். இ
பகர்கின்றன.
துள்ள நேர்த்து
களில் இருந்து
வாசிக்க வி
இது கியூ நகர
கிடைத்துள்ள

## ருஷ்ய

''நான்காம்
யீடுகளின் மதிப்
யர்களே, நான்
தத்துக்கும் சிற
ட்ரொட்ஸ்கியில்
களுக்கும் எனது
தெரிவிக்கின்றே
வாய்ந்த சிந்த
உறுதியான பு
புனருத்தாரண
டமை எம்மை
மட்டில்-சோவி
சமூகஅழிவிருத்
முடியாத பெ
ஒரு சில வருட
னர் கூட ட்
பெயர், அவ
விபரங்களை
உள்நாட்டுயுத்த
கொண்டு எஞ்சி
சில ஆயிரம்
வழங்கினர்.
னாரைப் போ
1919லும் 1920
ஸ்கி பல்முறை
க்கு உரை நிகழ்
டிருக்கிறார்கள்
புரட்சிகரக் க
வரின்-ட்ரொட்
சின் பின்னர்
வாடிய, உரிய
உரியமுறையில்
டப் படாத செ
கள் தமது க
தை வெற்றி
போக்கு
கும் ஏகாதிப
காரர்களுக்கு
போராட்ச
தினை என் ப
முறை எனக்கு
ஆனால் சோவ
உள்ள பலரு
புத்தகபூச்சி
சத்தின் ப
ட்ரொட்ஸ்கி
எதிர்க்கட்சியி
னதும் கம்
எதிரி. அங்
யேல் பிளாக்
களின்படி சிபே
ருஷ்ய மக்களி

''எல். டி. ட்
தனியாளுமை,
செயற்பாடுகள
நசுக்குவதன்
எதிரிகள் செ
கருத்துக்களின்
முக்கியத்துவத்
செய்கிறார்கள்
கிடமானது
பிரஞ்னோயிச
கட்சியோ அ
காரத்துவமோ
வர்க்கத்தின்
கூறிக் கொள

# ...ட்டாகும்"

...ட்டுள்ள மூலம்
...ன் அரசியல்
...த்திட்ட வழி
...ார்கள் ஈர்க்கப்
...நேரில் காண
...னைத்துலக குழு
...பருக்கெடுத்து
...றுக்கணக்கான
...ற்குச் சாட்சி
...எக்கு கிடைத்
...ள் சில கடிதங்
...ல பந்திகளை
...யிடுகின்றேன்.
...த்தில் இருந்து
...டிதம்.

## ...கடிதம்

...அகிலம்' வெளி
...புக்குரிய ஆசிரி
... தங்கள் கடி
...ப்பாக எல்.டி.
... கட்டுரை
... நன்றியைத்
...ன். பலம்
...னையாளரும்.
...ரட்சியாளரும்
...ம் செய்யப்பட்
...ப் பொறுத்த
...த் யூனியனின்
...யின் தவிர்க்க
...றுபேறாகும்,
...களுக்கு முன்
...ராட்ஸ்கியின்
...ரப் பற்றிய
... புரட்சியிலும்
...ந்திலும் பங்கு
...ிருக்கும் ஒரு
...பர் மட்டுமே
...னது பாட்ட
...ற அவர்கள்
...யும் ட்ரொட்
... செஞ்சேனை
...தியதை கேட்
... இராணுவ
...ட்டி தலை
...கியின் பேச்
...பட்டினியால்
...ற்சி பெறாத
... அணிதிரட்
...படை வீரர்
...ப்பு, அச்சத்
...ாண்டு பிற்
...படைகளுக்
...ப ஊடுருவல்
... எதிராகப்
...ன்ற விதத்
...டனார் பல
...றியுள்ளார்.
...த் யூனியனில்
... ஸ்டாலினிச
... உபதே
... இன்னமும்
...லாளித்துவ
...கா: லெனி
...சத்தினதும்
... இல்லை
...றட் காரர்
...ிச ஏஜன்ட்.
...திரி.

...ாட்ஸ்கியின்
...ருத்துக்கள்
... முழுமனே
...ம் அவரின்
...து அவரது
... இன்றைய
...ன உறுதி
... சர்ச்சைக்
...ஸ்டாலினிச
...ம்யூனிஸ்ட்
... கட்சி அதி
... முதலாளி
...துக்களைக்
...ள புதிய



பதுளையில் இருந்து வந்த தோட்டத் தொழிலாளி மகா நாட்டின் கலந்துரையாடலில் பங்கு கொள்கிறார்.

லிபரல்வாதிகளோ சோவியத் யூனியன் உழைக்கும் மக்களின் ஆழமான தேவைகளை தீர்த்து வைக்கப்போவதில்லை. கட்சி வலதுசாரிகளும் பிளாக்ஹன்றட் வலதுசாரிகளும் எல்.டி. ட்ரொட்ஸ்கியின் பெயருக்குக் கூட அவ்வளவு பலத்த எதிர்ப்புக் காட்டுவதற்குக் காரணம், சோவியத் யூனியனுள் இன்று எல்.டி. ட்ரொட்ஸ்கி போன்ற ஒரு வரலாற்று புருஷரை புனருத்தாரணம் செய்வதானது புரட்சியையும் உள்நாட்டு போரையும் பற்றிய உண்மையையும் அரசியல் சிந்தனையாளரையும் நான்காம் அகிலத்தின் ஸ்தாபகரையும் புனருத்தாரணம் செய்வதாலாகும். இதானது புரட்சிகரத் தொழிலாள வர்க்கத்தையும் சகல மானிட பெறுமானங்களையும் கைவரப் பெற்று உலகத் தொழிலாளர் இயக்கத்துடனான பிணைப்பினை பலப்படுத்தும் போராட்டமாக விளங்குவதாலாகும்.''

ஆங்கிலத்தில் எழுதப் பெற்ற மற்றுமோர் கடிதத்தின் ஒரு பகுதியை வாசிக்கின்றேன். ''ஒரு சில தினங்களுக்கு முன்னர் தங்களது கடிதம் கிடைத்தது. மிகுந்த நன்றி. எமது நாட்டின் நிலைமை பற்றி தாங்கள் தொடர்ந்து ஆய்வு செய்வது பற்றி நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். அது ஆழமானது. நான் உண்மையில் தங்களுடன் உடன்படுகின்றேன், நான் ருஷ்யாவில் வாழும் அதே சமயம் நீங்கள் அமெரிக்காவில் வாழ்ந்த போதிலும் பெரொஸ்ரொயிகா தொடர்பான சம்பவங்கள் தொடர்பாக எமது கருத்துக்கள் இணைந்து கொள்வது அதிசயமானது. சில வேளை விடயம் தொடர்பான உள்ளடக்கத்தை நன்கு புரிந்துகொண்டது அதற்கான காரணமாகலாம். நீங்கள் எந்தவிதத்திலும் தொழில் சார் அரசியல்வாதி.

''எவ்வாறெனினும் நிலைமையைப் புரிந்து கொள்ளவும் எனது எதிரிகளுடன் வாதிடவும் எனது நண்பர்களுக்கு அரசியல் வாழ்க்கை பற்றிய எந்தவொரு விடயத்தையும் தெளிவுபடுத்தவும் தாங்கள் எனக்கு உதவினீர்கள். நான் அறிந்த விதத்தில் தங்கள் கடிதத்தின் கீழ்க்கண்ட பகுதி அதிசயமானது: 'கொர்பச்சேவ், அதிகாரத்துவத்தினுள் முதலாளித்துவ புனருத்தாரண குழுவின் தலைவராக விளங்கும் அதே சமயம், யெல்ட்சின், தலைமை... வரும் ருஷ்ய கொம்பிரதோர் முதலாளி வர்க்கத்தின் இன்றைய தலைவராவார். கொர்பச்சேவுக்கும் யெல்ட்சினுக்கும் இடையே இடம்பெறுவதாகச் சொல்லிக் கொள்ளப்படும் போராட்டம் என்பதைவிளங்கிக் கொள்ள இது திறவுகோலாக உள்ளது. இரண்டாவதாக தங்கள் கடிதம் மனவுறுதியை வழங்குகின்றது. இறுதியாக உள்ளதும் அதுஇல்லாமல் போகும் ஆபத்தின் கீழ் சகலரும் வாழ்ந்து கொண்டுள்ள குழம்பிப்போன சமுதாயத்தில் வாழ்வது சிரமமானது என்பதைப் புரிந்து கொள்ள உதவுகின்றது. பெரொஸ்ரொயிகா குட்டையினுள் வாழ்வது சிரமமானது. சிறப்பாக நீங்கள் சுற்றவாளியனால் அது சிரமமானது. சகலரும் எதிரிகளாகிறார்கள். சகலரும் தம்மைப் பற்றியே சிந்திக்கிறார்கள். எமது நகரத்திலும் நடப்பது அதுவே. நிலைமை அவ்வளவுக்கு சிக்கலானது.''

கடிதத்தின் இறுதியில் இத்தொழிலாளி தோழர். நோர்த்தின் கடிதங்களை மொழி பெயர்த்து நகரின் பத்திரிகைகளுக்கு வழங்கவா எனவும் கேட்டுள்ளார், எமக்கு சோவியத் பத்திரிகைகளை அனுப்புவது அவசியமா எனவும் வினவியுள்ளார்.

மற்றுமோர் கடிதம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: 'எனக்கு உங்கள் முதல் கடிதம் கிடைத்ததும் நான் பாய்ந்து கையில் எடுத்தேன். நான்காம் அகிலத்தின் வெளியீடு இன்னும் கிடைக்கவில்லை. எனினும் அது நாசமாகாமல் என் கைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை. எனினும் நீங்கள் தற்சமயம் எனக்கு அனுப்பி வைத்துள்ளவை கூட அழிக்க முடியாத எண்ணங்களை ஏற்படுத்துகின்றது. சிறப்பாக ட்ரொட்ஸ்கி சோவியத் யூனியனுக்கு எழுதிய கடைசிக் கடிதம் பற்றிக் குறிப்பிடுகின்றேன், அந்தக் கடிதத்தினை வாசித்ததுதான் தாமதம் அக்கடிதத்தினை அன்றைய காலகட்டத்தில் விநியோகித்தவர்கள். உயிர்த்தியாகம் செய்ய ஏன் நேரிட்டது என்பதை நன்கு புரிந்து கொள்ள முடிந்தது. அத்தோடு அக்கடிதம் இன்றைய காலத்துக்கு நன்கு பொருத்தமானது. இன்று அது 50 வருடங்களுக்கு முன்னர் இருந்ததற்கு எந்த விதத்திலும் குன்றியதாய் இல்லை.''

அனைத்துலகக் குழுவின் அரசியல் தலைமையின் கீழ் சோவியத் யூனியன் தொழிலாள வர்க்கத்திடையே ஏற்பட்டு வரும் புரட்சிகர மாற்றங்களை புரிந்து கொள்ள இக்கடிதங்கள் உங்களுக்கு உதவுவது நிச்சயம். சோவியத் யூனியனுள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சகல பிரிவினருக்கும் எதிராக ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினை சூழ இடம்பெறும் இந்த அணிதிரளல் உலக புரட்சிகர முக்கியத்துவம் பெறுகின்றது. ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியவாதிகளுடனும் பின்தங்கிய நாடுகளின் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனும் கட்சிகளுடனும் கொண்டிருந்த வர்க்க சமரசப் பிற்போக்குக் கூட்டுக்கள் இன்று வெடித்துச் சிதறியுள்ளன. இது உலகத் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக அடிப்படையில் அணிதிரட்டப் பிரமாண்டமான வாய்ப்புக்களை வழங்கியுள்ளது. இந்த அரசியல் வாய்ப்பினை குறைந்து மதிப்பிடுவதோ அல்லது சந்தேகிப்பதோ இன்றைய புறநிலை உலக அபிவிருத்திகளின்கீழ் சாத்தியமானதல்ல,

கடந்த தசாப்தங்களில் மாதிரி ஏகாதிபத்திய நாடாக ஏகாதிபத்தியகையாட்களால் பூதாகாரப்படுத்திக் காட்டப்பட்ட அமெரிக்கத் தொழிலாள —ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் வாழ்க்கை நிலைமைகள் இளம் சோசலிஸ்டுகளின் முன்நோக்கு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது, இந்நிலைமை எமது நாட்டில், தொழிலாள - ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் நிலைமையில் இருந்து வேறுபடுவது—இந்நாடு அமெரிக்காவில் பார்க்க ஜனத்தொகையில் பெரிதும் சிறியதாகவிளங்கும் நாடானதால் உள்ள எண்ணிக்கை பற்றிய வேறுபாடு மட்டுமே. இருபுறத்திலும் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்கள் மனிதர் என்ற ரீதியில் இனியும் சகித்துக் கொள்ள முடியாத நிலைமைக்கு முகம் கொடுத்துள்ளனர்.

முதலாளித்துவ புனருத்தாரணத்தின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவமும் அவர்களின் ஆட்சி முறையும் வீழ்ச்சி கண்ட இடங்களில் இன்று வேரூன்றியுள்ள புதிய வேடம் பூண்ட கொம்பிறதோர் ஸ்டாலினிச ஆட்சிகள் கிழக்கு ஐரோப்பா, சோவியத் யூனியன், சீனா வியட்னாம் முதலான நாடுகளில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்குவது இவற்றிற்கு ஒன்றும் குறைந்த கெடுதியை அல்ல. ஏகாதிபத்திய அமைப்புள் மீண்டும் கொணரப்பட்ட கிழக்கு ஜெர்மனியில் இவ்வாண்டு இறுதியில் நூற்றுக்கு 50% தொழிலாளர் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர். இது தொழிலாளரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் அமுல் செய்யப்படவுள்ளது.

தேசிய சுதந்திரத்துக்கு தேசியப் பாதைகள் இல்லாதது போன்றே சோசலிசத்துக்கும் தேசியப் பாதைகள் கிடையாது. தேசிய பாதையில் வெற்றிகண்டு விட்டதாக செய்யப்பட்ட வாயடிப்புக்கள் அம்பலமாகியுள்ளதைப் போன்றே தேசிய எல்லைக்குள் சோசலிசத்தினை நிர்மாணித்துவிட்டதாக ஸ்டாலினிஸ்டுகள் எழுப்பிய கூச்சல்களும் முழுமனே அம்பலமாகியுள்ளன. காலனித்துவத்தில் இருந்தும், முதலாளித்துவ அழிவில் இருந்தும் மீட்சிபெற தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் எடுக்க வேண்டிய பாதையை ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு சுட்டிக்காட்டுகின்றது. ஏகாதிபத்திய, காலனித்துவ, அரைக் காலனித்துவ நாடுகளின் புரட்சிகர இயக்கங்களுக்கு இடையேயான உறவினையும் சார்பு தன்மையையும் ட்ரொட்ஸ்கி இதில் தெளிவுபடுத்தினார்.

உதாரணமாக இம்மகாநாட்டில் சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினையை விபரித்த தோழியின் பேச்சினைக் கவனியுங்கள். ஏகாதிபத்தியவாதிகள் அந்த நிலைமைகளை உலகளாவிய விதத்தில் தொழிலாளர் மீது திணிக்க முயற்சிக்கிறார்கள். கடந்த மாதத்தில் இந்நிலைமைகளை அவுஸ்திரேலிய தோழர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அத்தோழர்கள் இதையிட்டு பெரும் அக்கறையும் ஆர்வமும் காட்டினர். காரணம், இதற்குச் சமானமான மிலேச்சநிலைமைகளை திணிக்க அவுஸ்திரேலிய ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம் முயன்று வருவதே. 1860களில் அவுஸ்திரேலிய ஆளும் வர்க்கம் சிட்னி. மெல்போர்ண் நகரங்களில் டசின் கணக்கான தொழிலாளர் குடும்பங்களை ஒரு வீட்டில் தள்ளி, காட்டுமிராண்டித் தனமாக சுரண்டியதை நாம் அவர்களுக்கு நினைவுபடுத்த முடிந்தது. இந்நிலைமையின் கீழ் உலகத் தொழிலாள வர்க்கத்தினை அனைத்துலக அடிப்படையில் ஐக்கியப்படுத்தவுள்ள பிரமாண்டமான வாய்ப்புக்களை நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்நிலைமையிலேயே சமூக ஜனநாயக, ஸ்டாலினிச தலைவர்களின் நச்சுத்தனமான பாத்திரம் கொடிய வடிவம் எடுக்கின்றது. ஆதலால் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ.தொ.கா. தலைவர்களை தொழிலாள வர்க்க தலைமையில் இருந்து துரத்திஅடித்தல் மிகவும்அவசரப் பணியாகிறது அதை உலக ரீதியில் தொழிலாள வர்க்கத்தினை சோசலிசப் புரட்சிக்கு அணிதிரட்டப் போராடும் தலைமையின் கீழேயே சாதிக்க முடியும்,

இந்தியாவில் இராமர் ஜன்ம பூமி இயக்கத்தின் இலக்கு 1947ல் சிருஷ்டித்த இரத்த வெள்ளத்தினை தூண்டும் ஹிந்து முஸ்லிம் மோதுதல்களையும் இனப்படுகொலை இயக்கங்களையும் தூண்டுவதே. தமிழ்நாடு ஜெயலலிதா அரசாங்கம் காவேரி தண்ணீர் பிரச்சினை மீது கர்நாடக—தமிழ் நாடு மாநிலங்களுக்கு இடையே மோதுதலை சிருஷ்டிக்கிறது. பின்தங்கிய நாடுகளில் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ சுதந்திரத்தினையும். தேசிய ஐக்கியத்தினையும் உண்டு பண்ண இலாயக்கற்றவை மட்டுமன்றி, அந்தந்த நாடுகளில் இன, மத மோதுதல்களை தூண்டும் ஏகாதிபத்திய தரகர்களாகவும் செயற்படுவது இன்று அம்பலமாகியுள்ளது.

## தமிழர் விரோத யுத்தம்

இலங்கையில் தமிழர் விரோத யுத்தத்தில் ஈடுபட்டுள்ள யூ. என். பி. அரசாங்கமும் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஆளும் வர்க்கமும் இதை முன்னதை விட இன்று நன்கு தெளிவாகக் காட்டியுள்ளது. தமிழ் தேசிய இனம் பிரிந்து சென்று வேறான அரசினை அமைக்கத் தள்ளப்பட்டதற்கு காரணம் அத்தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமையை புறக்கணித்த சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ - இ. தொ. கா. தலைவர்களின் கடைகெட்ட காட்டிக்கொடுப்புக்கு மத்தியில் தமிழ்தேசிய இனத்துக்கு எதிரான இன வேறுபாடுகளை உக்கிரமாக்க யூ. என், பி - சி. ல. சு, க அரசாங்கங்கள் செயற்பட்டதே இதனை நாம் பலமுறை சுட்டிக் காட்டியுள்ளோம். தொழிலாள வர்க்கத்தின் பழைய தலைமையின் இத்துரோகத்தின் ஆதரவுடன் தமிழ் தேசிய இனத்தினர் மேல் தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ குழுக்கள் தமது ஆளுமையை திணிக்க முடிந்தது. இந்த தமிழ் முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கட்சிகளும் குழுக்களும் சிங்கள முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவக் கட்சிகளுக்கு எந்தவிதத்திலும் அரசியல் வங்குரோத்திலும், பிற்போக்கிலும் குறைந்தவை அல்ல என்பது இன்று தெளிவாகி உள்ளது. இன்று ரேலோ, ஈபீஆர்எலஎப், புளொட் ஈரோஸ். ஈ என். பீ. பி. ஈ. பீ. டீ; பி என்ற நானாவித இயக்கங்கள் பிரேமதாச அரசாங்கத்தினதும் இனவாத முதலாளித்துவ இராணுவத்தினதும் கையாட்களாகச் செயற்படுகின்றன. இனவாத முதலாளித்துவ அரசு சம்பந்தமாக தமிழ் ஒடுக்கப்படும் மக்களிடையே நிலவும் ஆத்திரம், சமரசமின்மை காரணமாக இராணுவ நடவடிக்கையில் இறங்கத் தள்ளப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம், இந்தியப் பிற்போக்கு ஆட்சி தொடர்பாகவும் யூ. என். பி. ஆட்சி தொடர்பாகவும் அரசியல் வங்குரோத்தினையும் அடிபணிவையும் காட்டிக்கொள்கின்றது. தமிழ் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் இழப்புக்களின் மூலம் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுடனும் கூட்டுக்குச் செல்வதன் மூலம், தமிழ் முதலாளிகள் தமிழ் மக்களை சுரண்டுவதற்கான சிறப்புச் சலுகைகளை வென்றெடுப்பது அவர்களின் இலக்காக உள்ளது, அவர்களின் வர்க்க நிலைப்பாடு அதுவே, அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சார்பில் பேசிக் கொள்ளும் சகல முதலாளித்துவ இயக்கங்களதும் நிலைப்பாடு. சகலவிதமான ஒடுக்கு

(65

# தொழிலாளர் பாதை

விலை 1-50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 40 ★ ஜுலை, 1991 ★



நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினல் நடத்தப்பட இருக்கும் பெர்லின் சர்வதேச தொழிலாளர் மாநாட்டிற்கான

முன்னோடி மாநாடு

''ஏகாதிபத்தியப் போரையும் காலனி ஆதிக்கத்தையும் எதிர்ப்போம்''

29-09-91 ஞாயிறு, காலை 10மணி

ஸ்ரீ பாலாஜி திருமண மண்டபம்
1, தேவராஜ முதலி தெரு,
(மகாலட்சுமி திரை அரங்க அருகில்)
பட்டாளம், சென்னை-12.


# ஏகாதிபத்திய வங்கிகளின் பொம்மை ஆட்சி கோரும் தியாகங்களை நிராகரி!

# சோசலிச வேலைத் திட்டத்திற்கு போராடு!

இந்திய முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிக்கு தொழிலாளர்களையும், ஏழை விவசாயிகளையும் இளைஞர்களையும் பலிக்கடாக்களாக்க, முதலாளித்துவ ஆட்சியாளர்கள் எடுக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் தொழிலாள வர்க்கம் எதிர்க்க வேண்டும். தொழிலாள வர்க்கம் தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வரலாற்று ரீதியாக திவாலான முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை அகற்றி மனித சமுதாயத்தின் தேவைகளை அடிப்படையாக கொண்டு இயங்கும் சோசலிச பொருளாதார அமைப்பை உருவாக்க – போராட வேண்டும்.

நாடு மோசமான பொருளாதார நெருக்கடியில் இருப்பதால் ''நாம் மிகக் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டும், நாம் எடுக்கும் முடிவுகள் மக்கள் மத்தியில் செல்வாக்கு உடையதாக இருக்க மாட்டாது.'' என்றும் ''மென்மையான எண்ணங்களுக்கு இனிமேல் இடமில்லை. மக்கள் பல தியாகங்கள் செய்யத் தயாராக இருக்க வேண்டும்'' என்றும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மறுநாள் தொலைக் காட்சியில் புதிய பிரதமர் நரசிம்மராவ் கோரிக்கை விடுத்துள்ளார். அதே தொனியில் அதற்குப் பின்னர் நிதி அமைச்சரும், ஜனாதிபதியும் கூட கோரிக்கை விடுத்துள்ளனர் மேலும் புதிய தொழில் அமைச்சரான வாழப்பாடி ராமமூர்த்தி, தொழிலாளர்கள் தொழிற் சங்க நலனைவிட தேசிய நலனையே மேலாக கருதி தியாகங்கள் புரிய வேண்டுமென்று'' கூறியுள்ளார்.

இந்தியா எதிர்கொண்டுள்ள மிகப்பெரும் பொருளாதார நெருக்கடி, தேசியப் பிரச்சினை என்றும் அதனால் அனைத்து மக்களும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என்று கோரும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் கடந்த 44 வருட வர்களது ''சுதந்திர'' ஆட்சியின் சாதனையாக காட்டக்கூடியது என்ன? நாட்டில் பாதிக்கு மேற்பட்ட மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே தள்ளப்பட்ட நிலைமை 2½லட்சத்துக்கும் அதிகமான ஆலைகள் நலிவுற்று மூடப்படும் நிலைமை, நகர்ப்பகுதியில் 3 கோடிக்கும் நாட்டுப் புறத்தில் 9 கோடிக்கும் அதிகமானோர் வேலையின்றிருக்கும் நிலை, சுமார் 2 கோடி சிறுவர் உழைப்பாளர்கள், பல கோடி தொழிலாளர்களின், ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் மோசமாகிச் செல்லும் நிலைமைகள் முதலியனவையே!

இவற்றுடன் ஆளும் வர்க்கத்தினர் திருப்தி அடையவில்லை! மக்கள் கடுமையான உழைப்பின் மூலமாக, வேர்வையையும், இரத்தத்தையும் சிந்தி இந்த தேசத்தை காப்பாற்ற வேண்டும் என்று அறை கூவல் விடுக்கின்றனர். ஏகாதிபத்திய வங்கியாளர்களின் ஏஜண்டுகளாக ஆட்சி புரியும் காங்கிரஸ் அரசாங்கம் அவற்றின் கட்டளைப்படி ஏகாதிபத்திய பல்நாட்டுக் கம்பெனிகள் இந்திய தொழிலாள வர்க்கத்தை வரையறையின்றி சுரண்டுவதற்கு வசதியாக புதிய தொழிற் கொள்கையை அறிமுகப்படுத்த இருக்கிறது. இந்தியாவில் பன்னாட்டு கம்பெனிகளின் முதலீட்டுக்கு இடையூறாக இருக்கும் ''சிலந்தி வலைகள்'' அகற்றப்படும் என்று நிதியமைச்சர் மன்மோகன்சிங் கூறியுள்ளார், தேர்தலுக்கு முன்னர் அவரது சொந்த கட்சியாக் காங்கிரஸ் கட்சி 100 நாட்களுக்குள் விலைஉயர்வுகளை குறைப்போம் என்று கூறிய வாக்குறுதியை யதார்த்தமற்றது என்று கண்டனம் செய்துள்ளார் இந்திய முதலாளித்துவ பொருளாதாரத்தின் நெருக்கடி நிலைமையை தீர்க்க உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.) முதலிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் 'ஆலோசனைப்படி' உணவு, உரம், போக்குவரத்துக்கான மானியங்களை வெட்டி, ரூபாயின் மதிப்பை குறைத்து தொழிலாளர்கள் ஏழை விவசாயிகள் மீது பெரும் தாக்குதலை தொடுக்க காங்கிரஸ் அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது,

ஏகாதிபத்திய வங்கிகளிடம் வாங்கிய கடனுக்கான வட்டியைக்கூட செலுத்த முடியாதிருக்கும் நிதி நெருக்கடியை தற்காலிகமாக 'தீர்ப்பதற்காக? காங்கிரஸ் அரசாங்கம் இதுவரையில் 46.91 டன்கள் எடையுள்ள தங்கத்தை இங்கிலாந்து வங்கியில் 'அடகு' வைத்து ஒரு மாத காலத்துக்கு சுமார் 400மில்லியன் டாலர்களை கடன்வாங்கியுள்ளது,

காங்கிரஸ் அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் முன்னெச்சரிக்கையை ஊர்ஜிதப்படுத்தி உள்ளது, சோசலிசத் தொழிலாளர் கழகம் அதன் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதாவது: ''இன்றைய ஆழமான முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி நிலைமையின் மத்தியில் தேர்தலுக்கு பின்னர் ஆட்சி அமைக்கும் எந்த ஒரு அரசாங்கமும் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் ஏஜண்டுகளாக தொழிலாளர் விவசாயிகளுக்கு எதிராக இதற்கு முன் கண்டிராத தாக்குதல்களை தொடுப்பார்கள்'' (தொழிலாளர் பாதை. ஜுன் 1991).

## நெருக்கடியின் பின்னணி

இந்திய பாராளுமன்ற தேர்தல் வரலாற்றிலேயே மிகவும் பலாத்காரங்கள் நிறைந்த இத்தேர்தலுக்கு பின்னர் கடந்த 20 மாதங்களில் மூன்றாவது தடவையாக ஒரு சிறுபான்மை அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது. 1947ல் ஏகாதிபத்தியத்தின் இந்திய முதலாளித்துவத்தின் எதிர்ப் புரட்சி சதியின் மூலம் மதவாத அடிப்படையில் கூறு போடப்பட்ட அரசுகளில் ஒன்றான இந்தியா பல்வேறு கூறுகளாக மேலும் பிளவுபடும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளது. 1947இலிருந்து 40 வருடங்களாக இந்திய முதலாளித்துவத்தின் பாரம்பரிய முதலாளித்துவ கட்சியாக ஆட்சி புரிந்து வந்த காங்கிரஸ் கட்சியின் நேரு குடும்பவழி ஆட்சி ராஜீவ்காந்தியின் மரணத்துடன் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது, இன்று காங்கிரஸ் கட்சி அதன் நீண்டகால ''சுயசார்பு'' பொருளாதார கொள்கைகளை கைவிட்டு வெளிப்படையாகவே 'ஏகாதிபத்திய சார்பு' கொள்கைகளை அமல்படுத்த தீர்மானித்துள்ளது சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம், அதன் காட்டிக் கொடுப்புகளின் உச்சக் கட்டமாக சோவியத் யூனியனுக்குள் முதலாளித்துவத்தை மீட்டெடுக்கும் முயற்சியில் உலக ஏகாதிபத்திய சக்திகளுடன் நெருக்கமான உறவை ஏற்படுத்தியுள்ளது. இம்மாற்றம் குறிப்பிடத் தக்க அளவு சோவியத் யூனியனின் ஆதரவில் தங்கியிருந்த இந்தியா போன்ற நாடுகளை முழுமையாக ஏகாதிபத்திய அரவணைப்புக்குள் தள்ளியுள்ளது

இந்நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுவது இரண்டாம் உலக யுத்தத்திற்கு பிற்பாடு ஏகாதிபத்திய ஒழுங்கை சர்வதேச ரீதியாக நிலைநாட்ட முக்கியமான தூண்களாக செயலாற்றி வந்த ஸ்டாலினிசமும் தேசிய முதலாளித்துவமும் மதிப்பிழந்து திவாலாகிப் போயுள்ளன, அதுபோலவே இவற்றின் அரசியல் காட்டிக் கொடுப்புகளை பயன்படுத்தி யுத்தத்தால் சீரழிக்கப்பட்ட முதலாளித்துவ பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்க அன்று அமெரிக்க முதலாளித்துவத்தின் சார்பு ரீதியான பொருளாதார பலத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொருளாதார அமைப்புகளாக உலகவங்கி, பன்னாட்டு நிதியம், வர்த்தகம், வரியில் பொது உடன்பாடு (GATT) அனைத்துமே இன்று ஆழமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன. இவ்வாறாக பொருளாதார வீழ்ச்சிகளுக்கும், அரசியல் கொந்தளிப்புகளுக்கும் ஊற்றுக்காலாக இருப்பது இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இரண்டு உலக யுத்தங்களை தோற்றுவித்த இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படையான முரண்பாடுகளாகும். சமூக உற்பத்திக்கும் தனி உடமைக்கும் பூகோள ரீதியான உற்பத்தி முறைக்கும் தேசிய அரசு அமைப்புக்கும் இடையிலான முரண்பாடுகளே இவை. இந்த முரண்பாடுகளை அமுக்கி வைப்பதற்கு எடுத்த அனைத்து நடவடிக்கைகளுமே செயலற்றும் போய் அவை மறுபடி பூகம்பமாக வெடிக்கும் தன்மையுடன் வளர்ச்சியடைந்துள்ளன. இவற்றின் வெளிப்பாடுகளாகவே உலக யுத்தத்திற்கான பதட்டங்களும், உள்நாட்டு யுத்த நிலைமைகளும் உலகளவில் தோன்றி வருகின்றன, பின்தங்கிய நாடுகளில் தீர்க்கப்படாத ஜனநாயகப் புரட்சி சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகள் வெடித்தெழுந்து முதலாளித்துவ ஆட்சிகளை ஆட்டம் காண வைத்துள்ளன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா முதலிய நாடுகளில் வெடித்தெழுந்துள்ள தேசிய இனப்பிரச்சினைகளும் விவசாயிகளின் அடிப்படையான பிரச்சினைகளும் முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடியினால் பன்மடங்கு உக்கிரப்படுத்தப் பட்டுள்ளன. இத்தகைய போராட்டங்கள் தொழிலாள வர்க்கப் போராட்டங்களுடன் ஒன்றிணைந்து முதலாளித்துவ ஆட்சி அமைப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக வளர்ந்துள்ளன.

## பாரதீய ஜனதாக் கட்சியின் வளர்ச்சி

ஏகாதிபத்திய வங்கியாளர்களின் பொருளாதார திட்டங்களை தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள் மேல் திணிப்பதற்கு எதிராக வளர்ச்சியடையும் வர்க்கப் போராட்டங்களை திசை திருப்பவும், ஒடுக்கவும் ஆளும் வர்க்கத்தின் பிரதான கட்சிகளினுள் தொழிற்பங்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன் முக்கிய பாகமாக இந்துமதவாத வெறியை வாந்தி எடுக்கும் பாரதீய ஜனதாக்கட்சி முன்னணிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. 1989க்கு முன்னர் மக்களவையில் 2 தொகுதிகளை மட்டுமே கொண்டிருந்த பா.ஜ. கட்சி 1989 தேர்தலில் அதன் எண்ணிக்கையை 89 ஆகவும், 1991 தேர்தலில் 117 ஆகவும் உயர்த்தியுள்ளது 16ம் நூற்றாண்டு பள்ளிவாசலை உடைத்து அந்த இடத்தில் ராமர் கோயிலை கட்டப் போவ

(17ம் பக்கம் பார்க்க)

**தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!**
**தமிழீழ அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தை முறியடி!**

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



## ஏகாதிபத்திய வங்கிகளின்...

தர்க பா.ஜ. கட்சியும் அதன் பல சகோதர அமைப்புகளும் கங்கணம் கட்டி நிற்பது இந்து மதத்தின் மேலுள்ள வெறித்தனமான பற்றுதலினால் அல்ல. மாறாக சொத்துடமை வர்க்கத்தின் விசுவாசமான பிரதிநிதிகளாக செயற்படுவதற்கேனர் இந்திய ஆளும் வர்க்கத்தின் ஏகாதிபத்திய ஏஜெண்டு பாத்திரம் இன்று அம்மணமாகி உள்ளது. இந்நிலைமையில் இந்திய ஆளும் வர்க்கத்தின் பாரம்பரிய கட்சியான காங்கிரஸ் கட்சி ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளைகளை நடைமுறைப்படுத்துகையில் கிளர்ந்தெழும வர்க்கப் போராட்டங்களை திசைதிருப்பும் வேலையை, மற்றைய முதலாளித்துவ கட்சியபன பா.ஜ. கட்சி ராமர் கோயிலை கட்டுவதற்கான பிரச்சாரம் மூலம் செய்கிறது. இந்தப் பிரச்சார இயக்கத்தை மேலும் தீவிரப்படுத்தப் போவதாக, பா.ஜ. கட்சியும், விசுவ ஹிந்து பரிஷத் போன்ற அதன் பல சகோதர அமைப்புகளும் பிரகடனம் செய்துள்ளன. மதக் கலவரங்களை ஒடுக்கப் போவதாகவும், பா.ஜ. கட்சியின் மதவகுப்புவாதத்தை எதிர்ப்பதாகவும் கூறிக் கொள்ளும் காங்கிரஸ் அரசாங்கத்தின் உண்மையான இலக்கு பா.ஜ. கட்சி அல்ல, தொழிலாள வர்க்கமே. ஆளும் வர்க்கத்தின் பிரதான கட்சிகளின் இந்தக் கூட்டுச் சதிகளுக்கு தொழிலாள வர்க்கத்தின துரோகத்தலைமைகளான சி.பி,ஐ.(எம்)சி.பி.ஐ. தலைவர்கள் பெரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

### சி.பி.ஐ.(எம்),சி.பி,ஐ. தலைமைகளின் துரோகம்

நாட்டின் இன்றைய மோசமான பொருளாதார நெருக்கடிக்கும் முக்கியமான பல தேசிய பிரச்சினைகளுக்கும் காங்கிரஸ் கட்சியே பொறுப்பாளி என்று தேர்தல் பிரச்சாரங்களின் போது வெற்றுக் கூச்சல் போட்ட சி.பி.ஐ.(எம்).சி.பி.ஐ தலைமைகள் தேர்தலுக்கு பின்னர் ''தேசிய நலன் கருதி அதே காங்கிரஸ் கட்சி, அரசாங்கம அமைத்து ஏகாதிபத்திய வங்கியாளர்களின் திட்டங்களை அமல்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளனர், மறறொரு மக்களவைத் தேர்தலை நடத்தும்படி தாம் கோர முடியாது என்று கூறிக்கொண்டு, காங்கிரஸ் அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது உதவி செய்துள்ளனர். தாம மதசார்பின்மை கொள்கைக்காக போராடுவதாகவும், பா.ஜ. கடசியின் மதவகுப்புவாதத்தை எதிர்பபதாக கூறி காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வழங்கும் துரோகத்தனமான அரசியல் ஆதரவை நியாயப்படுத்த முயற்சி செய்கின்றனர். இது போன்றே முன்னைய சிறுபான்மை வி.பி.சிங். சந்திரசேகரின் ஆட்சிகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கினர், அப்பொழுது நாட்டின் முக்கிய எதிரி காங்கிரஸ் கட்சி என்று கூறி முதலாளித்துவ தேசிய முன்னணி அமைப்புடன் அவர்கள் கொண்டிருந்த சந்தர்ப்பவாத அரசியல் உறவை நியாயப்படுத்தினர். இப்பொழுது மதவகுப்புவாதம், ஏகாதிபத்திய சீர்குலைவு நடவடிக்கைகளை ''தோற்கடிக்க'' ஏகாதிபத்திய ஏஜண்டுகளான காங்கிரஸ் கட்சியுடன் கைகோர்த்து நிற்கின்றனர்,

ராஜிவ்காந்தியின் மரணத்தை அடுத்து சி.பி.எம் பொதுச் செயலாளர் நம்பூதிரிபாட் புதிய காங்கிரஸ் தலைவர் நரசிம்மராவிற்கு எழுதிய கடிதத்தில் 'இடதுசாரிகள் சம்பந்தமாக காங்கிரஸின் புதிய தலைமை அதன் அணுகு முறையை மாற்றிக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொண்டார்., மேற்கு வங்க முதல்வரும் சி.பி.ஐ.(எம்)மின் முக்கிய தலைவர்களில் ஒருவருமான ஜோதிபாசு 'இது நாட்டின் ஸ்திரத்தன்மையை குலைப்பதற்காக ஏகாதிபத்திய சக்திகளின் நடவடிக்கை என்றும் அதனை தோற்கடிக்க அனைத்து தேசபக்த சக்திகளும் ஒன்று சேர வேண்டும்,' என்றும் கேட்டுக் கொண்டார். சி.பி,ஐ.(எம்),சி.பி.ஐ. ஸ்டாலினிசத் தலைமைகளின் வர்க்கக்கூட்டு ''மக்கள் முன்னணி அரசியலின் மூலமாகவே இந்த தலைமைகள் திவாலான இந்திய முதலாளித்துவ ஆட்சியை தக்க வைப்பதில் பிரதான பங்கு வகித்து வருகின்றனர். இதற்கு இத்தலைமைகள் வர்க்க சாரமற்ற சொற்பதங்களை 'தேசிய நலனை காக்க', 'தேசிய ஒற்றுமை காக்க' போன்றவற்றை பயன்படுத்தி வருகின்றனர், அரசாங்கத்திற்கு எதிராக வளர்ச்சி அடையும் தொழிலாள வர்க்கத்தின எதிர்ப்புப் போராட்டங்கள் எப்பொழுதுமே முதலாளித்துவ தனிச் சொத்துடமைக்கும். முதலாளித்துவ ஆட்சிக்கும் அச்சுறுத்தலை ஏற்படவிடாது தடுக்கும எண்ணத்துடன தொழிலாளர்களை முதலாளித்துவ சித்தாந்தத்திற்குள் கட்டுப் போட்டு வைப்பதற்காகவே தேசிய வாதத்தை இடைவிடாது பிரச்சாரம் செய்கின்றனர். இந்திய 'தேசியத்துள்' இருக்கும் இரண்டு பிரதான வர்க்கங்களுக்கு இடையிலான வர்க்கப் போராட்டத்தை கூர்மைப் படுத்தி முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசுவதற்கு எதிராக வர்க்க சமரச கொள்கைகளை பிரச்சாரம் செய்கின்றனர்.

### புரட்சிக் கட்சியை கட்டு!

தொழிலாள வர்க்கத்தின் உத்தியோக பூர்வ தலைமைகளின காட்டிக் கொடுப்புகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தின ஆட்சி அதிகாரத்துக்காகவும் சர்வதேச சோசலிச புரட்சி முன் நோக்கிலும தொடர்ந்து போராடி வருவது உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்டு இந்தியாவில் போராடும் சோசலிசத் தொழிலாளர் கழகமாகும். முதலாளித்துவ பொருளாதார நெருக்கடிக்கு தொழிலாள வர்க்கத்தை பலியிடுவதற்கு 'தேசிய நலன்' என்ற போர்வையில் தேசியவாதத்தை பரப்பும் ஸ்டாலினிசத் தலைமைகளுக்கு எதிராக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் பொது எதிரியான முதலாளித்துவத்திற்கு எதிராக சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்கு சோசலிசத் தொழிலாளர் கழகம் போராடுகிறது.

உலகப் பொருளாதாரத்தின் மேலாதிக்கம் அனைத்து வகையான தேசியவாத பொருளாதார திட்டங்களையும் காலாவதியாக்கி விட்டது, அவற்றை நடைமுறை சாத்தியமற்றவையாக்கி விட்டது. இந்நிலைமையில் தேசிய வளங்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறை வளர்ச்சி, பொருளாதார திட்டங்களை நியாயப்படுத்துபவர்கள் வரலாற்றுச் சக்கரத்தை பின்நோக்கி இழுத்துச் செல்லும் பிற்போக்குவாதிகளும், பிற்போக்காளர்களும். சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்துக்கான போராட்டத்தின் மூலம உலகப் பொருளாதாரத்தில் தொழிலாள வர்க்கத்தின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதன் மூலமே இன்று அனைத்து நாடுகளிலும் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அடிப்படையான பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண முடியும், ஸ்டாலினிசத் தலைமைகளின் வர்க்கக் கூட்டு கொள்கைகளுக்கு எதிராக வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்கவும், அதற்காக போராடும் டிராட்ஸ்கிசக் கட்சியை பரந்த புரட்சிக் கட்சியாக மாற்றுவதற்கான பணியில் ஈடுபட முன்னேறிய தொழிலாளர்களும், புரட்சிகரமான அறிவுஜீவிகளும், இளைஞர்களும்முன் வரவேண்டும்.

- உலகவங்கி, ஐ.எம்.எப், போன்ற ஏகாதிபத்திய நிதி அமைப்புகளுக்கான கடன்களையும், உள்நாட்டு முதலாளிகளுக்கான கடன்களையும் திருப்பிச் செலுத்துவதை நிராகரி!
- அனைத்து முக்கிய தொழிற்துறைகளையும், ஏகாதிபத்திய உடமைகளையும் நஷ்டஈடின்றி தொழிலாளர் ஆதிக்கத்தின்கீழ் தேசியமயமாக்கு!
- விலைவாசி உயர்வுக்கு ஏற்ப சம்பள உயர்வுக்கு போராடு!
- மூடும் அபாயத்திலுள்ள அனைத்து ஆலைகளிலும் உள்ளிருப்பு செய்!
- தொழிலாளர் சபைகளை (சோவியத்துக்களை) கட்டு!
- முதலாளித்துவ அரசின் படைகளின் பயங்கரவாதத்திற்கும கருங்காலி குண்டர்களின் தாக்குதல்களுக்கும் எதிராக தொழிலாளர்களின் சொந்த பாதுகாப்பு படைகளை அமை!
- தொழிலாளர்களை பிளவுபடுத்தும மதவகுப்புவாத கலவரங்களை தூண்டும் சக்திகளை தோற்கடி!
- விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்!
- உணவு, உரம், போக்குவரத்துக்கான மானியங்கள் வெட்டப்படுவதை தோற்கடி!
- தேசிய பாதுகாப்புச் சட்டம் (என்.எஸ்.ஏ.) மற்றும் இதர கறுப்புச் சட்டங்களின்கீழ் கைது செய்து விசாரணை இன்றி காவலில் வைக்கப்பட்டிருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும விடுதலை செய்!
- பஞ்சாப், காஷ்மீர் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வாபஸ் வாங்கப் போராடு!

மேற்கூறிய திட்டங்களுக்காக போராடும் சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்து போராட முன் வரும்படி அனைத்து வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும், புரட்சிகர அறிவு ஜீவிகளையும் இளைஞர்களையம் அழைக்கிறோம். சி.பி.ஐ.(எம்), சி,பி.ஐ. ஸ்டாலினிசத் தலைமைகள் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு வழங்கும ஆதரவை நிறுத்தி சோசலிச மற்றும் ஜனநாயக வேலைத்திட்டங்களை அமல்படுத்தும தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராடும்படி தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்க வேண்டும்.

## "தொழிலாளர் பாதைக்கு" எதிரான விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டலை தோற்கடி!

(13ம் பக்கத் தொடர்சி)

உண்மையில் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டமோ, அல்லது ஜனநாயகக் கடமைகளான வறியவிவசாயிகளுக்கு காணி, நிலம் போன்ற பிரச்சனையோ இவை அனைத்துப்போராட்டங்களுக்கும் தலைமை கொடுக்க தேசிய முதலாளித்துவமோ, அல்லது குட்டி முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களோ உடல்ரீதியில் லாயக்கற்றதுடன், தனதுவாழ்ந்த தேசிய இனத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள், தொழிலாள வர்க்கத்தை அடிமைப் படுத்தவும், ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் ஏஜண்டுகளாக தம்மை மாற்றிக்கொள்ளவுமே முடியும் என்பதனை வளைகுடா யுத்தத்தின் போதும், அதற்கு பின்னரும் சர்வதேசரீதியாக தேசியமுதலாளித்துவத் தலைமைகளும் குட்டி முதலாளித்துவத் தலைமைகளும் நிறுவிக் காட்டியுள்ளனர்.

இது மாறாக "சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிசக் குடியரசு" எனும் முன்னோக்கின் கீழ் தமிழ், சிங்கள தொழிலாளவர்க்கத்தின் தலைமையில் போராட்டம் முன்னெடுக்கப்படல் வேண்டும். இதைவிட வேறு மார்க்கம் இலங்கைத் தீவில் தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கத்திற்கு கிடையாது. இதற்காக வேண்டி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இலங்கையில் போராடுகின்றது.

உலக முதலாளித்துவத்தின் வரலாற்று நெருக்கடி அதை மீண்டுமோர் புதிய உலக யுத்தத்தை நோக்கி நகர்த்துவதின் வெளிப்பாட்டை ஈராக் மீதான ஏகாதிபத்தியத்தின் கொடூர யுத்தத்தில் தெளிவாக்கியுள்ளது. மேலும் இவ் யுத்தத்திற்கு பலம்குறைந்த ஏனைய ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளின் உதவியும், ஆதரவும் கிடைத்துள்ளது மட்டுமன்றி இலங்கை, இந்திய முதலாளித்துவங்களும்தமது அடிபணிவைத் தெரிவித்தன.

தொழிலாள வர்க்கத்தின் நலன்கள் முதலாளிவர்க்கத்தினதும், மற்றும் அதற்கு சேவகம் செய்யும் குட்டி முதலாளித்துவ தேசிய விடுதலை இயக்கங்களினது தேவைகள், நலன்களுக்கு முற்றிலும் எதிரானது

இது மிகவும் ஒரு தெளிவான எச்சரிக்கை இலங்கையில் தமிழ், சிங்கள தொழிலாள வர்க்கம் உலகத்தின் அனைத்து நாடுகளிலுமுள்ள தனது வர்க்க சகோதரர்களோடு ஒரு கூட்டை ஏற்படுத்திக் கொள்வதும், முதலாளித்துவத்தை உலகளாவிய ரீதியில் தூக்கியெறிய போராடுவதும் முக்கியமாகும்.

இந்த முன்னோக்கின் அடிப்படையில் தொழிலாளவர்க்கத்தை ஆட்சிக்கு இட்டுச்செல்ல போராடும் பு.க.க.எதிராகவும், தொழிலாளர் பாதைக்கு எதிராகவும் ஆத்திரமூட்டிய விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுத் தலைமை உட்பட மற்றும் ஏனைய மத்தியவாத, குட்டி முதலாளித்துவ இயக்கங்களின் தேசியவாத, வங்குரோத்து வேலைத் திட்டங்களை வர்க்க நனவுள்ள தமிழ் தொழிலாளர்களும், இளைஞர்களும் தெரிந்து கொண்டு நிராகரிப்பதுடன் அவர்களை பு.க கழகத்தின் உலக சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரளுமாறு பு.க.க அறை கூவல் விடுக்கிறது.

ஏகாதிபத்திய யுத்தத்திற்கும், காலனித்துவத்திற்கும் எதிராக சர்வதேச தொழிலாளர்களை அணிதிரட்டும் பொருட்டு பேர்லினில் நவம்பர் 16,17ல் அனைத்துலகக் குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் மகாநாட்டில் கலந்து கொள்ளுங்கள். இம் மகாநாடு தொடர்பாக "ஏகாதிபத்திய யுத்தத்தையும், காலனித்துவத்தையும் எதிர்!" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனத்தை பு.க.க விநியோகிக்கின்றது. தமிழ் மொழி உட்பட வேறு பல மொழிகளில் வெளியிடப்பட்டிருக்கும் இந்த முக்கிய விஞ்ஞாபனத்தை வேண்டிப் படிப்பதுடன், ஜேர்மனியின் பல நகரங்களிலும் ஒழுங்கு செய்யப் பட்டிருக்கும் பொதுக் கூட்டங்களிலும் பங்கு கொள்ளுங்கள்.

படிப்பகம்

### அம்பலாங்கொடை கூட்டுறவு ஊழியர்கள் சங்கக் கூட்டம்:

# பேர்ளின் உலக தொழிலாளர் மகாநாட்டுக்கு பேராதரவு

ஜுன் 3ம் திகதி கூடிய கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கத்தின் அம்பலாங்கொடைக் கிளை நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் இடம் பெறவிருக்கும் உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்குப் பேராதரவு வழங்கும் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியது.

இப்பிரேரணை ''ஏகாதிபத்திய காலனித்துவத்தின் புதிய சாப்புகளுக்கும் உலக யுத்தத்துக்கும் எதிராக முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, சோசலிச வேலைதிட்டத்துக்குத் தன்னைஅர்ப்பணம் செய்து கொண்ட தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினைக் கட்டி எழுப்பத் தொழிலாள வர்க்கத்தினைத் தயார் செய்யும் போராட்டத்துக்குப் பூரண ஆதரவு வழங்கும் இம் மகாநாடு, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்ளினில் நடாத்தும் உலக தொழிலாளர் மகாநாட்டுக்கு பேராதரவு வழங்குகின்றது.'' எனக் குறிப்பிடுகின்றது.

அம்பலாங்கொடைத் தொழிலாளர்கள் எடுத்துள்ள இந்த முதலடியை முழுத் தொழிலாள வர்க்கமும் பின்பற்றவேண்டும் என நாம் வேண்டுகின்றோம்.

எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் இந்தப் பிரேரணைக்கு கூ. கூ. வ. ஊழியர் சங்கத் தலைமைப் பீடத்திடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த தொழிலாளர் மகாநாட்டுக்கு 1.45 மணி காலதாமதமாகி வந்த நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன 'பிரேரணை நிறைவேறவில்லை' என்றார், ''பிரேரணை நிறைவேறியதன் பின்னர் சுணங்கி வந்ததற்கு நாம் பொறுப்பு இல்லை'' என சங்க அங்கத்தினர்கள் அவருக்குப் பதிலளித்தனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு ஆதரவான பிரேரணை நிறைவேற்றுவது சங்க அரசியலமைப்புக்கு முரணானது என விக்கிரமபாகு கருணாரத்ன பாடினார். விட்டுக்கொடுக்காத அங்கத்தினர்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் அத்தகைய உலகலாவிய நடவடிக்கைக்கு ஆதரவு காட்டுவதை தடை செய்யும் சரத்தினை வாசித்துக்காட்டும்படி அவரை சவால் செய்தனர். இதனால் விக்கிரமபாகு கருணாரத்னவின் வாயடைபட்டது.

ஏர்ணஸ்ட் மண்டேலின் போலிஅனைத்துலகத்திற்குப் புதிதாகச்சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பது, இத்தகைய கடைகெட்ட சந்தர்ப்பவாத, பிற்போக்கு, அனைத்துலக விரோத நவசமசமாஜக் கட்சியே.

இந்த அரைக் காலனித்துவ நாடுகளில் ஆளும் வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகளின் 'புதிய உலக அமைப்புக்கு' ஒத்தூதுகையில், தொழிலாள வர்க்கத்தினை இந்த பிற்போக்கு வர்க்கத்துடன் பிணைத்துப் போட தேசியவாத சந்தர்ப்பவாத தலைவர்களின் முயற்சிகளுக்கு எதிராகத் தொழிலாளர்கள் அனைத்துலகவாத பாதையில் இறங்கியுள்ளதைஅம்பலாங்கொடை தொழிலாளர்களின் நடவடிக்கை எடுத்துக்காட்டுகின்றது.

# கொக்கட்டிச்சோலையில் தமிழ் மக்கள் படுகொலை

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தினை வெளியேற்று!

பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத ஆயுதப் படைகள் கொக்கட்டிச் சோலையில் நடாத்திய மனிதப் படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதையும் தமது ஆழ்ந்த கவலையை தமிழ் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடம் தெரிவித்துக் கொள்கின்றது.

ஜுன் 12 புதன்கிழமை கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த மயிலடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா கிராமங்களுள் பாய்ந்து விழுந்த கொக்கட்டிச் சோலை இலங்கைப் படையினர் கையில் அகப்பட்ட ஆண், பெண், குழந்தை குஞ்சு அனைத்தையும் வெட்டிக் கொத்திக் கொலைவெறியாடியுள்ளனர். சில குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களை வீடுகளுக்குள் டைனமைட் வெடிக்க வைத்துக் கொன்றுள்ளனர். அங்கிருந்துகிடைக்கும் தகவல்களின்படி 180க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதோடு இவர்களுள் முதலைக்குடா பாடசாலையைச் சேர்ந்த 16 மாணவர்களும் அடங்குவர்.

சோவினிசப் படைகளின் இனவெறியாட்டத்தில் இருந்து தப்பிய பாடசாலை ஆசிரியை ஒருவர், 38 பேரின் சடலங்கள் நெருப்பினுள் தள்ளப்பட்டு சுட்டெரிக்கப்பட்டதை தான் கண்டதாகக் கூறியுள்ளார். அருகேயுள்ள அரிசி ஆலைக்குச் சமீபமாக 56 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக மற்றொருவர் தெரிவித்துள்ளார். உயிர் தப்பிப் பிழைத்த 6 பாடசாலை மாணவிகள் தாம் கற்பழிக்கப்பட்டு தாக்கப்பட்டதாக முறைப்பட்டுள்ளனர், இராணுவத்தினர் பல சிறுவர்களை எரிந்து கொண்டிருந்த வீடுகளுக்குள் தூக்கி வீசியுள்ளனர்.

### திக்கிரை

குறைந்த பட்சம் 450 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதோடு, பலத்த காயமடைந்த 24 பேர் பொலநறுவை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்தக் காட்டுமிராண்டித் தாக்குதல் மீண்டும் எக்கணமும் இடம் பெறலாம் என்ற அச்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் காடுகளுக்குள் மறைந்து கொண்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் தாழங்குடா, ஆரையம்பதி முதலான கிராமங்களுக்கு அகதிகளாக ஓடித் தப்பியுள்ளனர்.

இப்படுகொலைகள் பற்றி ஆராய கமிட்டி நியமனம் செய்த பிரேமதாச, இராணுவப் பயங்கரங்களை மூடி மறைக்கும் மற்றுமோர் நடவடிக்கையாக ஜனாதிபதி பிரேமதாச 'சம்பவத்தை ஆயும்' கமிட்டி ஒன்றை நியமனம் செய்தது, விடுதலைப் புலிகள் இராணுவ ட்ராக்டரை வெடிகுண்டு வைத்து தகர்த்ததைத் தொடர்ந்தே இராணுவத்தினர் இப்பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் காட்ட முதலாளித்துவப் பத்திரிகைகள் முயன்றுள்ளன.

இவை எல்லாம் பொய்யானவை; மோசடியானவை. உண்மையில் கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் இனவாத யுத்தம் ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியான தினத்தன்றே (12-6-1991) இடம் பெற்றுள்ளது, ஒரு தசாப்தத்துக்கு மேலாக இந்த யூ. என். பி. அரசாங்கம் நடாத்தி வரும் இனப்படுகொலைகளுள் அதிக எண்ணிக்கையான மக்களின் உயிர்களைப் பலி கொண்ட தனிச் சம்பவம் இதுதான். உண்மையில் இப்படுகொலைகள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினைச் சிதறடிக்கும் ஒரு நடவடிக்கையாக கிழக்கில் மக்களின் கொதிப்பு உச்சக் கட்டத்தினை அடைந்துள்ள ஒரு கட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

(19ம் பக்கம் பார்க்க)

# தோட்டத் தனியார்மயமாக்கல் தொழிலாளர் உரிமைகளை பறிக்கும்

தோட்டங்களை தனியார் துறைக்கு கையளிக்கும் சட்ட மூலத்திற்கு யூ.என்.பி. மந்திரிசபையில் குந்தியுள்ள இ.தொ.கா. தொண்டமான் செல்லச்சாமி தலைவர்கள் அனுமதி வழங்கின. இதனை இப்பிற்போக்கு தலைமைகள் தொழிற்சங்கம் தோட்டத்தை விலைக்கு வாங்கி, அதன் மூலம் இலாபமுட்டை கூட்டவும் தமது தனிப்பட்ட வாய்மைக்காக தோட்டங்களை பெறும் வாய்ப்புக்களுக்கும் பண்டிபடிந்துபோனார். ஆரம்பித்ததிலிருந்து விளங்கிக் கொள்ளலாம்.

எனினும் இத்தோட்டங்களை உலகவங்கி ஆணைப்படி தனியார்மயமாக்குவதன் மூலம் தமது தொழில், வாழ்க்கை தரம் சம்பளங்களுக்கு தொடுக்கப்படவுள்ள தாக்குதலைப் பற்றி தொழிலாளர் நன்கறிவர். அவர்களிடையே தனியார் மயப்படுத்தலுக்கு எதிரான வெறுப்பு வளர்கின்றது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சியிலிருந்து அடிமைத்தனமான காரணங்களுக்காளாகிய இ. தொழிலாளர் கடந்த காலங்களில் வென்றெடுத்த உரிமைகளை அழிக்கவும் இந்தியாவுக்கு நாடு கடத்தல் உள்ளடங்கலான அடக்குமுறைக்குள்ளாக்கவும் செய்யும் சட்டங்களை செயற்படுத்தப்படும் நிலைமைக்கும் முகம் கொடுக்கிறார்கள்,

கொட்டகலை, சின்னமண்வெட்டி தோட்ட இ.தொ.கா கிளைத்தலைவரான, எம். ராமையா இத்தனியார்மயமாக்கலை பின்வருமாறு கண்டித்துள்ளார்:

''தோட்டம் தனியார்மயமாக்குவதன் மூலம் தற்சமயம் நாம் அனுபவிக்கும் உரிமைகளை தொழிலாளர் இழப்பர். வேலை செய்யும்நேரம் மணித்தியாலங்களால் அதிகரிக்கப்படும், தொழிலாளரினை பழிவாங்க கம்பெனிகாரர் முயல்வர். அரச நிர்வாகத்தின் கீழ் கூட நாம், பலவித சட்டங்களை எதிர்கொண்டோம். அரசாங்கம் தோட்டங்களை தனியார்மயமாக்கினால் நிலைமை மேலும் மோசமடையும்.

''இ. தொ. கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமி தொழிலாளருக்கு தோட்டத்தில் பங்கு கிடைக்கப்போவதாய் பிரசாரம் செய்கிறார். இது இச் செயற்திட்டத்தை தொழிலாளர்ஏற்றுக்கொள்ள செய்யுமுகமாக கூறப்படும் வெறும் கண்துடைப்போன்றாகும். உண்மையில் இது பொய்ப்பிரசாரமே. பங்குகள் தொழிலாளருக்கன்றி அவருக்கும் அவரது சகபாடிகளுக்குமே கிடைக்கும்.''

# கொக்கட்டிச்சோலையில் தமிழர்கள் படுகொலை..

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்வதோடு, தமிழ் தேசிய இனத்தினரைக் காக்க இனவாத யுத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழ வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இந்த இனவாத யுத்தம் எந்த விதத்திலும் இந்நாட்டுத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல, 1947-48ம் ஆண்டுகளில் இந்தியத்துணை கண்டப் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய நலன்களைக் காக்கும் பொருட்டு இனவாத அரசஅமைப்புத்திணிக்கப்பட்டது. இந்தத் திணிப்பு நடவடிக்கையின் அங்கமாகதமிழ் — சிங்கள தேசிய இனத்தினர் பலாத்காரமான முறையில் இணைக்கப்பட்டனர். இதன் நிர்மாணமாகவே முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசுமுறை எழுந்தது. இந்த ஒடுக்குமுறை அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்துள்ள தமிழ் தேசிய இனத்தினரைஒடுக்கித் தள்ளுமுகமாகவே இனவாத யுத்தம் இடம் பெறுகின்றது என்பதை பு. க. க. சுட்டிக் காட்டுகின்றது.

அமெரிக்க ஆளும் வர்க்கம் உட்பட ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு எதிரான யுத்தத்தின் மூலம் காலனித்துவத்தினதும் மூனறாம உலக யுத்தத்தினதும் வேலைத்திட்டங்களை அரங்கேற்றியுள்ள தருணத்திலேயே பிரேமதாச அரசாங்கத்தின்இந்தக்காட்டுமிராண்டி யுத்தம் புதிய கட்டத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நவ காலனித்துவத்துக்கும் யுத்தவெறி நலன்களுக்கும் சேவை செய்ய வேண்டின், ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்துள்ள தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும்கிராமப்புறஏழைகளையும் சக்திமிக்க தொழிலாள வர்க்கத்தையும் துடைத்துக் கட்டுவது பிரேமதாச அரசாங்கத்துக்கும் முழு ஆளும் வர்க்கத்துக்கும் அவசியமாகியுள்ளது. இது ஏகாதிபத்திய நலன்களுடன் இணைந்து கொண்டுள்ளது,

இந்த இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒருஆளோ ஒரு கருவியோ வழங்கவே கூடாது! இலங்கைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் நிலைப்பாடு இதுவாக விளங்க வேண்டும். தமிழ் ஒடுக்கப்படுவோரின் சுயநிர்ணய உரிமையை வழங்கு! வடக்கு — கிழக்கில் இருந்து இலங்கைப் படைகளை வெளியேற்று! இலங்கைத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கோரிக்கையாக மேற்கண்டவை விளங்க வேண்டும்.

பிரேமதாச அரசாங்கம் தினசரிவடக்கு-கிழக்கில் காட்டுமிராண்டித்தனமான முறையில் கொன்று குவிப்பது இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் சகோதர தொழிலாள ஒடுக்கப்படும் மக்களையே. தம்மை கசக்கிப் பிழிந்து, இரத்தம் உறிஞ்சும் இலங்கை முதலாளி வர்க்கத்தில்இருந்து விடுதலை பெற வேண்டின் இந்நாட்டுத் தொழிலாள வர்க்கம், முதலாளி வர்க்கத்தால் தவிடு பொடியாக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைக் காக்க கிளர்ந்து எழ வேண்டும். அவர்களுடன் ஐக்கியம் பூண வேண்டும்.

## யுத்தப் பளு

கடந்த சில மாதங்களாக இந்த இனவாத யுத்தப் பளுக்களை தொழிலாள வர்க்கத்தின் தலையில் கட்டி அடிக்கும் நடவடிக்கையில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டது. விலைவாசி உயர்வு, வரி உயர்வு, இலவச சேவைகள் வெட்டு என்ற விதத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த யுத்தத்துக்கு திரட்டியது. இன்று இந்த யுத்தச் செலவினத்தைக் காட்டி, தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கைகளைக் குப்பைக் கூடைக்குள் வீசவேண்டும் என்ற முடிவுக்கு பிரேமதாச அரசாங்கம் வந்துள்ளது, சம்பள அதிகரிப்புக் கோரிய இலங்கை ஆசிரியர் சங்கம், மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமைகளுக்குகல்வி அமைச்சுமத்திய வங்கி உயரதிகாரிகள் இதையே கூறியுள்ளனர்:பெருமளவிலான பணத்தை அரசாங்கம் யுத்தத்துக்கு செலவிடுவதால் அரசாங்கம் சம்பள உயர்வு வழங்க முடியாது. இதையே இலங்கை வங்கி, மக்கள் வங்கி அதிபர்கள் இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் சர்வதேச ஏகபோக நிதி மூலதனத்தினதும், கோரிக்கைகளை ஒன்றுவிடாமல் அமுல் செய்து, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வயிற்றிலடிக்கையிலேயே இந்த இனவாத வெறியையும் தூண்டி வருகின்றது, கடந்த வாரம் கொக்கலையில் மற்றுமோர் சுதந்திர வர்த்தக வலயத்தினை நிர்மாணிக்கும் வேலைகளை ஆரம்பித்து வைத்த பிரேமதாச அரசாங்கம், தோட்டத்துறையையும் தொலைத்தொடர்புத்திணைக்களம் உட்பட கூட்டுத்தாபனங்களையும் தனியார்மயமாக்கி, உள்ளூர் — வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டல் மயமாக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி உள்ளது. பங்குகள் கைமாறும் போது அறவிட்டு வந்த கட்டணங்களை இரத்து செய்துள்ளதோடு இலாபங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் இருந்து வந்த அற்பசொற்ப தடைகளையும் இரத்துச்செய்துள்ளது. இதனால் வெளிநாட்டு மூலதனக்காரர்கள் கொழும்பு பங்குமுதல் சந்தைக்குள் பெருக்கெடுத்து வருகின்றார்கள். இதற்கிடையே அரசாங்கம் தோட்டத்துறையில் இலட்சக் கணக்கான தொழில்களை நாசமாக்கும் நடவடிக்கைகளை அமுல் செய்து வருகின்றது.

இதனை யூ. என். பி. அரசாங்கம் வேலைத் தலங்களில் போராளிகளையும் தொழிற் சங்கங்களையும் வேட்டையாடும் இயக்கத்துடன் சேர்த்து செய்து வருகின்றது. தோட்டப் பகுதியில் ஆயுதப் படைகளைக் கொண்ட ஆயுதம் தாங்கிய படைப்பிரிவொன்றுநிறுவப்பட்டுள்ளது. இலங்கை வங்கி ஊழியரின் தொழிற்சங்க நடவடிக்கை பற்றிக் கேள்விப்பட்டதுதான் தாமதம் அரசாங்கம் சங்க அங்கத்தினர்களின் 'பயங்கரவாத' தொடர்புகள் பற்றி ஆராய்ந்து வருவதாக மிரட்டி உள்ளது. தாதிகள் பயிற்சிப் பாடசாலை நிர்வாகிகள், மாணவர்களை வேட்டையாடும் இலக்குடன் அவர்களுக்கு எதிராக இரகசியப் பொலிசாரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்கிடையே தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை இருந்தாலும் அதை அங்கீகரிக்க முதலாளிகள் கட்டுப்பட்டிருக்கவில்லை என்ற பிரச்சாரத்தினை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் மூலம் அரசாங்க, தனியார் துறைகளில் தொழிற் சங்க உரிமையை நாசமாக்கும் நடவடிக்கைகளை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. ரூபா மதிப்பிறக்கம் வர்த்தமானி அறிவிப்புக்கள் மூலம் விலைவாசிகளை உயர்த்தல், மானியங்களை வெட்டுவதன் மூலமும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குக் குழிபறிக்க யூ. என். பி, அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

மறுபுறத்தில் நிலப் பிரச்சினை,வேலையின்மை வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி, வீடில்லாப் பிரச்சினைகளுக்குப் பலிகடாக்களாகியுள்ள ஏழைத் கிராமப்புறவாசிகளை நசுக்கும் பொருட்டு 1 இலட்சம் இளைஞர்களை படுகொலை செய்து, ஆரம்பித்த பயங்கர இயக்கம் இன்னமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது,

## 'வொயிஸ் ஒப் அமெரிக்கா'

இலங்கை முதலாளி வர்க்கத்தினர் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவத்துக்கும் யுத்தவெறி நலன்களுக்கும் உதவும் தமது தயார் நிலையை ஈராக்குக்கு எதிரான, யுத்தத்தின் போது அமெரிக்க விமானப் படைகள் கட்டுநாயக்காவில் தரையிறங்கவும் எண்ணெய் எடுக்கவும் இடமளித்தனர். இன்று இரணவிலவில் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம் அமைத்துக் கொள்ளவும் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். இந்தியாவில் சூடுபிடித்துள்ள அரசியல் நெருக்கடியின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளை முழுமனே அணைத்துக்கொள்ள தயாராகியுள்ள இந்திய முதலாளி வர்க்கம், அந்நாட்டினுள் மட்டுமன்றி இலங்கை உள்ளடங்கலான முழுப்பிராந்தியத்திலும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களைச் சிதறடிக்க வெறிபிடித்து அலைகின்றது. ஒடுக்கப்படும் தமிழ் மக்களை நசுக்க 1987ல் இராணுவத்தினை அனுப்பியதன் மூலம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட இந்திய ஆட்சியாளர்கள், இன்று ராஜீவ்காந்தி கொலையைப் பாவித்து தமிழ் அகதிகளை இலங்கைக்கு அடித்துக்கலைக்கவும் போராளிகளை யூ. என். பி அரசாங்கத்தின் சித்திரவதை இயந்திரத்திடம் ஒப்படைக்கவும் முயல்கின்றனர்.

பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு ஆதரவு தரும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ, தொ. கா. தலைவர்கள் அப்பாவிக் குடிமக்கள் கொலை செய்யப்படுவதையிட்டு முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இதன் மூலம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண் வீசுகின்றனர். ஆயுதப்படைகள் உரிய முறையில் தொழிற்பட பிரேமதாச அரசாங்கம் இடமளிப்பதாய் இல்லை என்பதே இத்துரோகத் தலைவர்களின் முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. இந்நடவடிக்கை இனவாத யுத்தத்துக்கு மட்டுமன்றி, கிராமப்புற ஏழைகளை வேட்டையாடும் பிரேமதாச அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கும் கைகொடுக்கின்றது,

இச்சமயத்தில், அரசாங்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நடாத்தும் பேச்சுவார்த்தைகளில்கலந்து கொள்ளத் தாம் தயாராக உள்ளதாக பிரான்சில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க தலைவரான லோரன்ஸ் திலகர் அறிவித்துள்ளார். இவர்களின் இன்றைய முக்கிய இலக்கு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவினைத் திரட்டுவதாக உள்ளது. இந்நடவடிக்கையானது ஏதேனும் ஒரு ஏகாதிபத்தியச் சக்தியின் ஏஜன்சியாக மாறி, தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் தனிமைப்படுத்தி, அரசியல் ரீதியில் நிராயுதபாணிகளாக்குவதாகும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம்,தமிழ் ஈழம் பிராந்தியங்களில் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினை உறுதி செய்வதன் மூலம் போராட்டத்தில் குதிப்பதே விடிவுக்கான ஒரே மார்க்கம். தமிழ் ஒடுக்கப்படும் மக்களைக் காக்க முன்நிற்பதோடு, இனவாத யுத்தத்துக்கு அடிமைப்படுத்தி தமது கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் வீச அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைத் தோற்கடிக்கத் தொழிலாள வர்க்கப் போராட்டப் பாதையில் குதிக்க வேண்டும்.

## வேலைத்திட்டம்


தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் தமிழ் மக்களதும், கிராமப்புற ஏழைகளதும் இளைஞர்களதும் அமைப்புக்களதும், அமைப்புக்கள் இல்லாத இடங்களில் வேலைத்தல கமிட்டிகளையும் நடவடிக்கைக் குழுக்களையும் அமைப்பதன் மூலம் அவர்களின் பிரதிநிதிகளையும் கொண்ட பேராளர் மகாநாட்டினை உடன் கூட்டப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இம்மகாநாடு, வட — கீழ் மாகாண இனவாத யுத்தத்துக்கும் கிராமப்புற படுகொலைகளுக்கும், உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கும் மாணவர்கள் உள்ளடங்கிய இளைஞர்களை நசுக்கும் முதலாளிகளின் தாக்குதல்களுக்கும் எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கான வேலைத்திட்டங்களைக் கலந்துரையாடி முடிவுகாண வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோஷலிஸ்டுகளும், 'தொழிலாளர் பாதை'யும் வேண்டுகின்றன.

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்தல், கிராமப்புற ஏழைகளின் விவசாயப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், இளைஞர்களின் உரிமைகளை வழங்குதல் என்பது, முக்கிய முதலாளித்துவகைத்தொழில்களையும் நிறுவனங்களையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குதலையும் ஏகாதிபத்திய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைப் பகிஷ்கரிப்பதையும் வேண்டிநிற்கிறது. இந்த வேலைத்திட்டத்தினை இப்பேராளர் மகாநாடு கலந்துரையாடி தீர்மானம் எடுப்பது அவசியம்.

உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசினை நிறுவுவதன் ஒரு பாகமாக யூ. என். பி, அரசாங்கத்தினை வெளியேற்றி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை நிறுவவேண்டியதன் அவசியம் கொக்கட்டிச்சோலை ஏழைகளின் இரத்தத்தினால் எழுதப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்குப் போராடும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினைக் கட்டி எழுப்ப வேண்டும். இத்தலைமையைக் கட்டி எழுப்பும் பொருட்டு 1991 ஜூலை 29ல் கொழும்பு பொதுஜன நூல் நிலைய கேட்போர் கூடத்தில் இளம் சோஷலிஸ்டுகள் கூட்டும் தேசிய மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி நாம் சகல இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

# காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி: மார்க்சிசத்தின் உன்னதபடைப்பு

## பகுதி -2




சமூக வளர்ச்சிப் போக்குகளின் ஆய்வை, தனிப்பட்ட மற்றும் மனோவியல் ரீதியான எண்ணங்கள் சம்பந்தமான ஊகங்களினால் பிரதியீடு செய்யும் வரலாற்று அகநிலைவாதத்தை இகழ்வுடன் டிராட்ஸ்கி நிராகரித்தார். ஸ்டாலினின் எதேச்சாதிகார ஆட்சிக்கு இட்டுச்சென்ற அதிகாரத்துவத்தின் வளர்ச்சிக்கு வேராக இருந்தது, ஒரு பின்தங்கிய நாட்டில் உருவாக்கப்பட்ட தொழிலாளர் அரசு சிறப்பாக கொண்டிருந்த பொருளாயத முரண்பாடுகளாகும்.

சொத்துவடிவங்களின் கண்ணோட்டத்தில பார்க்கையில் சோவியத் அரசு சோசலிஸ டாகும். ஆனால் பின்தங்கிய வறிய, பஞ்ச நிலைமைகளைக் கொண்டிருந்த சோவியத் ரஷ்யாவில சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் பொருளாயத தேவைகளை முழுமையாகவும், சமமாகவும் திருப்திப்படுத்துவதை நினைத்துக்கூட பார்கக முடியாது. அரசின் மேற்பார்வையின் கீழ் பொருட்களை விநியோகிப்பது தொடர்ந்து முதலாளித்துவ மதிப்பு அளவின்படி சமனற்ற முறையில் நடைபெற்று வந்தது.

அதனால் சமனற்றதாக இருந்தது. அதாவது இந்த சமத்துவமின்மை — அல்லது அதையே இன்னொரு வார்த்தையில் கூறினால் ஒரு சிறுபான்மையின் சலுகைகள் — குறைந்தபட்சம் தொடக்கத்திலேனும் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள பொருளாதாரத்திற்கு அவசியமானது. இந்த முறையிலான விநியோகம் முதலாளித்துவ தன்மையுடையதாக இருந்து வந்தது, என்ற உண்மையை மாற்றி அமைக்கவில்லை.

இவ்வாறாக தொழிலாளர் அரசின் இரண்டு விரோதமான செயற்பாடுகளை சோவியத் அரசாங்கம் பிரதிபலித்தது. உற்பத்தி சாதனங்களில் சமூக சொத்துடமையை பாதுகாக்கும் அதேசமயம் முதலாளித்துவ முறையிலான விநியோகத்தை மேற்பார்வையிடுதல், அதன் மூலம் ஒரு சிறுபான்மையின் சலுகைகளை பாதுகாத்தல் அதிகாரத்துவம் இந்த முரண்பாட்டின் அடிப்படையில் உருவானது: ''முதலாளித்துவ எதிர்ப்புரட்சிக்கு எதிராக சமூக உடமையின் பாதுகாப்புக்காக 'ஆயுதம் ஏந்திய அரசு' முழுமையாக போதுமானது, நுகர்வுத் துறையில் சமத்துவமின்மைகளை ஒழுங்குபடுத்துவது என்பது முற்றிலும் வேறுபட்ட ஒரு விஷயமாகும். சலுகைகள் இல்லாதிருப்பவர்கள் அவற்றை உருவாக்கவும் பாதுகாக்கவும் விருப்பமில்லாதவர்கள். சிறுபான்மையின் சலுகைகள் பற்றி பெரும்பான்மை அக்கறை செலுத்த முடியாது. 'முதலாளித்துவ சட்டத்தின்' பாதுகாப்புக்கு தொழிலாளர் அரசானது 'முதலாளித்துவ' மாதிரியிலான ஒரு கருவியை உருவாக்க நிர்ப்பந்திக்கப் பட்டது—அதாவது ஒரு புதிய சீருடையில் அதே பழைய ஜெண்டார்ம் (போலீஸ்)

அதிகாரத்துவம் ஒரு சமூக 'ஜெண்டார்மாக' சமத்துவமின்மையின் போலீசாக செயல்படுகின்றது என்று டிராட்ஸ்கி விளக்கினார்.

''இவ்வாறாக போல்ஷேவிக் செயல்திட்டத்துக்கும் சோவியத் யதார்த்தத்திற்கும் இடையிலான அடிப்படையான முரண்பாட்டை புரிந்து கொள்வதற்கான முதல்படியில் நாம் அடியெடுத்து வைத்துள்ளோம். அரசு மடிந்து போகாமல் மேலும் மேலும் எதேச்சாதிகாரமாக வளருமாயின், தொழிலாள வர்க்கத்தின் பூரண அதிகாரம் பெற்ற வர்கள் அதிகாரத்துவ மயப் படுத்தப்படுவார்களாயின புதிய சமுதாயத்துக்கு மேலாக அதிகாரத்துவம் உயருமாயின இதற்கு காரணம் கடந்த காலம் பற்றிய மனோதத்துவ ரீதியான பழைய நினைவுகள் போன்ற இரண்டாந்தரமான காரணங்கள் அல்ல. ஆனால் உண்மையான சமத்துவத்தை உத்தரவாதம் செய்வது சாத்தியமற்றதாக இருக்கும வரையில ஒரு சலுகை மிக்க சிறுபான்மையை உருவாக்கவும் ஆதரவளிக்கவும் வேண்டிய கடுமையான அவசியத்தின் விளைவே ஆகும''.

பாட்டாளி வர்க்க புரட்சியின் தோல்விகளினால் தனிமைப் படுத்தப்பட்ட ஒரு பின்தங்கிய வறிய நாடாகவும் இருந்த தொழிலாளர் அரசின் முரண்பாடுகளிலிருந்து அதிகாரத்துவம் தோன்றியது ஆனால் புறநிலையான முரண்பாடுகளின் சக்தியானது உடனடியாகவும் நேரடியாகவும் அப்படியே ஸ்டாலினிச ஆட்சியின் கொடுமைகளில பிரதிபலித்தது என்று கருதக்கூடாது. பொருளாதார தளத்திலிருந்து வெளிவந்த அறிகுறிகள், அவற்றின் வளங்கள் எவ்வளவுதான் சக்தி வாய்ந்தவையாக இருந்தபொழுதிலும் அவை அரசியல் மேல்கட்டுமானத்தின் வெளிப்பகுதிகளிலேயே உணரப்பட்டன. அவை முரண்பட்ட செல்வாக்குகளைக் கொண்ட வரலாற்று பாரம்பரியம், கலாச்சாரம், சிந்தாந்தம் மற்றும் தனிப்பட்ட மனோவியலினால் தீர்க்கப் பட்ட பின்னர் வேலைத் திட்டம், கொள்கை என்ற வடிவில் பதிவு செய்யப்படும். அதிகாரத்துவ தட்டு ஒரு திட்டவட்டமான அரசியல் போக்காக படிகாரம் போன்று பலப்படுத்தப்பட்டு அது இறுதியில் போல்ஷேவிக் கட்சியை அழித்தது,இது ஒரு சிக்கலான கசப்பான நீடித்த செயல் போக்காக இருந்தது. அதிகாரத்துவ பிரிவின் பிரதிநிதிகளாக மாறியவர்கள ரஷ்யப் புரட்சியினால் செய்யப்பட்டதை காட்டிக்கொடுக்கும், அழிக்கும் எண்ணத்துடன் தொடங்கினார்கள் என்று நம்புவது தவறானதாகும். நிச்சயமாக போல்ஷேவிக் கட்சிக்குள் அரசியல் போராட்டத்தின் தொடக்கத்தில் ஸ்டாலினும் அவரது ஆதரவாளர்களும் சலுகைகளையும் சமத்துவமின்மையையும் பாதுகாப்பவர்களாக தம்மைக் கண்டு கொள்ளவில்லை. அதாவது தொழிலாளர் அரசின் முதலாளித்துவ செயற்பாடு ஸ்டாலினின் குறுகிய அனுபவவாதம்-மிக ஆழமான சமூக வளர்ச்சிப் போக்குகளுடன் தொடர்புடையதாக நாளுக்கு நாள் நடக்கும் சம்பவங்களை ஆய்வு செய்யும் திறன் இல்லாமை அல்லது வர்க்க சக்திகள் ஆதிக்கம் செலுத்தும் பாதையை பின்பற்றுதல் — ஆகிய இவை இடதுசாரி எதிர்ப்பியக்கத்துடன் அவர் நடத்தும் போராட்டத்தின் நீண்டகால பிரதிவிளைவுகள் பற்றி முன் கூட்டியே எண்ணிப்பார்க்க திறனில்லாத ஒரு அதிகாரத்துவத்தின் தலைவனாக மாறுவதற்கு அனுமதி அளித்தது. டிராட்ஸ்கி இதை விளக்குகையில்;

''மக்களுக்கு இதற்கு முன்னர் தெரிந்திராத ஸ்டாலின் திடீரென்று காற்றில ஒரு முழுமையான மூல உபாயத் திட்டத்துடன் தோன்றினார் என்று நினைப்பது அப்பாவித்தனமாகும். நிச்சயமாக இல்லை. அவர் தனது சொந்தப் பாதையை தீர்மானிக்க முன்னரே ஸ்டாலினை அதிகாரத்துவம் கண்டு கொண்டது அதற்கு அவர் அனைத்து உத்தரவாதங்களையும் வழங்கினார்:

பழைய போல்ஷேவிக்குகளின் கௌரவம், உறுதியான குணம், குறுகிய கண்ணோட்டம், அரசியல்' எந்திரத்தில் தன்னுடைய செல்வாக்கு மிக்கதாக நெருக்கப்படுத்திக் கொள்ளல் அவர்மீது கிடைத்த வெற்றியானது ஸ்டாலினுக்கே ஆச்சரியமாக இருந்தது. பழைய தத்துவத்தினின்று விடுபடுவதற்கும், மககளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடுவதற்கும், உள்விவகாரங்களில் நம்பிசகைக்குரிய மத்தியஸ்தராக இருப்பதற்கும் இது புதிய ஆளும் கூட்டத்தின இதமான வரவேற்பாக இருந்தது இரண்டாவது ஆளாக, புரட்சிகளின்போது மக்களின் முன்னால் ஸ்டாலின் தன்னை தெர்மிடோரியன் அதிகாரத்துவத்தின் நம்பத்தகுந்த தலைவராக வெளிப்படுத்திக் கொண்டான்.'' (pp.80-81).

---

### அதிகாரத்துவத்திற்கு எதிராக டிராட்ஸ்கியின் போராட்டம்

---

1923ல் டிராட்ஸ்கி அதிகாரத்துவத்திற்கு எதிராக தொடங்கிய தத்துவார்த்த, அரசியல் போராட்டத்தின் முடிவாக 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' எழுதப் பட்டது. அந்த வருட இலையுதிர் காலத்தில், டிராட்ஸ்கி தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதினார். அது 'புதிய போக்கு' என்ற தலைப்பில் வெளியானது, அதில் அவர் விரிவாக்கப்பட்டுள்ள சோவியத அரசு, போல்ஷேவிக் கட்சியின அமைப்புகளினுள் அதிகாரத்துவ போக்குகளின் வளர்ச்சி பற்றி எச்சரிக்கை செய்தார். உட்கட்சி ஜனநாயகம் மூச்சுத் திணறுவதை அவர் கவனித்தார், இது சோவியத் வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் அதிகாரத்துவம் அதிகமாக சுதந்திரமான அதிகாரம் செலுத்துவதற்கு அறிகுறியாக இருபபதை பார்த்தார்,

இப்போராட்டம் தொடங்கியபோது போல்ஷேவிக் கட்சியினுள்ளும் சோவியத் மக்களிடையேயும் டிராட்ஸ்கிக்கு பெருமளவு மதிப்பு இருந்தது. அவரும், நோய்வாய்ப்பட்டிருந்த லெனினும் அக்டோபர் புரட்சியின், சோவியத் அரசின் மிகவும் செல்வாக்கு நிறைந்த தலைவர்களாக இருநதார்கள். போல்ஷேவிக் கட்சிக்குள்— சிறப்பாக புரட்சியில் உள்நாட்டு யுத்த காலத்தில் தலைசிறந்த பங்காற்றியவர்கள் மத்தியில் டிராட்ஸ்கியின் விமர்சனங்களுக்கு பெரும் ஆதரவு இருந்தது. இடதுசாரி எதிர்ப்பியக்கத்தினை தொடங்குவதற்கான தொடக்க மேடையை ''புதிய போக்கு' வழங்கியது, அது வளர்ச்சி அடையும் அதிகாரத்துவத்தின் செல்வாக்கை எதிர்கொண்டு நின்றது. டிராட்ஸ்கியின் கட்டுரைகள் ஏற்படுத்திய கடுமையான எதிர்ப்பு அதிகாரத்துவம் ஒரு சமூக சக்தியாக மாறிவிட்டது என்பதை சுட்டிக் காட்டுவதாக இருந்தது. மார்க்சிச விமர்சனங்களுக்கு எதிராக அதிகாரத்துவம அதன் நலன்களை பாதுகாப்பது பற்றி அறிந்திருந்தது.

அந்த வருட இலையுதிர் காலத்தில் ஜனவரி 21,1924ல் லெனின் இறந்தார் சோவியத் தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்கும தனது சொந்த நலன் பற்றி விழிப்பாகி வரும அதிகாரத்துவத்திற்கும் இடையிலான பிளவு ஒரு அரசியல் நிலைப்பாடு முறைப்படுத்தப்பட்டதில வெளிப்படுத்தப்பட்டது. அது தொடக்கத்திலிருந்து போல்ஷேவிக் கட்சி அடிப்படையாகக் கொண்டிருந்த முன்நோக்குகளுக்கும் சர்வதேச வேலைத்திட்டத்திற்கும் முழுமையாக எதிரானதாக இருந்தது. சோவியத் யூனியனில் சோசலிசத்தின் வளர்ச்சி இறுதியாக பார்க்கையில் உலக முதலாளித்துவத்தின் வளர்ச்சியடைந்த ஐரோப்பிய மையங்களில் சோசலிசப் புரட்சியின் வெற்றியிலேயே தங்கியுள்ளது என்பதே எப்பொழுதும, நாம் முன்பு குறிப்பிட்டது போல, போல்ஷேவிக்கின் அதாவது மார்க்சிச முன்நோக்கின் கேள்விக்கிடமில்லாத அத்திவாரமாக இருந்தது. லெனின் உயிருடன் இருக்கும் வரையில் போல்ஷேவிக் கட்சியின் தலைமையில் இருந்த எவருமே சோவியத் யூனியனின் வளங்கள் ஒரு சுய பூர்த்தியான சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கு போதுமானது என்று ஒருபோதும் கூறவில்லை. உண்மையில் மார்க்சிச தத்துவம் ஒரு வளர்ச்சி அடைந்த முதலாளித்துவ நாட்டிற்கு கூட அப்படியான சாத்தியங்கள் இருப்பதாக கூறவில்லை. 1847ல் கம்யூனிஸ்ட் அறிக்கை எழுதப்பட்டதிலிருந்து 70 வருடங்களின் பின்னர் அக்டோபர் புரட்சியின் வெற்றி வரையில் மார்க்சிச இயக்கத்தை வழி நடத்தும் கோட்பாடு, சோசலிசத்தின் சாதனையானது அனைத்து நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் ஐக்கியப்பட்ட சர்வதேச முயற்சிகளின் மூலமாக உலக முதலாளித்துவத்திற்கு மேலாக அவர்களின வெற்றியிலேயே தங்கியுள்ளது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.




போல்ஷேவிக் கட்சியின் மத்திய குழு உறுப்பி

இவ்வாறாக ஸ்டாலின், புக்காரின் வழங்கிய உற்சாகத்துடன் சோசலிசத்தை ஒரு தனி நாட்டில் அமைக்க முடியும் என்றார். அவரின் பிரகடனம் மார்க்சிச தத்துவத்தை அடிப்படையிலேயே தகர்ப்பதாக இருந்தது. அதை அவர் புரிந்திருக்காவிட்டாலும் ஸ்டாலின் நெறிப்படுத்திய கருத்துக்கள் வளர்ச்சி அடைந்து வரும் அதிகாரத்துவத்தின் கருத்துக்களாகும். அது சோவியத் அரசை உலக

(21ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி: மார்க்சிசத்தின் உன்னதபடைப்பு

பகுதி.2

(20ம் பக்கத் தொடர்ச்சி)

சோசலிச புரட்சியை தொடங்குவதற்கான தள மாக, கொத்தளமாக பார்க்க வில்லை. ஆனால் அதன் வருமானங்களும, சலுகைகளும் தங்கியுள்ள தேசிய அத்தி வாரமாக பார்த்தது.

ஸ்டாலினிச பிரிவு உலகப் புரட்சி குறிக்கோளை திடீரென்று கைவிடவில்லை. அது இடதுசாரி எதிர்ப்பியக்கத்தின் விமரிசனங்களை குற்றச் சாட்டுகளை ஆத்திரத்துடன் எதிர்த்தது. இருந்த போதிலும் தனி ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற தத்துவ பிரச்சாரம் சோவியத் அரசாங்கத்தின் சர்வதேச கொள்கையிலும் கமின்டானின் (மூன்றும அகிலத்தின்) பங்கிலும் ஒரு ஆழமான மாற்றத்தை குறித்தது ஏகாதிபத்திய இராணுவங்களின தலையீட்டினால் சோவியத் யூனியன் தூக்கி விசப்படாதிருப்பின் சோவியத் யூனியனில் சோசலிசத்தை அடைய




ளர்கள்

முடியும் என்று ஸ்டாலினிஸ்டுகள் கூறுனார்கள், இதிலிருந்து தொடர்வது சோவியத் சோசலிசத்தை அடைவதற்கு உலக ஏகாதிபத்தியத்தை தூக்கி விச வேண்டியதில்லை, ஆனால் ராஜதந்திர முறைகளில் அதனை நடுநிலைப் படுத்தினால் போதுமானது என்பதாகும்.

சோவியத் யூனியனுக்கும் முதலாளித்துவ அரசுகளுக்கும, இடையிலான ராஜதந்திர உடன்படிக்கைகளை கொள்கை அளவில் இடதுசாரி எதிர்ப்பியக்கம எதிர்க்கவில்லை. டிராட்ஸ்கியின் அரசியல் செல்வாக்கின் உச்சகட்டத்தில் ராஜதந்திர துறையில் சோவியத் யூனியன் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்தது. இதில் மிகவும் குறிடபிடத்தக்கது 1922ல் ராப்பல்லாவில் தடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் வெற்றிகரமான முடிவாகும். எவ்வாருயினும் இப்படியான உடன்படிக்கைகள் சோவியத் ரஷ்யாவினால் வெளிப்படை யாகவே தந்திரோபாய வளைவு நெளிவுகள் என்று கூறப்பட்டது. அதனுடைய நோக்கம் சர்வதேச பாட்டாளி வர்க்கம் நேரடியாக சோவியத் யூனியனுக்கு உதவி செய்யவரும வரையில் அதனுடைய நிலைப்பாட்டை ஸ்திரமாக்கி வைத்திருப்பதாகும. தொழிலாளர் அரசின் எதிர்காலம் சர்வதேச சோசலிசத்துடன் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளது என்பதை யாவரும் அறிந்திருந்தார்கள்– அதற்கும் மேலாக சோவியத் யூனியனின் ராஜதந்திர முயற்சிகள் உள்ளூர் கம்யூனிஸ்ட் கட்சிகளின மேல் எந்த கடமைப் பாட்டையும் திணிக்கவில்லை; உள்ளூர் கட்சிகளின் பிரதானமான குறிக்கோள் தொழிலாள வர்க்கதின் சுதந்திரமான புரட்சிகர நடவடிக்கையை அதி உயர்ந்த மட்டத்திற்கு வளர்ச்சி பெறச் செய்தல் ஆகும்.

## அகிலத்தின் மாற்றம்

ஆனால் சோவியத் அதிகாரத்துவத்தின் செல்வாக்கின் கீழ அகிலத்தின் பாத்திரம் மாற்றியமைக்கப் பட்டது. புதிய தத்துவமான ''தேசிய சோசலிசம'' சீக்கிரமாகவே கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூல உபாயத்தையும் தந்திரோபாயத்தையும் பாதிக்க ஆரம பித்தது. 1925ல் அனுபவமில்லாத பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், ஆங்கில-ரஷ்ய குழுவில் பங்கு பற்றிய தொழிற்சங்க அதிகாரிகளுக்கும இடையில் உருவாக்கப் பட்ட சந்தர்ப்பவாத கூட்டு ஸ்டாலினிஸ்டுகளால் ஊக்குவிக்கப்பட்டது. அது இப்படியான செல்வாக்குள்ள அதிகாரிகளின் ஆதரவு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சோவியத் எதிர்ப்பு கொள்கையை பலவீனப்படுத்தும என்ற எதிர்பார்ப்பில செய்யப்பட்டது' அதைப் போன்றகணிப்புகளே 1925க்கும 1927க்கும் இடையில சியாங்கேசேக்கின் முதலாளித்துவ தேசிய அரசாங்கத்திற்கு அடிபணிந்து செயல்படும்படி சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஸ்டாலின வலியுறுத்தியதற்கான காரணங்களில் ஒன்ருகும். இரண்டு சம்பவங்களிலும், தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுதந்திரத்தை அழித்து வெளிநாடுகளில் நண்பாகளை உண்டுபண்ணும முயற்சிகள் பேரழிவுக்கு வழி வகுத்தன: தொழிற்சங்கத் தலைவர்களை பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கடசி புகழ் பாடியது 1926 பொது வேலை நிறுத்தத்தை அவர்கள் காட்டிக் கொடுப்பதற்கு வசதியாக்கியது; முதலாளித்துவ கோமின்டாங் தலைமைக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சி அடிகணிந்தமை1927ல் சியாங்கசேக்கின் இராணுவத்தினால் கம்யூனிஸ்ட காரியாளர்கள் சரீர ரீதியாக அழித்து ஒழிக்கப்படுவதற்கு வழி வகுத்தது.

பிரிட்டனிலும், சீனவிலும் ஏற்பட்ட தோல்விகளை சோவியத் அதிகாரத்துவம் நனவு பூர்வமாக விரும்பியது என்று டிராட்ஸ்கி ஒரு போதும் கூறவில்லை. அவர் வலியுறுத்தியதாவது அழிவுகரமான சர்வதேச பின்னடைவுகள் — அவனுடைய பல கொள்கைகளின விளைவாக ஏற்பட்டதை போன்று ஸ்டாலினை ஆச்சரியத்திற்குள்ளாக்கியது. ஆனால் ஸ்டாலினிஸ்டுகளின் அரசியல் நிலைப்பாடுகளின் காரணமாக ஏற்பட்ட இப்படியான தோல்விகளும், மற்றைய தோல்விகளும் சோவியத் யூனியனில் வர்க்க உறவுகளில் ஒரு பற்றிலையான தாக்கத்தை உண்டுபண்ணின சர்வதேச தொழிலாள வர்க்கத்துக்கு ஏற்பட்ட தோல்விகள் சோவியத் தொழிலாளர்களை உற்சாகம் இழக்கச் செய்தன, உலக சோசலிச முன் நோக்குகளிலும. அதன் வளர்ச்சிகளிலும் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையை பலவீனப்படுத்தியது. அதன மூலமாக அதிகாரத்துவத்தை பலப்படுத்தியது, டிராட்ஸ்கியினுல மிகத் தெளிவாக முன் கூட்டியே காணக் கூடியதாக இருந்த 1927 மே சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அழிவு தற்செயலானதல்ல. இது இடதுசாரி எதிர்ப்பியக்கத்தின் அரசியல் தோல்விக்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து அது வெளியேற்றப்படுவதற்கும் வழி வகுத்தது இதைத் தொடர்ந்து சில மாதங்களுக்குள் எதிர்ப்பியக்கத்தின் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சோவியத் யூனியனின் தூரப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர் சீன எல்லையோரத்திலுள்ள அல்மா அட்டா எனப்படும் இடத்துக்கு டிராட்ஸ்கியை கடத்தினர். ஒரு வருடத்துக்கு பின்னர் ஜனவரி 1929ல் துருக்கி கடற்கரையோரப் மகுதியிலுள்ள பிரின்கிபோ எனப்படும் தீவுககு டிராட்ஸ்கி சோவியத் யூனியனிலிருந்து வெளியேறறப் பட்டார். டிராட்ஸ்கியின வெளியேற்றம் சோவியத் யூனியனில் இடதுசாரி எதிர்ப்பியக்கத்தின் நடவடிக்கைகள் வளர்ச்சி அடையும் சாத்தியதனத குறைக்கும் என்று ஸ்டாலின் எண்ணினன. ஆனல் உலக கவனததை ஈாககக்கூடிய டிராட்ஸகியின் திறமையை அவன் குறைத்து மதிப்பிட்டான் அதிகாரங்களை அவரிடமிருந்து பிடுங்கிய போதிலும் உலக வரலாறறில் மகத்தான புரட்சியின் அறிவு ஜீவியும் அதனை உணர்வு பூர்வமாக தன்னுள்ள கொண்டிருந்தவரும் டிராட்ஸ்கி தான். ஒரு அதிகாரத்துவ இயந்திரத்தை பிரதிநிதித்துவம செய்து அதிலேயே தங்கியிருந்த ஸ்டாலினுக்கு நேர் எதிராக டிராட்ஸ்கி ஒரு உலக வரலாற்று தத்துவத்தை உட்கொண்டிருந்தார், அது அவருடைய எழுத்துக்களின் மூலமாக அதன் மிகத்திறமை வாய்ந்த, கலாச்சாரம் நிறைந்த தன்மையை வெளிப் படுததியது. சோவியத் யூனியனுக்குள்ளே கூட டிராட்ஸ்கியின் சொற்கள் சீல்வைககப்பட்ட எல்லைகளையும் ஊடுருவிச் சென்று உணர்ச்சி பூரவமான ஆதரவை தூண்டுவதை தடுப்பது ஸ்டாலினிச அரசாஙகத்திற்கு எப்பொழுதுமே சாத்தியமாக இருக்கவில்லை. நாடு கடத்தப்பட்டதால் உருவாக்கப்பட்ட கஷ்ட நிலைமைகள் மத்தியிலும் டிராட்ஸகியின் பேனவிலிருந்து ஊறறெடுத்த முடிவில்லாத அருவியைப் போன்ற அரசியல் ஆய்வுகள், மற்றும் அதிக எண்ணிக்கையிலான கடிதத தொடர்புகள இவை அனைத்துமே இடதுசாரி எதிர்ப்பியக்கத்தை ஒரு சர்வதேச இயக்கமாக மாற்றியது.

டிராட்ஸ்கி நாடு கடத்தப் பட்ட முதல் வருடங்களில் சர்வதேச இடதுசாரி எதிர்ப்பியக்கம் கம்யூனிச அகிலத்தினுள். அதனை ஒரு பிரிவாக— அது சட்ட விரோதமாக இருந்தபோதிலும் கூட அவ்வாறு கருதியது. ஒரு புதிய அகிலத்தைக் கட்ட வேண்டும் என்று அது அழைப்பு விடுக்கவில்லை. ஆனல் கம்யூனிச அகிலத்தையும், அதன் தேசிய பிரிவுகளையும் சீர்திருத்தம் செய்வதற்கு போராடியதும் தொழிலாள வர்ககதின் மிக நலவான பகுதியின் அரசியல் வீடாக இருந்து வந்த கம்யூனிஸ்ட் கட்சிகளை ஒரு மார்க்சிச வேலைத்திட்டம் பக்கம் திருப்பும் சாத்தியத்தை நிரந்தரமாக கைவிட டிராட்ஸ்கி மறுத்தார். சோசலிசப் புரட்சியின் கருவியாக கம்யூனிச அகிலம் செயல்படுகின்றதென்று நம்பி அதில சேர்ந்த நூறு ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை நோக்கியே டிராட்ஸ்கியின் எழுத்துககள் அமைந்தன.

## பாசிசத்திற்கு எதிரான போராட்டம்

கம்யூனிச அகிலத்தை (கமின்டானை) திருத்த சர்வதேச இடதுசாரி எதிர்ப்பியக்கம் நடத்திய போராட்டம் ஜெர்மனியில் மிகப்பெரும் அரசியல் அவசரத்தை பெற்றது, அங்கே தொழிலாள வர்க்கம் பாசிச அபாயத்தை எதிர் கொண்டிருந்தது. ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின மிகப் பிரமாண்டமான சக்தி இருந்தபொழுதிலும் அதனுடைய பரந்த இயக்கங்களின கொள்கைகள் காரணமாக அது தவருக வழி நடத்தப்பட்டு செயல் இழந்து போனது. சமூக ஜனநாயக வாதிகள் தம்மை நாஜிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ள முதலாளித்துவ அரசிலும் அதன் வெய்மர் அரசியலமைப்பிலும் பரிதாபகரமாக தங்கியிருந்த அதே வேளை, பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் அனைத்து தொழிலாள வர்க்க அமைப்புகளின் ஐக்கியத்திற்கு போராட ஸ்டாலனிஸ்டுகள் மறுத்தனர். ஸ்டாலின் வழங்கிய உற்சாகத்துடன் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி, சமூக ஜனநாயகத்திற்கும் நாஜிக் கட்சிகளும் இடையில் அடிப்படையான வேறுபாடு எதுவும் இல்லை என்றும் உண்மையில் முன்னையது ''சமூக பாசிஸ்டுகள்'' என்றும் கிரிமினல் தன்மையான மேலெழுந்தவாரியான சிந்தனையுடன் கூறியது. அதனல் பாசிச குண்டர்களுக்கு எதிராக தொழிலாள வர்க்க இயக்கத்தை பொதுவாக பாதுகாக்க சமூக ஜனநாயகத்துடன்கம்யூனிஸ்ட் கட்சிஒரு' ஐக்கிய முன்னணி'' யில் சேருவதை அனுமதிக்க முடியாது என்று ஸ்டாலினிஸ்டுகள் எடுத்துஉரைத்தனர் பிரின்கிபோவிலிருந்து டிராட்ஸ்கி, ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி காரியாளர்களுக்கு முக்கிய அவசர வேண்டுகோள்களை விடுத்தார். அவர்களுடைய தலைவர்களின் கொள்கைகளை மாற்றி அமைத்து நாஜிகளுக்கு எதிராக ஐக்கிய முன்னணியை செயல்படுத்துவதன் மூலமாக பேரழிவை தடுக்கும்படி அழைப்பு விடுத்தார்,

அவர் எழுதியதாவது ''தொழிலாள கம்யூனிஸ்டுகளே! நீங்கள் நூறு ஆயிரம், லட்சமாக இருக்கிறீர்கள்; நீங்கள் எந்த இடத்திற்கும் செல்ல முடியாது: உங்களுக்கு போதுமான அளவு கடவுச் சீட்டுகள் கிடையாது. பாசிசம் ஆட்சிக்கு வருமாயின் அது ஒரு பயங்கரமான டாங்கியைப் போல உங்கள் மண்டை ஓடுகள்மீதும் முதுகெலும்புகளின் மீதும் மிதித்துச் செல்லும்; உங்கள் விடுதலை தயவு தாட்சண்யமற்ற போராட்டத்தில்தான் இருக்கிறது. சமூக ஜனநாயக தொழிலாளர்களுடன் ஏற்படுத்தும் ஒரு போராட்ட ஐக்கியம் தான் வெற்றியை கொண்டு வரும், துரிதமாக செயலாற்றுங்கள்! தொழிலாளர் கம்யூனிஸ்டுகளே, உங்களுக்கு மிகக் குறைந்த அளவு நேரம் தான் விடப்பட்டிருக்கிறது'' (''பாசிசத்திற்கு எதிரான ஒரு தொழிலாளர் ஐக்கிய முன்னணிக்கான'' ஜெர்மனி, 1931—32 நியூயார்க். பக்கம் 38)

ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி அதன் கொள்கையை மாற்றி நாஜிகளின் முன்னேற்றத்திற்கு எதிராக ஐக்கியப்பட்ட போராட்டத்தை முன்னெடுக்க மறுத்தது. இவ்வாருக, ஜனவரி 31, 1933ல் ஒரு குண்டு கூட செலவழிக்காமல் ஹிட்லர் ஆட்சிக்கு வந்தான். ஒரு சில மாதங்களுக்குள், ஐரோப்பாவிலேயே மிகவும் பெரியதும், மிகச் சக்தி வாய்ந்ததுமான ஜெர்மன் தொழிற்சங்க மற்றும அரசியல் இயக்கங்கள் அனைத்துமே சட்ட விரோதமானவை என்று பிரகடனம் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன முன்கண்டிராத இந்த அழிவின் முன்னிலையில் கம்யூனிஸ்ட் அகிலம் ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் அது பின்பற்றி வந்த கொள்கைகள் சரியானவை என்றும் அது தோல்விக்கு எந்தப் பொறுப்பும் கிடையாது என்று கூறியது. டிராட்ஸ்கியை பொருத்தவரையில் ஜெர்மன் தொழிலாள வர்க்கத்தின் தோல்வி—உலக வரலாற்று தன்மை கொண்ட ஒரு சம்பவமாகும். 1914ல் முதலாவது உலக யுத்தத்தின் தொடக்கத்தில் யுத்த செலவினங்களுக்கு சமூக ஜனநாயகவாதிகள் ஆதரவாக வாக்களிதது, இரண்டாம் அகிலத்தின வீழ்ச்சியை குறித்ததைப் போல் ஜெர்மன தொழிலாளர் இயக்கத்தின் பயங்கரமான பல்டிக்கு ஸ்டாலினிஸ்டுகளின் பங்கு மூன்றும் அகிலத்தின் வீழ்ச்சியை குறித்தது. ஜெர்மன தொழிலாள வர்க்கத்தின் அழிவுகரமான தோல்வியின் முன்னிலையில் ஹிட்லர் ஆட்சிக்கு வருவதை சாத்தியமாக்கிய கம்யூனிஸ்ட்

(தொடரும்)

www.padippakam.com



# லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 51 ஆண்டு நிறைவு

1991 ஆகஸ்ட் 20ம் திகதியுடன் ஸ்டாலினிச அதிகாரத்துவம் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கு இழைத்த மாபெரும் அரசியல் குற்றமான லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலைக்கு 51 ஆண்டுகள் பூர்த்தியாகிறது.

ஜோசப் ஸ்டாலினின் கொலைகார ஜீ.பீ.யூ. ஏஜன்டான ரேமன் மக்காடர் ரெல்ரியோ, 1940 ஆகஸ்ட் 20ம் திகதி ட்ரொட்ஸ்கியின் தலைக்கு கோடரியால் மரண அடி கொடுத்தான்.

இந்தக் கொலை, இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்துச் சரியாக ஒரு வருடத்தின் பின்னர் இடம் பெற்றது. இக் கொலையைத் திட்டமிட்ட எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் நிச இலக்கு என்ன? 'யுத்தங்களதும் புரட்சிகளதும்' இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்று வேலைத்திட்டமான உலகச் சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தை நசுக்கித் தள்ளுவதே. முதலாம் உலக யுத்தம் உருவாக்கிய அழிவுகளால் முக்கிய பல ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர எழுச்சிகள் ஏற்பட்டன. இதன் மத்தியில் லெனினுடன் தோளோடு தோள் கூட்டி நின்று உலக சோசலிசப் புரட்சியின் பதாகையை உயர்த்தியவரும் 1917 ருஷ்ய அக்டோபர் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல இணைத் தலைமை தாங்கியவருமான லியோன் ட்ரொட்ஸ்கியை படுகொலை செய்ய ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான அதிகாரத்துவம் நடவடிக்கை எடுத்தது. இக் கொலையின் மூலம் ஸ்டாலின், ஏகாதிபத்திய முகாமுள் நுழைந்து கொண்டு சோசலிசப் புரட்சிக்கு எதிராகப் போராடும் முக்கிய எதிர்ப்புரட்சி கொலைகாரன் தான் என்பதை ஏகாதிபத்தியத்துக்கு நிரூபித்தான்.

லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலையுடன் சோவியத்யூனியனுள் போல்ஷிவிசத்தின் உரிமைகளை அடியோடு ஒழித்துக்கட்டும் ஸ்டாலினின் இரத்தக் களரி இயக்கம் உச்சக் கட்டத்தை அடைந்தது. 1936-39 மாஸ்கோ பொய் வழக்குகள் மூலம் 1917 புரட்சிக்குத் தலைமை தாங்கிய போல்ஷிவிக் கட்சியின் மத்திய குழுவில் உயிர்வாழ்ந்த அனைவரும் ''ட்ரொட்ஸ்கிச பாசிச ஏஜன்டுகள்'' என்ற சேறடிப்புடன் கொலை செய்யப்பட்டனர். 1928ல் ஸ்டாலினால் சோவியத் யூனியனில் இருந்து நாடு கடத்தப்பட்டு, பிற்போக்கு ஆட்சியாளர்களாலநாட்டுக்கு நாடு கடத்தப்பட்ட போதிலும், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்திடையே இன்னமும் உயிர் வாழ்ந்து கொண்டிருந்த ட்ரொட்ஸ்கியை கொல்ல மரண வலை வீசுவது அதிகாரத்துவத்துக்கு அவசியமாகியது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் இந்தப் பிற்போக்கு விதிமுறையை எதிர்த்த இலட்சக் கணக்கான கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களும் தொழிலாளர்களும் 'ட்ரொட்ஸ்கிச ஏஜன்டுகள்' என்ற பேரில் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டனர். இந்த மாபெரும் படுகொலைகளுக்குப் பலியான பல்லாயிரக் கணக்கானோரின் புதைகுழிகள் சமீபத்தில் 'கண்டுபிடிக்கப்பட்டன'.

இந்தப் பிற்போக்கு இயக்கம், நான்காம் அகிலத்தினை ஸ்தாபிக்கும் பொருட்டு ட்ரொட்ஸ்கியுடன் இணைந்து நின்ற புரட்சியாளர்களை படுகொலை செய்ததோடு தொடர்புபட்டது. 1937 கோடைக் காலத்தில் ட்ரொட்ஸ்கியின் அரசியல் செயலாளராக விளங்கிய இர்வின் வூல்ப் ஸ்பானிய பயணத்தை மேற்கொண்டிருந்த வேளையில் ஜீ. பீ. யூ. ஏஜன்டுகளால் கொலை செய்யப்பட்டார். நான்காம் அகிலத்துக்கு ஆதரவு காட்டி ஜீ. பீ. யூ. பதவியைத் துறந்து வந்த இக்னாஸ் ரீஸ் 1937 செப்டம்பரில் சுவிட்சலாந்தில் படுகொலை செய்யப்பட்டார் 1938 பெப்ரவரியில் ட்ரொட்ஸ்கியின் மகன் லியோன் செடோவ் பாரிஸ் ஆஸ்பத்திரியில் விஷமூட்டிக் கொல்லப்பட்டார். நான்காம் அகிலத்தின் ஸ்தாபக சம்மேளனம் இடம்பெறவிருந்த சமயத்தில் — 1938 ஜூலை — அதன் செயலாளர் ருடோல்வ் கிளமன்ட் பாரிசில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு, கொலைசெய்யப்பட்டதோடு அவரின் சடலம் சேன் நதியில் மிதந்து கொண்டிருந்த வேளையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்ற சோவியத் யூனியனின் அரசியல் அதிகாரத்தினைக் கொள்ளையடித்ததோடு அரச அதிகாரத்தினையும் முழு வளங்களையும் கையாளும் அதிகாரத்தினையும் தமது கைகளில் கொண்டிருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினைப் போலவே உலக ஏகாதிபத்திய சக்திகளும் லியோன் ட்ரொட்ஸ்கி தலைமை தாங்கிய போராட்டத்தில் அச்சமயம் வெளிப்படையாக இணைந்து கொண்டிருந்த ஒரு சில நூற்றுக்கணக்கான புரட்சியாளரைக் கண்டு மரண பீதி கொண்டது. காரணம்: கோடானுகோடி பாட்டாளி வர்க்கத்துக்கு முன்நோக்கினையும் உலக ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தினையும் வழங்கும் உறுதியான சிரேஷ்ட தலைவராக விளங்கியதே. ஆயுள்காலம் பூராவும் புரட்சிகர மார்க்சிஸ்டாக விளங்கிய இவர்: ஏகாதிபத்தியவாதிகளதும், ஸ்டாலினிஸ்டுகளதும் இரத்தக்களரிகளுக்கு மத்தியிலும் தனது படுகொலைக்கு தனது தலைக்கு ஸ்டாலின் விலைபேசி வந்த நிலையிலும் 1938ல் நான்காம் அகிலத்தினை நிறுவி, மனித இனத்துக்கு மாபெரும் பங்காற்றினார். இந்தப் புரட்சிகரப்பணியினால் மார்க்சிசத்தின் தொடர்ச்சியும் உலகத் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பயணப்பாதையும்பேணப்பட்டது. இந்த உண்மையை அன்று ட்ரொட்ஸ்கிஸ்டுகளும் அவர்கள் பக்கம் ஈர்க்கப்பட்டவர்களும் மட்டுமே புரிந்து கொண்டிருந்தனர். ஆனால்




லியோன் ட்ரொட்ஸ்கி படிப்பறையில்

இன்றோ நிலைமை முற்றிலும் மாறுபட்டுள்ளது. ஸ்டாலினிச எதிர்ப்புரட்சிக்காரர்கள் தொடக்கம் திரிபுவாத உதாரிகள் வரையிலான மார்க்சிசத்தை துறந்து ஓட்டம் எடுத்தோர் இதை வெளிவெளியாகவே கூறிக்கொள்கின்றனர். ஆதலால் இந்த உண்மை கோடானுகோடி உலகத் தொழிலாள வர்க்கத்தின் எதிரில் நிரூபணமாகியுள்ளது.

லெனின் ஏகாதிபத்தியத்தை முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் என வரையறுத்தார். முழு ஏகாதிபத்தியமும் காலவதியான கட்டத்தை அடைந்துவிட்டது. முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகள் உக்கிரம் கண்டுள்ளன. உற்பத்திச் சக்திகள் தேசிய அரச எல்லைகளுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்கின்றன. உற்பத்திச் சக்திகளை — தனியார் சொத்து உறவுகளைக் காக்கும் தேசிய அரச எல்லைகளுக்குள் சிறைப்பிடித்து வைக்கும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள்மனித இனத்துக்கு அழிவினை உண்டு பண்ணுகின்றது. ஏகாதிபத்திய 'யுத்தங்களதும் புரட்சிகளதும் சகாப்தம் ஆரம்பமாகி உள்ளது. 1914ல் முதலாம் உலக யுத்தம் வெடித்ததன் மூலம் இந்த உண்மை முழுமனே ருசுவாகியுள்ளது.

யுத்தங்கள் மட்டுமன்றி, தொழிலாள வர்க்க புரட்சிகர எழுச்சிகள் மட்டுமன்றி ருஷ்யாவில் மார்க்சிச முன்நோக்கின் அடிப்படையிலான புரட்சிக் கட்சியின் தலைமையில் பாட்டாளி வர்க்கம் புரட்சியில் வெற்றியும் கண்டது. இதன் மூலம் உலகசோசலிசப் புரட்சிக்கான வழிதிறந்தது.

இந்நிலையிலும் சோசலிசத்துக்கான வரலாற்று நிலைமைகள் இன்னமும் 'பக்குவம்' அடையவில்லை என்ற வாதங்களுக்கு எதிராக ட்ரொட்ஸ்கி ஈவிரக்கமின்றி போராடியதோடு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான நிலைமை 'பக்குவம்' கண்டது மட்டுமன்றி அழுகிக் கெட்டுப் போகவும் தொடங்கியுள்ளதை சுட்டிக்காட்டினார். மனித இனத்தின் வரலாற்று நெருக்கடி புரட்சித் தலைமை நெருக்கடியாக பரிணாமம்' அடைந்துள்ளது என ட்ரொட்ஸ்கி குறிப்பிட்ட அதே பணியைத் தீர்த்து வைக்கும் பொறுப்புக்கு தொழிலாள வர்க்கம் ட்ரொட்ஸ்கியின் படுகொலையின் இந்த 51வது ஆண்டு நிறைவிலும் முகம் கொடுக்கின்றது.

படிப்பகம்

## தனிநாட்டில் சோசலிசம்

பாட்டாளி வர்க்கம் தலைமையின்றி அழிவுள் தள்ளப்பட்டதற்கான மூலம் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டம் கைவிடப்பட்டமையே. ஏகாதிபத்தியத்தின் அழுத்தங்களுக்கும் நாட்டினுள் ஏற்பட்ட அதன் செல்வாக்குகளுக்கும் அடிபணிந்து ஜோசப் ஸ்டாலினும் புகாரினும் சோவியத் யூனியனுள் 'தனிநாட்டில் சோசலிசம்' கொள்கையை முன்வைத்தனர். இந்தவேலைத்திட்டம் மார்க்சிச முன்நோக்குக்கு எதிரான பலத்த தாக்குதலாகும். சிவில் யுத்தம் காரணமாக போல்ஷிவிக் கட்சியின் காரியாளர்கள் அழிக்கப்பட்டதோடு தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களும் களைப்படைந்தனர். இந்நிலையில் எழுச்சி கண்ட அதிகாரத்துவத்தின் மேல் இந்தப் பிற்போக்கு தேசியவாதக் கோட்பாடுகளும் வேலைத்திட்டங்களும் நங்கூரம் பாய்ச்சிக் கொண்டன. 1924 தொடக்கம் தமது உயிர் பலியெடுக்கப்படும் வரை ட்ரொட்ஸ்கி இந்தப் புற்று நோய்க்கு எதிராக ஆவேசத்துடன் போராடினார்.

'தனிநாட்டில் சோசலிசத்தை' கட்டி எழுப்பும் பிற்போக்குக் கோட்பாட்டினை 6 தசாப்தங்களாகக் கடைப்பிடித்துவந்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் சகல குழுக்களும் இன்று அது 'தவறு' என மோசடியான முறையில் ஒப்புக் கொண்டுள்ளன. இந்த ஒப்புதல் மூலம் ஏகாதிபத்தியத்தினை அணைந்து கொண்டு முதலாளித்துவத்தை புனருத்தாரணம் செய்யும் அலுகோசுகளாக இவர்கள் செயற்படுகின்றார்கள். 'தனிநாட்டில் சோசலிச' கோட்பாட்டின் படுபிற்போக்குத் தன்மையை லியோன் ட்ரொட்ஸ்கி எண்ணற்ற தடவைகள் சுட்டிக் காட்டினார். அவர் சோசலிச நிர்மாணம் என்பது தனித் தனி தேசிய பகுதிகளை கூட்டிணைப்பதன் மூலம் ஏற்பட்டு விடாது எனவும் முதலாளித்துவ சமூகத்தின் உற்பத்திச் சக்திகள் நீண்ட காலத்துக்கு முன்பே தேசியஎல்லைகளைத் தாண்டி வளர்ச்சிகண்டு விட்டதால் சோசலிசம் முதலாளித்துவத்தை விட உயர்ந்த கட்டத்தினை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். தேசிய ரீதியில் தனிமைப்பட்ட நிலையில் சோசலிச சமுதாயத்தினைக் கட்டி எழுப்ப முயல்கையில் தற்காலிக வெற்றிகள் என்னவாக இருப்பினும் முதலாளித்துவத்துடன் ஒப்பிடும் போது கூட உற்பத்தி சக்திகளை பின்தங்கிய மட்டத்துக்கு தள்ளுவதாகும். உலகின் ஒரு பாகமான நாட்டின் அபிவிருத்தியின் பூகோள, கலாச்சார, வரலாற்று நிலைமைகளைக் கணக்கிலெடுக்காமல் தேசிய வரம்புகளுள் பொருளாதாரத்தின் சகல துறைகளையும் மூடப்பட்ட அளவுகளுக்குள் பூர்த்திசெய்ய முயல்வதானது பிற்போக்கு கற்பனையைத் கடைப்பிடிப்பதாகும் என லியோன் ட்ரொட்ஸ்கி 'நிரந்தரபுரட்சி' நூலில் எச்சரிக்கை செய்தார்.

ட்ரொட்ஸ்கியின் இந்த எச்சரிக்கைகளை சிறிதும் கணக்கில் எடுக்காத ஸ்டாலினும் அவரது சகாக்களும் சோவியத் யூனியனுள் 'சோசலிசம்' நிர்மாணிக்கப்பட்டாயிற்று எனவும் பிரகடனம் செய்தனர். இந்தப் பொய்யை ஒரு இரு தடவை அல்ல நூறு தடவைகள் அவர்கள் கூறக் காரணம் என்ன? சோவியத் தொழிலாளர்களுக்கும் ஏனைய உலக தொழிலாள வர்க்கத்துக்கும் இடையேயான ஐக்கியத்தை உடைத்து ஏகாதிபத்தியத்தினைக் காப்பதே. சோவியத் யூனியன் முதலாளித்துவத்துக்கும் சோசலிசத்துக்கும் இடையேயான இடைமருவு சகாப்தத்தில் உள்ளது. முதலாளித்துவம் புனருத்தாரணம் செய்யப்படும் ஆபத்துக்கும் அது முகம் கொடுக்கவும் நேரிடும். தொழிலாளி வர்க்கம் தலையிட்டு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினைச் சிதறடித்து, தமது அரசியல் அதிகாரத்தினை மீண்டும் நிலைநாட்டும் நிலையில் மட்டுமே சோவியத் யூனியனின் தனிமைப்படுத்தல் உடைக்கப்பட்டு உலகப் புரட்சிப் பாதை திறக்கும் என ட்ரொட்ஸ்கி தமது வரலாற்றுப் புகழ்பெற்ற 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' என்ற நூலில் தீர்க்கதரிசனமாக 1930பதுகளில் சுட்டிக் காட்டினார்,

கொர்பச்சேவ் தலைமையில் ஸ்டாலினிச அதிகாரத்துவம் செய்யும் முதலாளித்துவப் புனருத்தாரணங்கள் ட்ரொட்ஸ்கியின் இந்த தீர்க்கதரிசனத்தின் சரியான தன்மையையும் வேலைத்திட்டத்தினையும் முழுப்படியே ருசுப்படுத்தியுள்ளது. கிழக்கு ஐரோப்பாவின் ஸ்டாலினிச ஆட்சிகளின் வீழ்ச்சியையும் சோவியத் யூனியனுள் இன்று ஏற்பட்டுள்ள பாரிய நெருக்கடியையும் ''சோசலிசத்தின் வீழ்ச்சி'', 'மார்க்சிசத்தின் தோல்வி' எனக் காட்ட ஏகாதிபத்தியவாதிகள்மட்டுமன்றி அதிகாரத்துவத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் கைக்கூலிகளான 'புத்திஜீவிகள்' எனப்படுவோரும் முயற்சிக்கின்றனர். உண்மையில் ஸ்டாலினிசம் மார்க்சிசத்தையோ அல்லது சோசலிசத்தினையோ பிரதிநிதித்துவம் செய்யவில்லை. மாறாக அவற்றின் எதிரிடையாகும். ஸ்டாலினிசம் ஏகாதிபத்தியத்தின் உயிரை பிடித்து வைக்க செயற்பட்ட கருவியாகும். 'தனிநாட்டில் சோசலிசத்தை' கட்டி எழுப்புவதாக சத்தியப் பிரமாணம்செய்த ஸ்டாலினிச எதிர்ப்புரட்சி அதிகாரத்துவத்தின் சகல எடுபிடிகளும்- கொர்பச்சேவ், கெனயாட், யனாயேவ் மட்டுமன்றி ஏகாதிபத்திய காலடி நக்கலில் முன்னணியில் நின்று கொண்டுள்ள பொறிஸ் யெல்ட்சினும் இன்றைய சோவியத்நெருக்கடிக்கு பொறுப்பாளி.

(23-ம் பக்கம் பார்க்க)

# லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலையின் 51 ஆண்டு நிறைவு

(22-ம் பக்கத் தொடர்ச்சி)

சோவியத் யூனியனையும் கிழக்கு ஐரோப்பாவையும் பீடித்துள்ள நெருக்கடி உலக ஏகாதிபத்தியஅமைப்பினைம் பீடித்துக்கொண்டுள்ளநெருக்கடியின் ஒரு பக்கம். தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்கள் உலகப் பொருளாதாரத்தினை முன்னொரு போதிலும் இல்லாத விதத்தில் ஒன்றிணைத்து விஸ்தரித்துள்ளது. இந்த அபிவிருத்திகள் முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை உக்கிரமாக்கியுள்ளன. உலகப் பொருளாதாரத்தினை தமக்கிடை பங்கிட்டுக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகள் மீண்டும் ஆளுக்காள் மோதிக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளனர். இந்த விதத்திலேயே உற்பத்திச் சக்திகள் உற்பத்தி உறவுகளுடன் உக்கிரமாக மோதிக் கொள்ளும்நிலையை எட்டியுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏகாதிபத்தியஅமைப்பினைத் தொடர்ந்து பராமரிக்க ஸ்டாலினிஸ்டுகளின் திட்டவட்டமான தலையீடு அவசியப்பட்டது. இதனை அனைத்துலக ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடனேயே செய்ய முடிந்தது. ஆனால் அக்காட்டிக் கொடுப்புக்கள் மூலம் புரட்சிகர கிளர்ச்சிகளைஅடக்கிவைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் இன்று எரிந்து கொட்டியுள்ளது.

கடந்த தசாப்தங்களில் ஜேர்மன்; யப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் உலகச் சந்தையின் பெரும்பகுதியை கைப்பற்றிக் கொண்டுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்தியம் தமது கைகளில் இருந்து நழுவிய பிராந்தியங்களைக் கைப்பற்றும் இராணுவத் தலையீடுகளில் ஈடுபட்டுள்ளது. இது ஏகாதிபத்திய முரண்பாடுகள் வெடித்துச் சிதறும் கட்டத்தினை அடைந்து விட்டது என்பதற்குச் சான்று பகர்கிறது. ஏகாதிபத்தியவாதிகள் கோஷ்டி கோஷ்டியாக பிரிந்து உலகச் சந்தையை மீண்டும் கூறுபோடும் தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மூன்றாம் உலக யுத்தம் காலனிமயமாக்கல் ஆபத்து தலைநீட்டியுள்ளது. ஈராக் யுத்தம் இந்த புதிய காலகட்டம் ஆரம்பமாகியுள்ளது என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டு. உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட ஆழமான மாற்றங்கள் 'தனிநாட்டு' வேலைத்திட்டங்களை சிதறடித்துள்ளது. ஸ்டாலினிசம் அதன் தர்க்க ரீதியான முடிவை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. சோவியத் ருஷ்யாவில் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்து வரும் ஸ்டாலினிஸ்டுகள் ஏகாதிபத்தியத்தின் புதிய நலன்களுக்கு சேவை செய்கிறார்கள் சோவியத் யூனியனை துண்டுதுண்டுகளாக கூறுபோடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அவர்கள் எதிர்கால முதலாளிகளாகத் தம்மை அடையாளம் காட்டிக் கொண்டுள்ளனர். இன்றும் கூட ஏகாதிபத்தியவாதிகள் சோவியத் யூனியனை தமது காலனிகள் என்ற நோக்கில் இருந்தே அணுகிவருகிறார்கள்.



ருஷ்ய சுரங்கத் தொழிலாளர்கள்.

ஸ்டாலினிசத்துக்கு எதிரான போராட்டம் இனிப் பொருந்தாது என 1950பதுகளில் பிரகடனம் செய்த பப்லோவாதிகள் நான்காம் அகிலத்தினை நிர்மூலமாக்கும்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இன்றைய சோவியத் யூனியனின் நெருக்கடியுடன் அவர்கள் உரிய முறையில் ஸ்டாலினிசத்தின் பிற்போக்கு அரசியலிற்கு முண்டு கொடுக்கின்றனர். தொழிலாள வர்க்கத்தின் புரட்சித் தலைமை நெருக்கடியை தீர்ப்பதைநிராகரித்து மைக்கேல் பப்லோவும் ஏர்ணஸ்ட் மண்டேலும் உலகம் 'சோசலிச முகாம்' 'முதலாளித்துவ முகாம்' எனப் பிரிந்துள்ளதாகக் கூறி. ஸ்டாலினிசக் கட்சிகளுள் நான்காம் அகிலத்தினை கரைத்துவிடும் யோசனையை முன்வைத்தனர், மண்டேல் தமது அனைத்துலக சகாக்களுடன் சேர்ந்து கொர்பச்சேவின் முதலாளித்துவ புனருத்தாரண நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தார். இந்தவேலை திட்டத்துக்கு ஆதரவு தரும் பொருட்டு ட்ரொட்ஸ்கிசத்தின் பெயரையும் வெட்கக் கேடான முறையில் பயன்

(27ம் பக்கம் பார்க்க)

## மத்திய வங்கி ஊழியர் சங்க தேர்தலில்

# அனைத்துலக வேலைத்திட்டத்துக்கு நூற்றுக்கணக்கானோர் ஆதரவு

மத்திய வங்கி ஊழியர் சங்க தேர்தலில் புரட்சிகர அனைத்துலகவாத வேலைத்திட்டத்தினை முன்வைத்துப் போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக குழுவினைச் சூழ நூற்றுக்கணக்கான தொழிற்சங்கத்தினர் அணிதிரண்டனர். பு. க. க. குழுவுக்கு இவ்வாண்டு தேர்தலில் கடந்த ஆண்டினைவிட சுமார் 150 வாக்குகள் மேலதிகமாகக் கிடைத்ததோடு உப - தலைவர், இணைச் செயலாளர் பதவிகளும் கிடைத்தன. செயற்குழு உறுப்பினர்களாக இருவர் தெரிவு செய்யப்பட்டனர்.

1985ல் அரசியல் காரணங்களுக்காக யூ. என். பி. அரசாங்கத்தின் கட்டளையின் பேரில் மாஜி. மத்திய வங்கி ஆளுனரால் நவசமசமாஜக் கட்சித் தலைவர்களின் ஆதரவுடன் சேவைநீக்கம் செய்யப்பட்ட தோழர். ரீ. என். நிஹிஷான் இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 572 வாக்குகள் கிடைத்ததோடு இந்நடவடிக்கைமூலம் அங்கத்தவர்கள் நிர்வாகத்தின் ஆளுமையை சவாலுக்கு தள்ளாக்கி உள்ளனர், பொதுச் செயலாளர்ப் போட்டியிட்ட எச். எம். பி. ஹேரத்துக்கு 298 வாக்குகளும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட எம். ஜி. கிரிபண்டாவுக்கு 290 வாக்குகளும், பொருளாளர் பதவிக்குப் போட்டியிட்ட தோழர். டபிள்யூ. ஜயவீரவுக்கு 278 வாக்குகளும், உப-தலைவராகப் போட்டியிட்ட பலங்கசிங்கவுக்கு 292 வாக்குகளும் கிடைத்ததோடு ஆர். எம். கே. ரத்னாயக்கா 869 வாக்குகள் பெற்று செயற்குழுஉறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சங்கத்தின் முக்கிய பதவிகளுக்குப் பாய்ந்து கொண்ட நவசமசமாஜ கட்சி உறுப்பினர்கள் தலைமையில் சந்தர்ப்பவாதிகள் ஜூலை 8ம் திகதி இடம்பெற்ற ஆண்டுப்பொது கூட்டத்தில் பெரும் சவாலுக்கு முகம் கொடுத்தனர். அங்கத்தவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்படாமையையும் நிர்வாகத்தின் எதிரில் அடிபணிந்து போனமையையும் அங்கத்தவர்கள் பு. க. க. குழுவுடன் சேர்ந்து வன்மையாகக் கண்டனம் செய்தனர். அத்தோடு இப்பிரேரணைகளை வெற்றி கொள்ளும் வகையிலான வேலைத்திட்டத்தினை இரண்டு கிழமைக்குள் தலைமைப்பீடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கோரிய அங்கத்தினர்கள் அதுவரை ஆண்டுப் பொதுக் கூட்டத்தினை ஒத்தி வைத்தனர்.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினுள் ஏற்பட்டுள்ள இந்த அபிவிருத்திகள் முதலாளி வர்க்கத்தின் தாக்குதல்களுக்கும் சந்தர்ப்பவாதிகளின் காட்டிக் கொடுப்புகளுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தினுள் வளர்ச்சி கண்டு வரும் கிளர்ச்சியைக் காட்டுகின்றன. அத்தோடு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் முன்வைத்துள்ள வேலைத்திட்டத்துக்கு தொழிலாள வர்க்கத்தினுள் கிடைத்து வரும் ஆதரவையும் இவை சுட்டிக்காட்டுகின்றன.

பு. க. க. உறுப்பினர்கள் இம் மகாநாட்டில் 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் பேர்லின் நகரில் கூட்டும் உலக தொழிலாளர் மகாநாட்டுக்குஆதரவு திரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு உலக வங்கி திட்டங்களுக்குப், இனவாத யுத்தத்துக்கும் ஏகாதிபத்திய பயங்கரங்களுக்கும் எதிராக அனைத்து தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் பேராளர் மகாநாட்டினை கூட்டுவதின் அவசியத்தினையும் பு. க. க. உறுப்பினர்கள் வலியுறுத்தினர்,

யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றும் பொதுவேலை நிறுத்தத்துக்குச் செய்யவேண்டிய தயாரிப்பின் அவசியத்தை வலியுறுத்திய பு. க. க. உறுப்பினர்கள் இலங்கை - தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை நிறுவவும் சந்திரசேகரம் உட்பட சகல தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் உட்பட சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய நடாத்த வேண்டிய பிரச்சாரத்தின் அவசியத்தினை தமது வேலைத்திட்டத்தில் சுட்டிக் காட்டினர். இந்த வேலைத் திட்டத்துக்கு நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் ஆதரவு தெரிவித்தமை, ஏகாதிபத்திய - தேசிய முதலாளி வர்க்கத்தின் எதிரில் அடிபணிவதைவிட வேறு மார்க்க மில்லைஎன்ற சகல சந்தர்பவாதத் தலைவர்களுக்கும் - சிறப்பாக நவசமசமாஜக் கட்சித் தலைவர்களுக்கு கிடைத்த பலத்த அடியாகும்.

1964ல் சமசமாஜக் கட்சியினரை முதலாளித்துவ சி. ல. சு. க கூட்டரசாங்கத்துடன் இணையச் செய்து மாபெரும் காட்டிக் கொடுப்புக்கு வழிவகுத்த பப்லோவாத ஐக்கிய செயலகத்தின் ஏர்ணஸ்ட் மண்டேலுடன் நவசமசமாஜக் கட்சித் தலைவர்கள் இணைந்து கொண்டுள்ளனர். இதன் மூலம் 1964 ஐ தாண்டும் பயங்கர காட்டிக் கொடுப்புக்கு நவசமசமாஜ தலைமை தயாராகின்றது, 1987 இந்திய இராணுவ வருகைக்கும், கிராமப்புற படுகொலைகளுக்கும் முண்டு கொடுத்த இவர்கள் இன்று இனவாதயுத்தத்துக்கு ஆதரவு வழங்குகின்றனர்.

இக்காட்டிக் கொடுப்புக்களின் ஆதரவுடன் மத்திய வங்கி நிர்வாகம் இவ்வாண்டு தேர்தலில் இணைச் செயலாளராக தெரிவு செய்யப்பட்ட தோழர் நிஹிஷானை மத்திய வங்கிக்குள் செல்ல முடியாத வண்ணம் தடை விதித்துள்ளது. சாதாரண ஒரு பிரஜை தமது சிவில் உரிமைகளின் பேரில் மத்திய வங்கி கருமங்களை பார்க்க அங்கு செல்லவுள்ள உரிமைகளும் கூட தோழர். நிஹிஷானுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

புரட்சித் தலைமையையிட்டு பிற்போக்கு ஆளும் வர்க்கம் கொண்டுள்ள நியாயமான பீதியை இந்த மத்திய வங்கி சம்பவம் காட்டுகின்றது. இந்த தடைகளை உடன் அகற்றவும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பு. க. க. குழு முன்வைத்த வேலைத்திட்டத்தினை அமுல செய்யும் போராட்டத்திற்கு அணிதிரளும் படியும் 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



### குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் தவிர்க்க முடியாத முடிவு:

# விடுதலை புலிகள் தமிழ் விடுதலை இயக்கத்தை காட்டிக் கொடுக்கிறது

(கடந்த இதழின் தொடர்ச்சி)

— நந்த விக்கிரமசிங்க —



'விடுதலைப் புலி' சந்தேக நபர்கள் என்ற பேரில் கொழும்பில் துப்பாக்கி முனையில் இருத்தப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள்.

விடுதலைப் புலிகள் தலைமையின் இந்த சந்தர்ப்பவாத நிலைப்பாட்டின் தவிர்க்க முடியாத பெறுபேறாக 1980 களின் கடைப்பகுதியில் ஏகாதிபத்திய — முதலாளித்துவ குழுக்களுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளுடாக வட்டமேசை, திம்பு 1987 ஜூலையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டுடன், துரோகத் தொழிலாளர் தலைவர்களின் ஆதரவோடு திணிக்கப்பட்ட இந்திய — இலங்கை உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது.

தமிழ் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இந்திய இராணுவத்தினை தலையிடச் செய்ய ஏகாதிபத்தியவாதிகள் முடிவு செய்தனர். இது தொழிலாளி வர்க்க எழுச்சியும் கிராமப்புற கிளர்ச்சி நிலைமையும் தமிழ் விடுதலைப் போராட்டமும இணைந்து கொள்வதன் மூலம் இலங்கை முதலாளித்துவ ஆட்சிக்கு நிலைமை புரட்சிகர திசையில் பரிணாமம் அடையும் ஆபத்து ஏற்பட்டதால் உருவானது. இந்நிலையில் இந்திய முதலாளி வர்க்க எதிர்ப்புரட்சி நடவடிக்கை பற்றி ஸ்டாலினிஸ்டுகளும், சமசமாஜ கட்சியினரும் விதைத்த-விடுதலைப் புலிகளால் உச்சக் கட்டத்தில் அங்கிகரிக்கப்பட்ட நப்பாசைகள் பேருதவியாக விளங்கின. இந்த எதிர்ப்புரட்சிச் சதியை ஸ்டாலினிச—சமசமாஜ— நவ சமசமாஜ — இ. தொ. கா. துரோகத் தலைவர்களின் ஒத்துழைப்பில்லாமல் நடாத்தியிருக்க முடியாது. இச்சதி தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரக் கிளர்ச்சி எழுச்சியைத் தவிர்த்தது. அதன் மூலம் தமிழ் விடுதலைப் போராட்டம் வெற்றியீட்ட இருந்து வந்த நிலைமைகளையும் நசுக்கித்தள்ளின. ஏன்? இன்றைய சகாப்தத்தில் தேசிய சுயநிர்ணயத்தினை தொழிலாள வர்க்க சோஷலிசப் புரட்சியின் பிரதிபலனாக மட்டுமே கைப்பெற முடியும் ).

## நிரந்தரப் புரட்சி

ஏகாதிபத்திய சகாப்தத்தினதும், 20ம் நூற்றாண்டினதும் முழு அனுபவம் இதுவே. இதனை லியோன் ட்ரொட்ஸ்கி தமது பிரசித்தி பெற்ற நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டில் பின்வருமாறு குறித்து வைத்துள்ளார்:

''3. ஜனநாயகப் புரட்சியினுள் விவசாயப் பிரச்சினைக்கு மட்டுமன்றி தேசிய இனப் பிரச்சினையாலும் பின்தங்கிய நாடுகளில் ஜனத்தொகையில் பெரும்பான்மையினரான விவசாயிகளுக்கு சமத்துவமற்ற இடம் வழங்கப்படுகின்றது. பாட்டாளி வர்க்கம் விவசாயிகளுடன் ஏற்படுத்தும் கூட்டு இல்லாமல் ஜனநாயகப் புரட்சியின் பணிகளை இட்டு நிரப்புவதையிட்டு தீர்க்கமான தலையீட்டைத் தன்னும் செய்ய முடியாது. எனினும் தேசிய — லிபரல் — முதலாளி வர்க்கத்தின் செல்வாக்குக்கு எதிராகச் செய்யும் சளைக்காத போராட்டத்தினைவிட வேறு எந்த விதத்திலும் இவ்விரு வர்க்கங்களுக்கும் இடையே பிணைப்பைக் கட்டி எழுப்ப முடியாது.

''4 பாட்டாளி வர்க்கத்துக்கும் விவசாயிகளுக்கும் இடையே புரட்சிகரப் பிணைப்பினை கம்யூனிஸ்ட் கட்சியினுள் (இன்று நான்காம் அகிலத்தின் கிளைகளுள் — மொழிபெயர்ப்பாளர்) அணிதிரண்ட பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையணியின் அரசியல் தலைமையின் கீழே மட்டுமே கட்டி எழுப்ப முடியும். இதன் கருத்து, விவசாயிகளுடனான பிணைப்பின் அடிப்படையிலும் — அவ்வாறே எல்லாவற்றுக்கும் முதலாக ஜனநாயகப் புரட்சியின் பணிகளை இட்டு நிரப்பும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினுள் மட்டுமே ஜனநாயகப் புரட்சியை வெற்றிக்குஇட்டுச்செல்லமுடியும்.'' (மக்கள் விடுதலை முன்னணியும் வர்க்கத் தன்மையும் — கீர்த்தி பாலசூரிய - 'கம்கறு பாலவத்த' வெளியீடு)

ஆனால் குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகள் தலைமைகளைப் பொறுத்த மட்டில் இவை மூடப்பட்ட காப்பியங்களாகவே உள்ளன.

விடுதலைப் புலிகளின் விதிமுறையானது 1987 அக்டோபரில் இந்தியப் படைகள் ஆரம்பித்த மக்கள் படுகொலைகளுக்கு காரணமாகியது. இந்திய-இலங்கை உடன்படிக்கை வடக்கு - கிழக்கில் ஆயிரமாயிரம் தமிழ் தேசிய இனத்தினரை படுகொலை செய்யவும், கிராமங்கள் நகரங்களை நாசமாக்கவும் கதவினைத் திறந்ததுடன் மட்டும் நின்றுவிடவில்லை. தெற்கில் சுமார் 1 இலட்சம் இளைஞர்களை கொன்றுதள்ள சிங்கள படைகளுக்கும் கதவினைத் திறந்தது. இந்த மக்கட் படுகொலைகளுக்கு மத்தியிலும் பிரபாகரன் 1987 அக்டோபர் 14ல் ராஜிவ் காந்திக்கு பின் வருமாறு எழுதினார். ''தமது அரசியல் தலைவிதியைத் தீர்மானம் செய்யும் ஜனநாயக உரிமையுள்ள ஒரு தேசிய இனத்தின் மீது துப்பாக்கிப் பலத்தின் மூலம் தமது கருத்தைத் திணிப்பது இந்தியா போன்ற ஒரு ஜனநாயக நாட்டின் பண்பாகாது.''

இந்திய முதலாளி வர்க்கம் சம்பந்தமாகவும் அதன் ஏகாதிபத்திய ஏஜமான்கள் தொடர்பாகவும் கிடைத்த இந்த இரத்தம் தோய்ந்த அனுபவங்களின் பேரிலான விடுதலைப் புலிகளின் நடவடிக்கை அதன் குட்டி முதலாளித்துவ வர்க்க அடிப்படைக்குப் பெரிதும் பொருத்தமான பிற்போக்கு உபாயத்தினைக் கொண்டிருந்தது.

இப்போது விடுதலைப் புலிகள் தலைமையானது பல தசாப்தங்களாக தமிழ் தேசிய இனத்தினை நசுக்கி வருகின்றதும், தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனப் படுகொலை யுத்தத்தின் ஒரு பாகமாக இந்தியப் படையை இலங்கைக்கு அனுப்பியதும், தெற்கில் இலட்சக்கணக்கான இளைஞர்களை படுகொலை செய்ததுமான சிங்கள முதலாளித்துவ ஆட்சியுடன் சந்தர்ப்பவாத கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டது. இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் மத்தியில் - 1989 டிசம்பரில் அன்டன் பாலசிங்கம் கொழும்பில் பின்வரும் அறிக்கையை விடுத்தார். ''விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ்ஈழம் கோரிக்கையை எழுப்புவது புத்திசாதுரியமானதல்ல. எவ்வாறெனினும் இன்று ஈழம் பற்றிய பிரச்சினை எழவில்லை.''

இதற்கிடையே ரூபன் போன்ற விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் கொலைத்தலங்களுக்குச் சென்று தொழிலாளர்களை அதிகமாக வேலை செய்யும்படி நெருக்கத் தொடங்கினர். சகல தொழிற்சங்கங்களும் விடுதலைப் புலிகள் தலைமையினை ஏற்றுக் கொண்டு செயல்படவேண்டும் என கட்டளை பிறப்பிக்கப்பட்டது. பிஎப்எல்டி அமைப்பினை நிறுவிய விடுதலைப் புலிகள் தேர்தல்களுக்கும் ஆயத்தமாகியது. இவர்களின் ஆதரவுடன் அரசாங்கம் வடக்கு-கிழக்கில் இராணுவ-பொலிஸ் முகாம்களை அமைக்கத் தொடங்கியது. விடுதலைப் புலிகள் தலைமையின் இப்போக்கு சிறப்பாக தென் மாகாணங்களில் பிரமாண்டமான பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்க்கவும், வட-கீழ் மாகாணங்களில் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான யுத்தத்தின் புதிய கட்டத்தினை ஆரம்பிக்கவும் முதலாளித்துவ அரசாங்கத்துக்குக் கைகொடுத்தது. 1990 ஜூனில் யுத்தத்தின் புதிய கட்டம் ஆரம்பமாகியது. எனினும் புதிதாக ஆரம்பமான யுத்தம், தமிழ் தேசிய ஒடுக்கப்படும் மக்களின் பிரமாண்டமான திடசங்கற்பத்தின் எதிரில் - சிங்கள இனவாத முதலாளித்துவ இராணுவத்திற்கு வெற்றியளிக்கவில்லை. தமிழ் விடுதலைப் போராளிகளிடம் பல தோல்விகள் கண்ட ஆட்சியாளர்கள், தென்மாகாணங்களில் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை யுத்தத்தினைச் சூழ அணிதிரட்டுவது என்பது முன்னரைக் காட்டிலும் கஷ்டமாகியது.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் தமது புரட்சிகரப் பாரம்பரியங்களின் அடிப்படையில் முதலாளித்துவ இனவாத யுத்தத்துக்கு ஆதரவளிப்பதைத் தொடர்ந்தும் பகிஷ்கரித்து வந்தது. 1 இலட்சத்துக்கும் அதிகமான கிராமப்புற ஏழைகளைப் படுகொலை செய்த சிங்கள முதலாளித்துவ இராணுவத்தின் தன்மையை இச்சமயத்தில் நன்கு புரிந்து கொண்டிருந்த கிராமப்புற ஏழைகள், சிங்கள இனவாத இராணுவத்தின் தோல்வியைத் தமது வெற்றியாகக் கருதினர்.

இந்நிலையில் அரசாங்கம், இனவாத யுத்தத்துக்கு தொழிலாள வர்க்கத் தலைவர்கள் வழங்கிய ஆதரவின் மூலமே நின்று பிடித்தது இதனால் அரசாங்கத்துக்கு விடுதலைப் புலிகள் தலைமையை மீண்டும் பிற்போக்கு சமரசத்துக்குள் இழுப்பது பெரிதும் அவசியமாகி வந்தது.

இதற்கிடையே தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் சிங்கள இனவாத ஆக்கிரமிப்புக்குக் காட்டிய திடசங்கற்பம் நிறைந்த எதிர்ப்பும், இந்த ஒடுக்கப்படும் மக்கள் தென்மாகாணங்களின் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களுடன் இணையும் ஆபத்தும் தமது சிறப்பு வர்க்க உரிமைகளைக் காப்பதற்கு முதலிடம் தந்த விடுதலைப் புலிகள் தலைமைகளை சமரசப் பாதையில் வேகமாகப் பயணம் செய்ய வைத்தது.

## மூடிமறைப்பு

இந்த துரோகப் பணியினை அமுல் செய்யும் பொருட்டு விடுதலைப் புலிகள் தலைமைக்கு தமிழ் ஈழம் ஒடுக்கப்படும் மக்களை உலகத் தொழிலாள வர்க்கத்திலிருந்தும் - சிறப்பாக இந்திய - இலங்கை தொழிலாள-ஒடுக்கப்படும்மக்களில் இருந்து தனிப்படுத்தி வைப்பது அவசியமாகியது. இந்த வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக இவர்கள் இஸ்லாம் மதத்தினைச் சேர்ந்த தமிழ் தேசிய இனத்தினரை வடக்கு - கிழக்கில் இருந்து கலைப்பதிலும், சிங்கள பிரதேசங்களில் பாய்ந்து சிங்கள ஒடுக்கப்படும் மக்களைக் கொலை செய்வதிலும் ஈடுபட்டனர்.

இதன் தவிர்க்க முடியாத ஒரு பாகமாக விடுதலைப் புலிகள் தலைமை, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் கொள்கை சார்ந்த போராட்டத்தினை தமிழ் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களிடையே மூடிமறைக்கும் கேவலம் நடவடிக்கைகளில் ஈடுபட்டது. தமிழ் விடுதலைப் போராட்டத்தின் பாதுகாப்புக்கும் அதற்கு சரியான பாட்டாளி வர்க்கப் புரட்சி தலைமையை வழங்கி அதன் வெற்றியை உத்தரவாதம் செய்யவும் உலகத் தொழிலாள வர்க்கத்தின் ஆதரவினை அதன் பாதுகாப்பின் பேரில் அணிதிரட்டவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஒரு தசாப்தத்துக்கும் மேலாகப் போராடி வந்துள்ளது. இதனைப் பூசிமெழுக விடுதலைப் புலிகள் தலைமை முயன்றுள்ளது. 1990 செப்டம்பரில் வெளியான 'விடுதலைப் புலி' பத்திரிகையின் நிச இலக்கு அதுவே:

''சிங்கள அரசு தமிழ் மக்களை அழித்துக்கொண்டுள்ள நிலைமையினுள் சகல சிங்களப்புதினப் பத்திரிகைகளைப் போலவே உலக செய்தி

(26-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

## இளம் சோசலிஸ்..

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை நிபந்தனைகளையும் தூக்கி வீசும் சக்தி கொண்ட ஒரே வர்க்கமான தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும். ஆதலால் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போன்று தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்கள் ஆதரவளிப்பது தேசிய இனங்களின் சுயநிர்ணயத்துக்கும், அதற்காக இடம்பெறும் போராட்டங்களுக்குமே யன்றி தேசியவாத நப்பாசைகளுக்கு அல்ல.

தமிழ் தேசிய இனத்தினை ஒடுக்குமுறையில் இருந்து விடுதலை செய்வதும், கிராமப்புற ஏழைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதும் சிங்கள-தமிழ் தொழிலாள வர்க்கங்கள் இரு தேசிய இனங்களதும் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டிய வண்ணம் யூ. என். பி. அரசாங்கத்தை வெளியேற்றி, இலங்கை—தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நிறுவுவதன் மூலமே சாத்தியமாகும். இதன் பேரில் நான் நாம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் நடாத்தும் போராட்டத்தில் இணையுமாறு சகல தோழர்களையும் வேண்டுகின்றேன்.

## யுவதிகள் அடிமைச் சேவை

சுதந்திர வர்த்தக வலயத்தில் இருந்து வந்திருந்த தொழிலாளி யுவதி கூறியதாவது: ''நாம் காலை 6 முதல் இரவு 8 மணிவரை வேலை செய்ய நேரிடுகின்றது. சில வேளைகளில் தொடர்ந்து 48 மணித்தியாலங்கள் வேலை செய்யவும் வேண்டியுள்ளது. இதன் பேரில் எதுவிதமான மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை. இயந்திரத்தில் சிக்கி விபத்துக்குள்ளானாலும் அல்லது திடீரென சுகவீனமடைந்தாலும் எதுவிதமான ஓய்வும் கிடைப்பதில்லை.

''நிர்வாகம் படிப்படியாக உற்பத்தி அளவைக் கூட்டிச் செல்கின்றது. சில வேளைகளில் அந்த அளவை எட்ட முடியாது. மேலதிக உற்பத்திக்காக மேலதிகக் கொடுப்பனவு இல்லை. 6 மாதங்களின் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கினாலும் பல்வேறு காரணங்களின் பேரில் சேவையில் இருந்து நீக்கப்படுகிறார்கள். அல்லது இடைநிறுத்தப்படுகிறார்கள். மிகவும் ஒடுக்கப்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் இந்த அடிமைச் சேவைக்கு கொணரப்பட்டுள்ளார்கள்.

## குட்டி முதலாளித்துவ....

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தனர்: 'இந்த நாடு (தமிழ் ஈழம்) யாரால் அங்கீகரிக்கப்படும் என்பது ஒரு பிரச்சினையல்ல. இன்னமும் அவ்வாறு செய்யாத எந்தவொரு நாடும் நம்மை வெறுக்க காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் ஏற்கனவே தமிழ் ஈழம் போராட்டம் நியாயமானது என அங்கீகரித்துக் கொண்டுள்ளார்கள். எமக்கு 52 நாடுகளில் கிளைகள் உள்ளன. சில நாடுகளில் எமது கிளைகளை அரசாங்கங்கள் தற்காலிகமாக அங்கீகரித்துள்ளன. நாம் முதலில் இந்நாடுகள் எங்ஙனம் தொழிற்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது எமக்குப் பூரண அங்கீகாரம் இல்லாவிடினும் திருப்திகரமான பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும்.'' 'பூரண அங்கீகாரம் இல்லாவிடினும்', 'திருப்திகரமான பதில்'! இவை கொள்கையற்ற கொடுக்கல் வாங்கல்களின் பாஷையாகும். சுயநிர்ணய உரிமையை ஏகாதிபத்திய — முதலாளித்துவ நலன்களின் பேரில் துண்டாடும் பாஷையாகும். 'விடுதலைப் புலி'யில் வெளியான கட்டுரையை நாம் தொடர்ந்து வாசிப்போம்: 'அரசு, அவர்களின் வர்க்க நலன்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவர்களின் நடவடிக்கையும் அப்படியே.

உலகின் சகல அரசுகளும் நினைப்பது நீதியைப் பற்றி அல்ல, தமது நலன்களை உறுதி செய்யும் பொருட்டு அவர்கள் வேண்டுமானால் தமது பலத்னதயும் பாவிக்கலாம்.

'உலகம் பூராவும்விடுதலைப் போராட்டங்களை அங்கீகரித்துள்ள (காஷ்மீரில்? மணிப்பூரில்? நாகலாந்தில்?) இந்தியா தமிழ் ஈழம் போராட்டத்தினை அங்கீகரிக்காததுடன் மட்டுமன்றி அதை அழிக்க நடைமுறையில் தலையிடவும் செய்கின்றது. நாம் திட சங்கற்பத்துடனும் தியாகத்துடனும் தொடர்ந்து போராடுவோமானால் அவர்கள் ஏதோவொரு தினத்தில் எம்மை அங்கீகரிப்பர் (விளக்கக் குறிகள் எம்மால் இடப்பட்டவை). நாம் தொடர்ந்து போராடிவரின், இலங்கையில் இருந்து எமது சுதந்திரத்தினைப் பேணிக் கொண்டால், நாம் எமது கால்களிலேயே நின்றுகொண்டால், ஏனைய உலகம்எம்மை அங்கீகரிக்கும். மக்கள், சிறப்பாக இந்திய மக்கள் எம்மை அங்கீகரிப்பர். உலக அரசுகள் எமது சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கும்.''

இதன்படி விடுதலைப் புலிகள் இயக்கம் 'தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை' எனக் கூறிக்கொள்வதை எந்த மூலோபாயத்தின் ஊடாக அடையப் போகின்றது? 'உலக அரசுகள்' மூலம்- அதாவது ஏகாதிபத்திய உலக அரச அமைப்புக்களின் 'அங்கீகாரம்' மூலம். தெளிவாகச் சொன்னால் சுரண்டலாளர்களின் 'கிளப்'பில் தமக்கும் ஒரு குட்டி மூலையைக் கேட்டு நிற்கிறார்கள். — தொடரும்.

### அரசியல் குற்றச்சாட்டினால் முதலாளித்துவ நெருக்கடி உக்கிரம்

# பிரேமதாச அரசாங்கத்தை வெளியேற்று!

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராக யூ. என். பி. தலைவர்கள் கும்பல் ஒன்றின் தலைமையில் அரசியல் குற்றச்சாட்டு பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. அரசாங்கத்தினையும் முழு முதலாளி வர்க்கத்தையும் பிடித்துக் கொண்டிருந்த ஆழமான நெருக்கடி வெளிப்பட்டுள்ளது. யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி, எந்தவொரு முதலாளித்துவ முன்னணிக்கோ அல்லது முதலாளித்துவக் கட்சிக்கோ இடமளிக்காமல் இலங்கை-வடக்கு-கிழக்கு மலையக தொழிலாளர்கள் ஏழைகளையும் ஒடுக்கப்படும் மக்களையும் [illegible] சூழ அணிதிரட்ட வேண்டும் எனவும் அதன் மூலம் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை-இலங்கை தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நிறுவும் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் நெருக்கடியால் பொதிந்துகொண்டுள்ள இந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தை தூக்கிவீசும் போராட்டத்தில் இறங்க வேண்டும் எனவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

முன்னர் சி. ல. சு. கட்சியுடனும் நேற்று பிற்போக்கு பிரேமதாச அரசாங்கத்துடனும் வயிறளந்து வந்த சமசமாஜ-கம்யூனிச நவசமசமாஜ - தலைவர்கள் இன்று லலித் அத்துலத்முதலியையும் காமினி திசாநாயக்காவையும் ஜனநாயகத்தின் வீர புருஷர்களாகக் காட்டும் நடவடிக்கையை தொழிலாள ஒடுக்கப்படும் மக்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இதன்மூலம் இத்தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான போராட்டம் வளர்ச்சி பெறுவதையோ அல்லது வளர்ச்சி பெறச் செய்வதையே தவிர்த்து தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை இந்த முதலாளித்துவத் தலைவர்களின் பிடிக்குள் இட்டுச் செல்கிறார்கள். யூ. என். பி. அரசாங்கத்தினை தூக்கி வீசும் அவசியம் கொண்ட தொழிலாள-ஒடுக்கப்படும் மக்கள் இத்தலைவர்களின் துரோக நடவடிக்கையை நிராகரித்து யூ. என். பி. அரசாங்கத்தினை தூக்கிவீசும் புரட்சிகர வர்க்கப் போராட்டப் பாதையில் இறங்க வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு சவால் பெட்டிசத்தின் படி ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அதிகார துஷ்பிரயோகம், ஊழல், கொலை முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகியுள்ளார். இதுவரை பாமுமா இவை அனைத்துக்கும்கூட்டுப் பொறுப்பான அமைச்சர்களும், யூ. என். பி. பாராளுமன்ற உறுப்பினர்களும் இப் பெட்டிசத்தில் கையொப்பம் இட்டுள்ளனர். 113 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ள நிலையில் சபாநாயகர் தமதுஉடன்பாட்டையும் சேர்த்து குற்றச்சாட்டு விசாரணை செய்யப் பொருத்தமானது எனச் சிபார்சு செய்துள்ளார். யூ. என். பி. தலைவர்கள், சி. ல. சு. க. தலைவர்களுடன் மிக அந்தரங்கமான முறையில் இந்த பெட்டிசத்தினை தயார் செய்தனர். இவை அனைத்தும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தைப் பீடித்துக் கொண்டுள்ள நெருக்கடியையும் பிளவுகளையும் எடுத்துக் காட்டுகின்றது.

ஜனாதிபதி பிரேமதாசவுடன் ஒரே இரத்தத் தடாகத்தில் நீச்சலடித்து வந்த காமினி திசாநாயக்க, லலித் அத்துலத் முதலிக்கு திடீரென 'ஜனநாயகம்' நினைவில் பட்டுள்ளது. ஜனாதிபதி பிரேமதாசவின் சர்வாதிகார திசையில் செல்லுதல், மனித உரிமைகளை மீறுதல், அரசியல் எதிரிகளை ஒழித்துக்கட்டுதல் ஆகியனவற்றை நீக்கி 'பாராளுமன்ற ஜனநாயகத்தை' மீண்டும் ஸ்தாபிதம் செய்யும் திசையில் தாம் குதித்துள்ளதாக இவர்கள் கூறிக்கொள்கிறார்கள். இதற்கிடையே கொலைகார பிரேமதாச ஆட்சி மிகச் சிறந்த 'ஜனநாயகத்தை' பராமரிக்கக் கூடிய சர்வாதிகார ஜனாதிபதி முறையை 'வம்சக்காரர்' இடமிருந்து காக்க ஆதரவளிக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண் வீசும் நடவடிக்கைகளாகும்.

முதலாளித்துவ நெருக்கடியின் இன்றைய வெடிப்புக்கு முக்கிய காரணங்கள் இரண்டு முதலாவது: முதலாளித்துவ யூ. என். பி. வர்க்க ஆட்சி சம்பந்தமாக வளர்ச்சி கண்டு வரும் தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பினையிட்டு முதலாளி வர்க்கத்தினுள் ஏற்பட்டுள்ள பீதியும் அதை அடக்குவது எப்படி என்பது பற்றிய உபாய பிரச்சினை. இரண்டாவது: ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டங்களை அமுல் செய்கையில் தமது பொக்கிஷங்களை எப்படி நிரப்புவது என்பது பற்றி ஆளும் வர்க்க கும்பல்களுக்கிடையேயான நாய்ச் சண்டை.

பிரேமதாச கும்பலாகட்டும் அல்லது காமினி திசாநாயக்க-லலித் அத்துலத்முதலி கும்பலாகட்டும் அல்லது சி. ல. சு. க. முதலாளிகளாகட்டும் இவர்களிடையே எந்தவிதமான அடிப்படை வேறுபாடும் கிடையாது. இக்கும்பல்கள் அனைத்தும் கடந்த 14 ஆண்டுகளாக நடாத்தி வந்த இராணுவ - பொலிஸ் ஒடுக்குமுறை ஆட்சியை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கும் சர்வாதிகார ஆட்சியாக்கும் அவசியத்தைக் கொண்டுள்ளன.

'பிரேமதாச எதிர்ப்பு முன்னணியில்' சேர்ந்து 'பாராளுமன்ற ஜனநாயகம்' காக்கும் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்களின் அரசியல் நடவடிக்கைகள் இந்த நிச ஆபத்தினை தொழிலாள- ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்திலுள் மூடிமறைக்கிறது.

www.padippakam.com

# தெரிவுக்குழு: தொழிலாளர் - ஒடுக்கப்படுவோருக்கு எதிரான கூட்டு முன்னணி

யூ. என். பி. தலைமையிலான முதலாளித்துவக் கட்சிகள் சமசமாஜ-கம்யூனிஸ்ட் - நவசமசமாஜக் கட்சித் தலைவர்களின் பூரண ஆதரவுடன் கிளம்பும் போதும் 'பாராளுமன்றத் தெரிவுக்குழு' பிறப்பாக தமிழ் தேசிய இனத்தினருக்குப் பொதுவில் இலங்கை தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஒரு கொலைகாரச் சதி என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதை'யும் எச்சரிக்கை செய்கின்றன.

இந்தத் தெரிவுக் குழு 'தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு யுத்தத்துக்கு முடிவு கட்டப்போவதாக' கிளப்பப்பட்டுள்ள புரளி முற்றிலும் மோசடியானது. உண்மையில் இக்குழுவின் இலக்கு என்ன? தமிழ்-சிங்கள தேசிய இனங்களின் இரண்டினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இரத்தக் களரியை உக்கிரமாக்குவதும் இராணுவ சர்வாதிகார ஆட்சியைத் திணிப்பதுமே. இந்த இலக்கின் ஏகாதிபத்தியச் சார்பு யூ. என். பி. உட்பட முதலாளித்துவக் கட்சிகள், சமசமாஜ - கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்களின் ஆதரவுடன் இந்தக் கூட்டுச் சதியை உருவாக்கி வருகின்றன. இத்துரோகத் தலைமைகள் தொழிலாளர்கள் — ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ந்து எழும் நிலைமையில் சர்வாதிகாரத்தினை தயார் செய்யும் பொருட்டு—முதலாளிகளுக்கு உதவும் பொருட்டு அரசாங்கத்தினுள் நுழையும் நிலையில் உள்ளனர் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எச்சரிக்கின்றது.

ஒரு சில கிழமைகளுக்கு முன்னர் சபாநாயகர் எம். எச். மொஹமட் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண ஒரு யுத்தத்துக்கு முடிவு கட்டவும் அனைத்து கட்சிகளதும் தலைவர்களின் கலந்துரையாடலுக்கான ஒரு பிரேரணையை முன்வைத்தார். இதனை எதிர்க்கட்சியான ஸ்ரீ. ல. சு. க. பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க உத்தியோகபூர்வமான விருத்தில் ஆகஸ்ட் 8-ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். யூ. என். பி— ஸ்ரீ. ல. சு. க. முதலாளித்துவக் கட்சிகளுடன் ஒரே குட்டையில் ஊறிய சமசமாஜ உறுப்பினர் அத்தாவுத செனவிரத்னாவும், நவசமசமாஜ வாசுதேவ நாணயக்காரவும் ஒரே குரலில் 'ஹாய்'போட்டு இத் தெரிவுக்குழுவுக்கு ஆதரவளித்தனர். பாராளுமன்றத்தில் ஒரு உறுப்பினர் இல்லாததால் இந்த 'ஹாய்' கோசத்தில் இணைந்து கொள்ள முடியாது போன குறையை நிரப்பும் பொருட்டு உடன் கூடிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் இந்தக் கொலைகார பொறிக்கிடங்குக்கு தாமும் ஆதரவளிப்பதாகக் கூறும் அறிக்கையை வெளியிட்டனர்.

ஆகஸ்ட் 7-ம் திகதி நடைபெற்ற சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் இந்நாட்டில் புதிய அரசியல் அணிசேர்க்கைக்கு பிரேமதாச 'பாராளுமன்றத் தெரிவுக் குழுவை நியமனம் செய்ய ஜனநாயக அரசியல் சக்திகள் ஒன்றுபடுவதாக இணைந்தது' வரவேற்றதோடு அது எதிர்கால சுபசகாப்தத்துக்கான நல்ல அறிகுறி' என அது குறிப்பிட்டனர்.

ஆனையிறவு இராணுவ 'வெற்றி' பற்றி வாயடித்துக் கொள்ளும் அதே வேளையில் இந்த தெரிவுக் குழு' பிரேரணையை முன்வைத்ததும், நிறைவேற்றிக் கொண்டதும் தமிழ் தேசிய இனத்தினர் மீது திடீரென கருணை பிறந்ததாலா? அல்லது யுத்தச் செலவினங்களால் நசுக்குண்டு வரும் தென்மாகாண ஒடுக்கப்படும் ஏழை மக்களைப்பிட்டு புதிய இரக்கம் ஏற்பட்டதாலா? அல்லது முதலாளித்துவ ஸ்ரீ. ல. சு. க. மங்கள முனசிங்க குறிப்பிடும் 'வேலைத்திட்டத்துக்கு போராடும் இளைஞர்களை காக்கும்' அனுதாபமா தயாமனதாலா? இல்லவே இல்லை.

கொலைகார ஆட்சியாளர்களின் கலக்கத்துக்கு முக்கிய காரணங்கள் இரண்டு. முதலாவது, விடுதலைப் புலி தலைமையின் ஏகாதிபத்தியச் சார்பு நிலைப்பாட்டுக்கு எதிராக வடக்கு கிழக்கில் வளர்ச்சி பெறும் எழுச்சியினால் அரசாங்கத்தின் பலவீனம் அம்பலமாகிறது. இரண்டாவது, ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையின் பேரில் கடந்த ஆறு மாதங்களாக யூ.என்.பி. அரசாங்கம் அமுல் செய்து வரும் வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் எதிர்ப்பு வலுவடைகிறது. இவை பிரேமதாச அரசாங்கத்தினை பீதி கொள்ளச் செய்துள்ளது. இந்நிலையிலேயே அரசாங்கத்துக்கு இரத்தக் களரி நிர்மாணத் திட்டங்களுக்குத்துரோகத் தலைமைகளின் ஒத்துழைப்பு அவசியமாக உள்ளது.

ஆனையிறவு 'வெற்றி'பற்றி குரல் எழுப்பும் அதே சமயம் அந்த இரத்தக் களரி யுத்தத்தின் பிரதம பேச்சாளரான 'ஐலண்ட்' பத்திரிகை அந்த யுத்தத்தில் சுயகோலத்தினை பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது, ''ஆனையிறவில் இருந்து பின்வாங்க விடுதலைப் புலிகளுக்கு தாக்குதல் தொடுத்த போதிலும் 800 ஆட்களைக் காப்பாற்ற ஒரு மாத காலமும் 8000 படைகளும் (உண்மையில் 10,000 படைகள்—ஆ—ர்) பீரங்கிகளும் டாங்கிகளும் அவசியமாகியது என்பதை ஆயுதப் படைகள் நன்குஅறியும். விடுதலைப்புலிகள் பூகோள அமைவின் குறைபாடுகளை அறிந்திருந்ததோடு கிளர்ச்சி அடக்கும் இராணுவ உபாயங்களை அரசினைவிட தெளிவாகக் கண்டு கொள்ள முடிந்தது.''

(சண்டே ஐலண்ட் — 1991 ஆகஸ்ட் 11)

வடக்கு-கிழக்கு மாகாண மக்கள் விடுதலைப் போராளிகளுடன் சேர்ந்து பதுங்கு குழிகள் வெட்டியும் அகழிகள் தோண்டியும் இராணுவத்துக்கு எதிர்ப்புக் காட்டுகின்றனர் என்பதை ஆனையிறவு நெருக்கடிக்கு மத்தியிலும் அரசாங்க இராணுவத் தலைவர்கள் ஒப்புக் கொண்டனர்.

கடந்த 6 மாதங்களுள் அரசாங்கம் இந்தப் பிற்போக்கு அரசாங்கம் அரசாங்க துறையை தனியார்மயமாக்கியும் இலட்சக்கணக்கில் தொழிலாளர்களை வெட்டியும் வருவதோடு வெளிநாட்டு மூலதனத்தின் பாய்ச்சலுக்கு வாய்ப்பான நிலைமைகளை சிருஷ்டிக்கிறது. இத்தாக்குதல்களை உக்கிரமாக்கவும் உலக வங்கியாளர்களுக்கு வாக்களித்துள்ளது. இதற்கான காலக்கெடுவாகவே இவ்வாண்டு ஜூலையில் நடைபெறவிருந்த 'உதவிவழங்கும் நாடுகளின்' கூட்டம் ஜனவரி 1992க்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. இத்தாக்குதல் திட்டத்தில் தோட்டத்துறை முக்கிய இலக்காகியுள்ளது,

## அண்டன பாலசிங்கம்

இந்நிலையில் முழுந்தால் விடுதலைப் புலி தலைவர்களின் காட்டிக்கொடுப்பினை பாவித்து சிக்கலில் இருந்து தலையெடுக்க பிரேமதாச அரசாங்கம் உட்பட முதலாளிகள் முயற்சிக்கிறார்கள். அன்டன் பாலசிங்கத்தின் பேச்சுவார்த்தை அழைப்பு இந்த இலக்கில் எடுத்து வைக்கப்பட்ட காலடியாகும். தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்ய முடியாத ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் கையசைக்கும் திசையில் விடுதலைப் புலிகள் தலைமை பயணம் செய்கிறது என 'தொழிலாளர் பாதை' எச்சரிக்கின்றது.

1987ல் ஏகாதிபத்திய அங்கீகாரத்துடன் இடம்பெற்ற இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு அடிபணிந்து சுயநிர்ணய உரிமைக்கானபோராட்டத்தினைக் கைவிட்ட இவர்கள் மீண்டும் 1989ல் போராட்டத்தை கைவிட்டு பிரேமதாசவின் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். இதன் மூலம் வடக்கில் இருந்து தருவிக்கப்பட்ட ஆயுதப்படைகள் தெற்கில் இலட்சக்கணக்கான ஏழைக் கிராமவாசிகளைக் கொன்றொழித்தது. 1990 ஜூனில் அரசாங்கம் — விடுதலைப் புலிகள் சமரசம் முறிவடைந்ததற்கு காரணம் தலைவர்கள் யூ. என். பி.யுடன் முரண்பட்டுக் கொண்டதாலன்றி வடக்கு — கிழக்கில் இராணுவத்தையும் பொலிசினையும் குவிக்கும் அரசின் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுந்ததே. இன்று விடுதலைப் புலிகள் தலைவர்கள் ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் திரும்பியுள்ளனர்.

இந்தஅபிவிருத்திகள்தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வேலைத்திட்டத்தினை தொழிலாள வர்க்கமே கொண்டுள்ளது என்பதை மீண்டும் ருசுப்படுத்தியுள்ளது. இலங்கை--தமிழ்ஈழம் பிராந்தியங்களில் உள்ள தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் இந்த பாராளுமன்ற தெரிவுக் குழுவை பொறிக்கிடங்கு என இனங்கண்டு நிராகரிக்க வேண்டும். இதற்குமாறாக இவ்விரு பிராந்தியங்களிலும் உள்ள தொழிலாள வர்க்கம், கோட்டானுகோடி இந்திய தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுடன் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி, இலங்கை - தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை நிறுவும் வேலைத்திட்டத்தினைச் சூழ அணிதிரள வேண்டும். வடக்கு கிழக்கில் இருந்து இராணுவத்தைவெளியேற்றவும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்காகவும் பிரச்சாரத்தில் இறங்குவதன் மூலம் இலங்கை தொழிலாள வர்க்கம் வடக்கு — கிழக்கு மாகாண தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுடன் சகோதர பிணைப்பை இறுக்கமாக்க வேண்டும்.

## குட்டி முதலாளித்துவ...

(24ம்பக்கத் தொடர்ச்சி)

தொடர்புச் சாதனங்களும் மனித உரிமை இயக்கங்களும் மௌனம் சாதிக்கின்றன.. சிங்கள பத்திரிகைகள் இந்த அழிவினை கண்டும் காணாதது போல் இருப்பதுடன் மட்டுமன்றி அதற்கு மகிழ்ச்சி ஆரவாரமும் செய்கின்றன. புத்திஜீவிகளும் அப்படியே,

''அனைத்துலகச் செய்தி தொடர்புச் சாதனங்களும் அமைப்புக்களும் இந்த அழிவினை கண்டிக்கவில்லை .?. யுத்த காலத்தில் அவர்கள் ஈழம்பிராந்தியத்துக்குவருகை தருவதும் இல்லை. அரச செய்திகளை வெளியிடும் அவர்கள் அவற்றைக் கூட உரத்த தொனியில் ஒலிக்கிறார்கள். அரச ஒடுக்குமுறையைப் பலப்படுத்தி சிங்கள மக்களைத் தூண்டிவிட செய்திகளை கட்டுப்படுத்துகிறார்கள். இப்பிரதேசங்களுக்கு வெளிநாட்டு நிருபர்களும் வருவதில்லை. அவர்களும்அரசாங்க செய்திகளையே பிரசுரிக்கிறார்கள். எமது போராட்டத்தினை பயங்கரவாதம் என ஒப்புக்கொள்ளும் அவர்கள் இதை உலகம் பூராவும் பிரச்சாரம் செய்கிறார்கள்.

— தொடரும்


## தொழிலாளர் பாதை

**சந்தாதாரர் ஆகுங்கள்!**

அஞ்சல் கட்டணம் உட்பட

''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

1 மாதம் —ரூ. 6.00 3 மாதம் ரூ...—. 12.00

6 மாதம் — ரூ. 36.00 1 வருடம் ...— ரூ. 72.00

பெயர்: ..................................

முகவரி : ..................................

சந்தா காலம் :................ ரூ.......... ...சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசு கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10


கொழும்பு—10, 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை இலக்கம் 90ல். வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால் மஹரகம நாவலவத்தை வீதி 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# சீ-நோர் சீ. எம். யூ. தலைவர்கள்

## தம்புவினால் அலுவலகத்தில் இருந்து வெளித்தள்ளப்பட்டனர்

சீ-நோர் சீ.எம்.யூ. கிளைச் சங்கத் தலைவரையும் உப-தலைவரையும ஜூன் 21ல் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வெளியேற்றி, சீ—நோர் தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் குப்பைக் கூடைக்குள் வீசிய பாலா தம்பு தலைமையிலான தலைவர்களின் கடைகெட்ட துரோக நடவடிக்கையைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதையும்' வன்மையாகக் கண்டனம் செய்கின்றன.

இந்தத் தொழிலாளர் பிரதிநிதிகள், வடக்கில் யூ.என்.பி. அரசாங்கம் நடாத்தி வரும இனவாதப் படுகொலை யுத்தத்தினால் 1990 செப்டம்பரில் இருந்து சம்பளக்கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு, தொழில் உரிமை பேராபத்திற்கு முகம் கொடுத்த நிலைமையிலேயே 1991 மே 19ல் கொழும்பு வந்தனர். சங்கத் தலைமைப் பீடத்துக்கு தமது அவலங்களை எடுத்துக் கூறி, அவர்கள் அனுப்பிய கடிதங்களுக்கு எதுவித பலனும கிடைக்காததைத் தொடர்ந்து, சங்கத்தினை போராட்டத்தில் இறக்கும் எதிர்பார்ப்புக்களுடன் அவர்கள் கொழும்புவந்திருந்தனர். இனவாதப் படைகளின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்தி வந்த குண்டுமாரிகளுக்கு மத்தியில் இப்பிரதிநிதிகள் இதற்கு முன்னரும் இருதடவைகள் சீ. எம். யூ. தொழிலாளர்களதும், மற்றும் தொழிற்சங்கங்களதும் ஆதரவினைத் திரட்டும் பொருட்டு கொழும்பு வந்து சென்றனர். அவர்களின் வருகையைத் தொடர்ந்து சங்கம் மேற்கொண்ட தலையீட்டால் 1991 மார்ச்சில் மட்டும் சீ-நோர் பவுண்டேசன் ரூபா 3000/– ஐ அலவன்சாக தொழிலாளர்களுக்கு வழங்கியது.

வடக்கில் பசி, பட்டினி, மரணத்துக்கு முகம் கொடுத்துள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் ஒரு பகுதியினர் என்ற விதத்தில் பிரச்சினைக்கு தீர்வுகண்டு திரும்புமாறு சீ. எம். யூ. அங்கத்தினர்கள் விடுத்த பணிப்புடன் கொழும்பு சீ.எம்.யூ. தலைமை அலுவலகத்துக்கு வந்த கிளைச் சங்கத் தலைவருக்கும், உப—தலைவருக்கும் தம்புவின் பதில் என்ன தெரியுமா? ''பிரச்சினை பற்றி நடவடிக்கை எடுப்பதால்'', ''யாழ்ப்பாணம் திரும்பு'' என்பதே. தம்புவின் வார்த்தைகளை நிராகரித்த இவர்கள் வழக்கம் போல் தமது பாதுகாப்பினையும், உரிமையினையும் அனுபவித்த வண்ணம் சீ. எம். யூ. வைத் தலையிடச் செய்யத் தலைமைஅலுவலகத்திலேயே தங்கினர்.

தம்பு, தொழிலாளர் தலைவர்களினை ஏமாற்றும் ஒரு செப்படி வித்தையாக கடற்தொழில் அமைச்சுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தின் பிரதியினை விடுதலைப் புலிகள் தலைமையிடம் ஒப்படைக்குமாறு கொடுத்து, அவர்களை சீ. எம். யூ. அலுவலகத்தில் இருந்து வெளியேறி யாழ்ப்பாணம் செல்லுமாறு தம்பு மட்டுமன்றி அவரின் கையாட்களான சீ. எம். யூ. தலைவர் பீ. லியனகே, உப-செயலாளர் ஜெகநாதனும் தினமும் நெருக்கி வந்தனர். தம்பு அமைச்சுக்கு எழுதிய கடிதம், யுத்தத்தினால் உற்பத்தி தடைப்பட்டு சீ-நோர் தொழிலாளர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளதால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் 'பேசித் தீர்வு'காண வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது. முதலாளித்துவ அரசினைக் காக்கும் பொருட்டு, முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு வக்காலத்து வாங்கும் தம்புவின் நடைமுறையைப் பொறுத்தமட்டில் இது முற்றிலும் பொருத்தமானது. ஆனால் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை இரத்தத்தில் மூழ்கடிக்கும் இலங்கை முதலாளித்துவத்திடமிருந்தும் அதன் அரசாங்கத்திடமிருந்தும் தமக்கு எந்தவிதமான தீர்வும் கிடையாது எனவும், ஏகாதிபத்திய - முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பின்னால் இழுபட்டுச் செல்லும் வங்குரோத்துவிடுதலைப் புலிகள் தலைமையால் 'தீர்வு' காண முடியாது என்பதையும் தமிழ் தேசிய இனத்தினைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் தினமும் அனுபவவாயிலாகப் புரிந்து கொண்டு வருகின்றார்கள், யூ.என்.பி. அரசாங்கம் யுத்தத்தினை நிறுத்தாது விடின், அடுத்தது என்ன? சீ—நோர் தொழிலாளர்களின் தலைவிதி என்ன? தம்பு இந்தப்பிரச்சினைகளையிட்டு முற்றிலும் மௌனம் சாதிக்கிறார். இது தம்புவின் பிற்போக்கினையும், மோசடியினையும் எடுத்துக்காட்டுகின்றது.

பக்டரியை மூடும் ஆபத்து வெளிப்பட்ட நிலையில் ஜூன் 20பதாம் திகதி கூடிய சீ. எம். யூ. பொதுச்சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சீ — நோர் பிரச்சினையையும் சேர்த்துக் கொள்வதைத் தம்புவும் அவரது செயற் குழுவும் நிராகரித்தன. சீ-நோர் கிளைச் சங்கப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் சீ-நோர் தொழிலாளர் பிரச்சினை ஆய்வு செய்யப்பட வேண்டும் எனக் கோரி வந்த வேளையில் தம்புவின் கையாளும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை சீ, எம். யூ. கிளைச் சங்க மாஜி செயலாளருமான ஜெகநாதன், பக்டரி தொழிலாளர்கள் நஷ்ட ஈடு வழங்கி வேலை நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும், நஷ்டஈட்டுக்கு காத்துக்கிடப்பதாகவும். கூறினார். இந்நிலையில் சீ-நோர் தலைவர்கள பொதுச்சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சீ-நோர் பிரச்சினை உள்ளடக்கப்படவேண்டும் என எழுத்து மூலம் கேட்டுக் கொண்டனர். இப்போராளிகளின் நடவடிக்கை தம்புவையும் அவரது சகாக்களையும் கிடுநடுங்க வைத்தது.

### குறுக்கு விசாரணை

ஜூன் 20ம் திகதி கூடிய சீ. எம். யூ. செயற்குழுக் கூட்டத்தில் சீ-நோர் தலைவர்களை அழைத்து குறுக்கு விசாரணை நடாத்திய தம்பு, இரண்டு இரவுகளுக்கு மேல் சீ. எம். யூ. அலுவலகத்தில் தங்கக் கூடாது எனக் கட்டளையிட்டார், அத்தோடு பொதுச்சபைக் கூட்டத்தில் சீ-நோர் பிரச்சினையை முன்வைக்க இடமளிக்கப்படும் எனப் பொய் கூறி, அவர்களை அங்கிருந்து வெளியேற்றினார். கூட்டுப்படைகள் தலைமையகத்தில் (ஜூன்21) இடம்பெற்ற குண்டு வெடிப்பினைப் பாவித்து கொழும்பில் இனவாத ஒடுக்குமுறை முடுக்கிவிட்ட அரச படைகள் களத்தில் இறக்கப்பட்ட சமயத்திலேயே இவர்கள் தம்புவினால் வெளியேற்றப்பட்டனர்.

சீ - நோர் தொழிலாளர் தலைவர்கள் பொதுச் சபை உறுப்பினர்களைச் சந்திக்க வேலைத்தலங்களுக்குச் செலவுள்ள தமது தொழிலாளவர்க்க உரிமையைப் பயன்படுத்த, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தோழர்களின் உதவியைப் பெற்றதையும், சீ. எம். யூ. உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு காட்டியதையும் தம்பு 'கிரிமினல்' குற்றங்களாகக் கணித்தார். அத்தோடு இதற்கு எதிராக அவர்களை வேட்டையாடவும் முயல்கிறார். ஆனால் இதே தம்பு, சீ. எம். யூ. தொழிலாளர்களைக் கலந்தாலோசிக்காமல் வியட்னாம் மக்களின் கொலைகாரனான றொபேட் மக்னமாராவைச் சந்தித்தார் 1967 தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின மத்தியில் பிரித்தானிய உயாஸ்தானிகரை, தொண்டமானுடன் சந்தித்தார், பாசிச உறவுகள் கொண்ட ஹென்றி கிசிங்கருடன் 'தேநீர்' கலந்து கொள்ள மேற்கு ஜேர்மன் தூதரகம் சென்றார். சமீபகால உதாரணமொன்றினைக் குறிப்பிடுவதானால், சீ. எம். யூ. தலைவியான விக்கிரம சூரியவை மனித உரிமைகள் பேணுவதற்கான பரிசினை 'ஏகாதிபத்திய கொலையாளியான ஜிம்மி கார்ட்டரிடம் இருந்து பெற்றுக்கொள்ள அனுப்பி வைத்தார். இந்த இலட்சணத்தில் தான் தம்பு சீ-நோர் தலைவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டினை முன்வைத்தார்.

இந்த வேட்டைக்கு எதிராக சகல சீ.எம்.யூ. அங்கத்தினர்களையும் கிளர்ந்து எழுமாறும், சீ—நோர் சீ.எம்.யூ. தலைவர்கள் சீ. எம். யூ தலைமை அலுவலகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைக் கண்டிக்கும் பிரேரணைகளை நிறைவேற்றுமாறும், வடக்கு—கிழக்கிலும் மற்றும் மாகாணங்களிலும் உள்ள தொழிலாளர்களை ஏகாதிபத்திய—முதலாளித்துவ கையாட்களின் தாக்குதலுக்கு எதிராக இணைந்த போராட்டத்தில் ஈடுபடுத்த சீ.எம்.யூ பினுள் பிரச்சாரத்தை ஆரம்பிக்குமாறும் ஏகாதிபத்திய—முதலாளித்துவ அபிலாசைகளுக்கு அடிபணிந்த தலைமையைத் தூக்கி வீசி, தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்காகப் போராடும் தலைமையை கட்டி எழுப்ப இணையுமாறும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

---

# லியொன் ட்ரொட்ஸ்கி படுகொலை . . .

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தினார். இதன் உச்சக் கட்டமாக சோவியத் யூனியன் சஞ்சிகையின் ஆசிரியராக கொர்பச்சேவுடன் இணைந்து கொண்டார். கிழக்கு ஜேர்மனியை ஏகாதிபத்தியவாதிகளிடம் கையளித்த ஸ்டாலினிஸ்டுகளின் புதிய தலைவரான கெய்சியுடன் ஒரே மேடையில் ஏறி, ட்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு தாக்குதல் தொடுத்தார்.

இந்த துரோகிகள் கும்பலுக்கு எதிராகவே 1953ல் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நிறுவப்பட்டது. இதன் மூலம் ட்ரொட்ஸ்கிச முன்நோக்குப் பேணப்பட்டதும் இத்திரிபுவாத துரோகிகளிடம் இருந்து காக்கப்பட்டது 1963ல் அனைத்துலகக் குழுவில் இருந்து பிரிந்து பப்லோவாதிகளுடன் இணைந்த அமெரிக்க உளவுப் படை F.B.I யினால் நிர்வகிக்கப்படும் அமெரிக்க சோசலிசத் தொழிலாளர் கட்சி (S.W.P.) இன்று நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டையும் ட்ரொட்ஸ்கியையும் பகிரங்கமாகத் தாக்கியுள்ளது.

### ஹீலி, பண்டா, சுலோற்றர்

உள்ளிருந்து ட்ரொட்ஸ்கிசத்தினை தாக்கும் நடவடிக்கையில் பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஜெரி ஹீலி மைக்கேல் பண்டா, சுலோற்றர் தலைமை ஈடுபட்டது. சுலோற்றர் சோவியத் தொழிலாள வர்க்கத்தினால் தேசியமயமாக்கப்பட்ட சொத்துக்களைப் பேண முடியாது எனக் கூறி கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தின் முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு ஆதரவளித்து வருகின்றார். ஒரு காலகட்டத்தில் ட்ரொட்ஸ்கிசத்துக்காக நின்று வந்து வலது பக்கம் சென்ற இத் திரிபுவாதிகளின் ஆதரவு இன்று ஏகாதிபத்தியத்துக்கு அவசியமாக உள்ளது. அது ஏகாதிபத்திய நெருக்கடியின் ஆழத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

லியொன் ட்ரொட்ஸ்கியின் போராட்டத்தினை இன்று நான்காம்அகிலத்தின் அனைத்துலகக் குழு உறுதியோடு முன்னெடுத்துச்செல்கின்றது. அத்தவிதத்தில் அதுவே ட்ரொட்ஸ்கிசத்தின் மரபுரிமைகளை பேணுகின்றது. ஏகாதிபத்தியத்தின் புதிய ஏஜன்டுகளை அம்பலத்துக்காட்ட அது நடாத்திய போராட்டத்தில் அந்த ஏஜன்சிகள் தலையெடுத்த புறநிலை மூலங்களை ஆராய்ந்து கண்டுபிடிப்பதில் அனைத்துலகக் குழு முழு வெற்றி கண்டது. அது ஏகாதிபத்தியத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் நெருக்கடியை தீர்க்கதரிசனமாகக் கண்டது. அந்நெருக்கடியை எதிர்கொள்ள தயாராகியது. லியொன் ட்ரொட்ஸ்கி சோவியத் யூனியனில் இருந்து நாடுகடத்தப்பட்ட 61 ஆண்டுகளின் பின்னர் அவரைப் படுகொலை செய்த எதிர்ப்புரட்சியாளர்கள் வாழும் நாட்டின் பாட்டாளி வர்க்கத்தினுள் உலக சோசலிசப் புரட்சி வேலைத் திட்டத்தினையும் அதன் ஒரு பாகமாக எதிர்ப்புரட்சி அதிகாரத்துவத்தினை தூக்கி வீசும் அரசியல் புரட்சி வேலைத்திட்டத்தினையும் எடுத்துச் செல்வதில் அனைத்துலகக் குழு வெற்றி கண்டுள்ளது. ருஷ்ய மொழியில் அனைத்துலக குழு பிரசுரிக்கும் 'நான்காம் அகிலம்' சஞ்சிகைக்கு சோவியத் தொழிலாளரிடையே பேராதரவு கிடைத்துள்ளது. இது சோவியத் யூனியனில் அனைத்துலகக் குழுக்கிளையை நிறுவும் போராட்டமாகும்.

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக உலக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் பணியை உயர்த்துவதில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு மட்டுமே வெற்றி கண்டுள்ளது. லியொன் ட்ரொட்ஸ்கியின் மூலோபாய பணியினை இட்டு நிரப்ப அவரது போராட்டத்தின் மூலம் அணிதிரண்ட மார்க்சிசத்தின் சரித்திரவாளர்களை போராட்டத்தில் இறக்க வேண்டிய காலகட்டத்தினுள் நாம் காலடி வைத்துள்ளோம் 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு பேர்ளினில் நடாத்தவுள்ள உலக தொழிலாளர்களின் மகாநாடு ட்ரொட்ஸ்கியின் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் பிரமாண்டமான நடவடிக்கையாகும். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து ட்ரொட்ஸ்கியின் போராட்டத்தில் சேருங்கள்.

படிப்பகம்

# பேர்லின் உலகத் தொழிலாளர் மகாநாட்டிற்கு DM 4000,- நிதி

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும், காலனித்துவத்துக்கும் எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு 1991 நவம்பர் 16ம்.17ம் திகதிகளில் பேர்லினில் நடாத்த அழைப்பு விடுத்துள்ள உலகத் தொழிலாளர் மகாநாட்டினை வெற்றிகரமாக்க DM 4000,- நிதி திரட்டுவதென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக் கிளை தீர்மானித்துள்ளது.


நான்காம் அகிலத்தின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இம் மகாநாட்டினை கட்டியெழுப்பும் அனைத்துலகப் பொறுப்புக்கும், தோள் கொடுக்கும் பொருட்டு இலங்கை-தமிழ் ஈழம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் கிளர்ந்து எழுவார்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை அம்பலாங்கொடை கூட்டுறவு தொழிலாளர் மகாநாடு (அறிக்கை 18 ம் பக்கம்) நிரூபித்துள்ளது. வரலாற்று ரீதியில் நோக்கின் 1939–1944 இரண்டாம் உலக யுத்தத்தின் போது நான்காம் அகிலத்தின் இந்தியக் கிளையான போல்ஷிவிக் லெனிஸ்ட் கட்சி ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஒரு ஆளோ, அல்லது ஒரு சதமோ, அல்லது ஒரு கருவியோ வழங்காதே என்ற நிலைபாட்டினைக் கடைப்பிடித்தது. இந்நிலைப்பாட்டுக்கு இலங்கைத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து பேராதரவு கிடைத்தது. இப் போராட்டம் தீவின் எல்லையையும் தாண்டிச் செல்லுமோ என பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கிலி கொண்டிருந்ததை அவர்களின் அன்றைய தஸ்தாவேசுக்கள் ருசுப் படுத்தி உள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் இந்திய சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் தோழர்களுடன் இணைந்து பு.க.க. ஆரம்பித்துள்ள இப் போராட்டம் இந்த வரலாற்று பாரம்பரியங்களை மீண்டும் புதுப்பிக்கும், மெருகூட்டும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

உங்களிடம் நிதி திரட்ட வரும் புரட்சி கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களுக்கு நிதி வழங்குவதுடன், தபால் மூலமாக அனுப்புவதாயின் பின்வரும் கணக்கு இலக்கத்திற்கு அனுப்புங்கள்.

Anthony Duralappah Postgirokonto Nr. 646 38 – 701

Bankleitzahl 600 100 70 Postgiroamt 7000 Stuttgart





தொடர்புகளுக்கு

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-BISSINGEN

## இதுவரையிலான எமது பிரச்சாரத்தில்


நா.அ.அ.கு. விஞ்ஞாபனம்

இலக்கு 1000 மொத்தம் 103




தொழிலாளர் பாதைக்கான சந்தா

இலக்கு 300 மொத்தம் 83





DM 257,- இதுவரையில் சேர்க்கப்பட்ட தொகை.

## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடு

ஏகாதிபத்தியத்திற்கும், ஸ்டாலினிசத்திற்கும் எதிராக உலகத் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசப்புரட்சிக்காக அணிதிரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடுகள்.

நாள்தோறும் கூர்மையடையும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளினுல் வெடித்துக் கிளம்பும் வர்க்கப் போராட்டங்களுக்கு ஆயுதபாணியாகுவதற்காக ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்.




## தொழிலாளர் பாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் 'தொழிலாளர் பாதை' மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

பெயர் ______________________

விலாசம் ______________________

______________________

______________ திகதி ________

______ புதிய சந்தா விபரம்.
______ 12 பிரதிகள் DM 26,-

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-BISSINGEN